

# விதைகள்

## பாகம்-6

# விதைகள் - பகுதி.6

என் அப்பாவுக்கு தேவன் இயேசுவின் நாமத்தில் மகிமையுண்டாவதாக. 6 வது பகுதியை எழுத தேவனுடைய ஆவியானவர் உதவி செய்தார்.

பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் ... மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக ... பிரசங்கித்து, உபதேசம்பண்ணி, ... அப். 20:20

...பக்தி விருத்திக்கு ஏதுவான... வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். எபே.4:29

“விதைகள்” என்ற தலைப்பினடியில் நாங்கள் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் சத்தியங்கள், வாசிப்பவர்கள் பக்திவிருத்தியடையவும், தேவ இராஜ்ஜிய வேலைக்காக முயற்சிகள் எடுக்கவும், நித்தியஜீவனை அடையவும், அங்கே பாக்கியங்களைப் பெறவும் ஏதுவுண்டாக்கும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். கர்த்தர் உதவி செய்வாராக.

தேவனுக்கு ஊழியம் செய்வதன் மூலம் ஆத்துமாதாயப் பணி நிறைவேறுகிறது, என்றாலும் ஊழியம் என்பது தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு வைக்கும் ஒரு பரீட்சை **(examination.)** தேவனே பரீட்சை பேப்பரைத் **(examiner)** திருத்துகிறார். பேனாவை **(Pen-ஐ)** உபயோகித்து அல்ல, அக்கினியினால்!

...அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். ... அஸ்திபாரத்தின்மேல் (இயேசு) பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், (வைரம் ... நவரத்தினங்கள்) மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், ... வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். ... கட்டினது நிலைத்தால் கூலியைப் பெறுவான். ... வெந்துபோனால் (?) ... நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; ... 1 கொரி. 3:10–15

"விதைகள்" ஊழியங்களும் இவ்விதமாக சோதனைக்குட்பட்டது; நஷ்டமடையாமல் தப்பி, அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க இந்த 6–வது அத்தியாயத்திற்குள் பிரவேசிக்கிறது. இந்த அத்தியாயத்தில் "புதிய உடன்படிக்கையின் மீதான ஒரு புதிய கண்ணோட்டம்" என்ற தலைப்பில் தேவன் என்னோடு பகிர்ந்துகொண்டதை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் கர்த்தருக்குள் மகிழ்கிறேன்.

தொடர்ச்சியாக வேதத்தில் தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கும் விதைகளைக் குறித்த சத்தியங்களை ஆராய்வது... ஆராய்ந்து கொண்டேயிருப்பது நல்லது. கர்த்தர் இயேசுவின் வருகைக்கு தயாராகவும், தயாராக்கவும் அது பேருதவியாக இருக்கும்.

உங்களது சந்தேகங்கள் – கேள்விகள் – ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**
**நித்தியர் இயேசு ஊழியங்கள்**
5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008

தொலைபேசி: +91-461-23 77 88 9
அலைபேசி: +0-9442466250 & +0-9003456506

Email : sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com

**Our Address:**

**Sis. LATHA DAVID**
**SOVEREIGN JESUS MINISTRIES**
**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST)**
**TUTICORIN-628 008**

**Ph.: +91-461-23 77 88 9**
**Mobile: +0-9442466250 & +0-9003456506**

Email : sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com

## உங்க கதை என்னவாச்சி?:

புத்தகங்களெல்லாம் வரிசை வரிசையாக வந்து கொண்டிருக்கிறது, அதெல்லாம் சரிதான், உங்க கதை என்னவாச்சி? நீங்க ரொம்ப ஒழுங்கா? இப்படிப்பட்ட கேள்விகள் நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் ஆரம்பத்திலிருந்தே இந்த உண்மையை நான் உணர்ந்து தான் எழுதிக்கொண்டிருக்கிறேன் என்பதை உங்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறேன். தேவன் வசனம் தந்தார், ஆவியானவர் விளக்கமும் தந்தார், ஆனால் முதலில் அது என்னைத் தாண்டித்தான் வெளியே வரமுடியும் என்பதை நான் நிச்சயம் அறிந்துதான் இருக்கிறேன்.

"கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது. சங். 12:6

... அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு. சங். 19:11"

மண்குகை என்பது நம்மைக் குறிக்கிறது. உலகத் தோற்றமுதற்கொண்டே கர்த்தருடைய வசனங்கள் கோடானு கோடி தேவஜனங்களால் வாசிக்கப்பட்டு, உள்வாங்கப்பட்டு, ஜீரணிக்கப்பட்ட வசனங்கள்! (மலர்களிலிருந்து **Juice**-ஐ உறிஞ்சும் தேனீக்கள் அதைத் தேனாக மாற்றி வெளியேற்றுவதைப் போல...) ஒவ்வொருவரை விட்டு வெளியேறும்போதும் கர்த்தருடைய வசனங்கள் அதிக வல்லமைபொருந்தியதாக, மகத்துவம் நிறைந்ததாக, அதிக வெளிப்பாடுகளுடன் வெளியேறுகிறது. வேத வசனங்கள் மாத்திரமல்ல, வசனங்களைச் சார்ந்து எழுதப்படுகிற புத்தகங்களும் இதே செயல்பாடுகளுடன்தான் வெளியேறுகிறது. தற்காலத்தில் பெரிதளவான வெளியரங்கமான மாற்றங்கள் எதுவும் என் எல்லைக்குள்ளாக காணக்கிடைக்காதிருக்கலாம். ஆனால் தரிசனம் அவமாய்ப்போவதில்லை, தேவன் நடத்திக் காட்டுவார், காலம் இதற்குப் பதில் சொல்லும்! கர்த்தருடைய வார்த்தைகளைப் புடமிடும் ஆற்றலை மண்குகைக்குத் தேவன் அளித்திருப்பாரானால், அந்த மண்குகையைக் குறித்ததான தேவனுடையத் திட்டம் வீணாகுமா என்ன? பொறுத்திருந்து பார்க்கலாம். **(Wait and see!)**

## சீச்சீ இந்த பழம் புளிக்கும்:

விதைகள் புத்தகங்கள் தொடர்பான பல கடிதங்கள் வந்தன. கடிதங்களின் சாராம்சம்: தரித்திரத்திலேயே வாழ்வதுதான் பரலோக பயணத்திற்கு நல்லது என்பதான பிரசங்கங்கள் ஒரு பக்கம், இன்னொரு பக்கத்திலோ செழிப்பின் உபதேசங்கள். இதில் எது சரி? எது சரியில்லை? எதுவோ ஒன்று சரி, இன்னொன்று சரியில்லை, இப்போது அதுவல்ல பிரச்சனை. தரித்திரத்திலேயே வாழ்ந்தாலும் பரலோகம் போகலாம் என்றால் பேசாமல் அந்த வழியையே தேர்ந்தெடுத்துவிட்டுப் போவதுதானே புத்திசாலித்தனம்? செழிப்பின் வழியில் சென்று பிரச்சனையில் சிக்கி தேவனைவிட்டு வழிவிலக வேண்டிய சூழ்நிலை வந்துவிட்டால் ஆபத்தல்லவா? எதற்கு வீண் வம்பு. **(risk?)**

இங்கே முக்கிய விஷயம் என்னவென்றால்; அபிப்பிராயங்களினால் தேவனுடைய வசனங்களின் சத்தியம் மாறப்போவதில்லை, சத்தியம் சத்தியம்தான். சிறு வயதில் மூணாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் படித்த "நரியும் திராட்சை பழமும்" என்ற கதையில் வரும் கதாநாயகன் நரியார் அதோ ஓடி வந்து கொண்டிருக்கிறார். திராட்சைத்தோட்டத்திற்குள் புகுந்து விட்டார். பழக்கொத்துக்களைப் பார்த்து நாக்கை சுழற்றிய நரி இரண்டு கால்களில் நின்றுகொண்டு பறிக்க முயற்சித்தது, முடியவில்லை. லேசாக குதித்துப் பார்த்தது, எட்டவில்லை, இன்னும் கொஞ்சம் வேகமாக... ஊகூம்! முயற்சிகள் தொடர்ந்தன, வேர்த்துக் கொட்டியது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது. பழத்தை பார்த்து ஒரு முறைப்பு விட்டது! "சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்" என்று சொல்லிவிட்டு திரும்பிப்பார்க்காமல் நடையைக் கட்டியது. திராட்சைப் பழங்கள் நரியின் அறியாமையை, இயலாமையை நினைத்து மௌனமாக சிரித்துக் கொண்டன.

விசுவாசிக்க திராணியில்லையென்பதற்காக ஒரு சத்தியத்தை அபத்தமாக்க முயற்சிப்பது சரியான அணுகுமுறையல்ல. இதனால் நாம் இழந்துபோவது மாத்திரமல்ல, அடுத்தவர்களுக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தையும் தடுத்து நிறுத்திவிடுகிறோம். எதிர்மறையாகப் பேசுபவரின்

அவிசுவாச விதை விசுவாசிப்பவரின் விசுவாசத்தின் மேல் விழுந்து முளைக்கிறது, விசுவாசச் சத்தை முழுவதுமாக உறிஞ்சி செழித்து வளர்ந்துவிடுகிறது!

## "உச்சிதமான கோதுமை":

பாஸ்மதி ரைஸ், பொன்னி அரிசி, சீரகச் சம்பா இவை தான் வாக்குத்தத்தம், அதைப் புரிந்து கொள்ளாமல் ரேஷன் அரிசிக்காக **Queue**-ல் நின்றால், அது நமது அறியாமை!

தேவன் இயேசு தன் உயிரைக் கொடுத்து சுமக்கக்கூடாதிருந்த பழைய உடன்படிக்கையின் நுகத்தடியை சிலுவையில் முறித்து (முடித்து) புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் பலவற்றை நமக்கென்று ஏற்படுத்தினார். அவற்றில் முக்கியமானது இரட்சிப்பு, தெய்வீக சுகம், சாபத்திலிருந்து விடுதலை, ஐசுவரியம் ஆகியவை.

இதில் இரட்சிப்பைத் தேவன் நமக்குக் கொடுத்த போது சந்தோஷமாக ஏற்றுக் கொண்டோம். நாம் தேடிப்போகவில்லை, தேவனே நம்மைத் தேடி வந்து இரட்சித்தார். இரட்சிப்பை நமக்காக சிலுவையில் இயேசு சுதந்தரித்து வைத்தபோது; அதைச்சார்ந்த பரலோக ஆசீர்வாதங்கள் பலவற்றையும் தேவன் இயேசு சுதந்தரித்து வைத்தார். இந்த வேலையையெல்லாம் இயேசு கிறிஸ்து செய்து முடித்து 2000 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன.

"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் ... யோவா. 8:32"

சத்திய வசனத்தை ஒரு பிரசங்கியார் பிரசங்கித்த போது; நாம் கேட்டோம், அப்போது அந்த சத்திய வசனம் நம்மைப் பாவத்திலிருந்து விடுதலையாக்கிற்று, இரட்சிக்கப்பட்டோம். இதைப்போலவே அதைத் தொடர்ந்து வரும் பரலோக ஆசீர்வாதங்களைப் பற்றிய சத்தியங்களையும் கேட்டு விசுவாசிக்கும்போது, நாம் சாபத்திலிருந்தும் விடுதலையாகலாம், வியாதியிலிருந்தும் விடுதலையாகலாம், தரித்திரத்திலிருந்தும் விடுதலையாகலாம்.

நாம் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவி பெற்று, அந்நியபாஷை, வரங்களோடு தேவனுக்கு ஊழியம் செய்து வந்தாலும், தரிசனங்களைப் பெற்றிருந்தாலும், சாபம், வியாதி, தரித்திரம் ஆகியவற்றிலிருந்து நாம் விடுதலைபெற சம்மதிக்காமல் அவை நம்மைத் தொடர அனுமதிப்போமானால் என்ன நடக்கிறது என்பதை சற்றே கவனிப்போம்.

நம்மைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் சாபங்கள் நாம் பெற்றிருக்கும் விலைமதிக்கமுடியாத இரட்சிப்பின் மேல் தன்னுடைய தாக்குதலை நடத்துகிறது. தேவன் இயேசு இரத்தம் சிந்தி நம்மை சாபத்தில் இருந்து விடுதலையாக்கிவிட்டார் என்ற சத்தியத்தை நாம் அறிந்திராததால், விசுவாசிக்காததால் அது நம்மைத் தொடர்கிறது. புதிய பிரமாணத்தைப் பற்றிய அறிவு இல்லாததினால் நியாயப்பிரமாணம் நம்மைத் தொடருகிறது. நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதுதான் நமக்கு நடக்கும். இதனால் தொடர்ச்சியாகத் துர்ச்சம்பவங்கள் நம் தனிப்பட்ட வாழ்க்கையிலோ, குடும்பத்திலேயோ நடந்து கொண்டேயிருக்கும். (குழந்தை பிறக்காமல் இருத்தல், அடிக்கடி வரும் தொடர்ச்சியான சாவு, வீடு கட்டி முடிக்கப்படாமல் பாதியில் நின்று போவது, வீட்டுச் சுவர்களில் வெடிப்பு விழுவது, எந்த தொழில் செய்தாலும் நஷ்டம், பிள்ளைகளின் வாழ்க்கையில் தொடர்ச்சியாக வரும் பிரச்சனைகள், அடிக்கடி வியாதிகளின் தாக்குதல்கள், ... )

இதனால் நம்முடைய விசுவாச வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகிறது. பிரச்சனைகளோடு நாம் போராடப் போய்விடுவதால் நம்முடைய உள்ளான மனிதனைக் கவனிக்கத் தவறிவிடுகிறோம். தேவனோடு தனித்திருக்கும் நேரம் நம்முடைய பிரச்சனைகளால் சூறையாடப்படுகிறது. ஜெபவாழ்க்கை பாதிக்கப்படுகிறது, வேத வாசிப்பு தியான நேரங்கள் குறைகிறது. இதனால் நம்முடைய ஆவிக்குரிய உள்ளான மனிதனைச் சரியானபடி பராமரிக்க முடியாமல் போகிறது. அவனுக்குத் தேவையான போஷாக்கான ஆகாரம் கிடைக்காமல் நாளுக்கு நாள் மெலிந்து, நலிவடைந்து, ஒன்றுமில்லாமல் ஆகி (கழுதை சிறுத்து கட்டெறும்பாகி) ... பின்மாற்றம் ஏற்படுகிறது. நம்முடைய விசுவாச ஓட்டம் **'Reverse order'** ல் (பின்புறமாக திரும்பி) ஓட ஆரம்பிக்கிறது. (பின்மாற்றத்தைப் போன்ற ஒரு மோசமான அனுபவம் நம் எதிரிக்குக்கூட வரக்கூடாது.) நாம்

விடுதலையாகி வெளியே வந்த அதே சாத்தானின் சிறைக்குள்ளாக மீண்டும் செல்லும் துர்ப்பாக்கியநிலை நமக்கு வருவதைப் பார்க்கிலும் சாவது நமக்கு நலமாயிருக்கும். அப்படிப்பட்ட நிலை வராமலிருக்க சத்தியத்தை அறிந்து கொள்ளுவோம்.

பாவத்திலிருந்து விடுதலை பெற்ற நாம், கூடவே இயேசு சிலுவையில் ஏற்படுத்திய தெய்வீக சுகத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். வியாதியோடு இருப்பது தேவனுடைய சித்தமல்ல. சத்தியத்தை அறியாமல் வியாதியோடு போராடிப் போராடியே காலத்துக்கு முன்னதாகவே ஓட்டத்தை முடித்த நம் முற்பிதாக்கள் கோடானுகோடி. அவர்கள் வந்த வியாதியிலிருந்து விடுதலையடைந்து சுகத்தோடு வாழ்ந்திருந்தார்களானால் தேவஇராஜ்ஜியத்திற்காக இன்னும் எவ்வளவோ செய்திருக்கலாமே.

"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ... ஓசியா. 4:6"

சத்தியத்தை அறிந்து கொள்ளாததினால் சங்காரமானாலும் தேவ பிள்ளைகள் பரலோகத்துக்குத்தான் போகிறார்கள். எப்படியும் பரலோகத்திற்குள் போய்விடலாம் என்ற தைரியத்தில் தேவபிள்ளைகள் தங்களுடைய சாப, வியாதி, தரித்திர துயரங்களில் இருந்து விடுபடுவதில் நிர்விசாரிகளாயிருக்கிறார்கள்.

பரலோகத்திற்குப் போவதற்காக மாத்திரம் தேவன் நம்மை அழைக்கவில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அப்படியிருந்தால் நாம் இரட்சிக்கப்பட்ட அன்றைக்கே நம்மை எடுத்துக்கொண்டிருப்பாரே? மீண்டும் நம்மை ஏன் வாழ வைக்கிறார்?

தேவன் நம்மை முன்குறித்து தெரிந்து கொண்ட நோக்கம் என்னவென்றால், நாமும் பாவத்திலிருந்து மீட்கப்பட வேண்டும், நமக்கடுத்தவரையும் அந்த மீட்புக்குள் நடத்த வேண்டும்.

இரட்சிக்கப்படுவது மட்டும் தேவ சித்தமல்ல, சத்தியத்தை அறிந்து கொள்வதும் அவருடைய சித்தமாயிருக்கிறது. "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். 1 தீமோத். 2:4" என்ற வசனத்தின் படி பூமியிலுள்ள சகல ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் நிர்மாணித்திருக்கும் தேவ இராஜ்ஜியத்தின் மகா பெரிய கட்டுமானப் பணியில் நம்முடைய பங்கைச் சிறப்பாக செய்து முடிக்க வேண்டும். அதற்கு நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்றால் மட்டும் போதாது. சாபம், வியாதி, தரத்திரம் இன்னும் இதைச்சார்ந்த எண்ணற்ற பிரச்சனைகளிலிருந்தும் விடுதலை அடைவதன் மூலம் நாம் தேவபணியை இன்னும் சிறப்பாக செய்ய முடியுமே!

நம்மைத் தொடரும் சாபங்களும், பிடித்துக்கொள்ளும் வியாதிகளும் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கே முட்டுக்கட்டையாக இருக்கும்போது, நாம் எப்படி மற்றவர்களின் ஆத்துமாக்களைக் குறித்து கவனம் செலுத்த முடியும்?

சரி, இந்த இரண்டு காரியத்திற்கும் **OK.** அடுத்ததாக தரித்திரத்திலிருந்தும் விடுதலையை தேவன் சிலுவையில் வைத்திருந்தார் என்று பிரசங்கித்தால்; "செழிப்பின் உபதேசம்" என்று பயத்துடனும், குழப்பத்துடனும் பின்வாங்குகிறார்கள். "செழிப்பின் உபதேசத்தில்" தவறு எதுவுமில்லை, கீறல் விழுந்த கண்ணாடியை கண்ணில் மாட்டிவிட்ட சாத்தானிடத்தில்தான் தவறு இருக்கிறது. செழிப்பின் உபதேசம் தவறு என்றால், இரட்சிப்பின் செய்தி மட்டும் எதற்காக? செழிப்பின் உபதேசங்களைச் சாத்தான் இப்படி முழுமூச்சாக எதிர்ப்பதற்கு என்ன காரணம்? இதில் அவனுக்கு என்ன லாபம்?

லாபம் இல்லையென்று யார் சொன்னது? தரித்திரப் பாட்டைப் பாடிக்கொண்டிருக்கும் தேவப்பிள்ளைகளின் எல்லைகளுக்குள் அந்த தரித்திரத்தையே உபதேசமாக அனுப்பிவிட்டு, அவர்களுடைய ஐசுவரியத்தில் சுகமாக குளிர்காய்ந்து கொண்டிருக்கிறான் அந்த கொடியவன்! தேவபிள்ளைகளின் ஐசுவரிய மாளிகைகளில் இருந்து; அவர்கள் தூங்கிக்கொண்டிருந்த நேரத்தில் சொத்து சுகங்களையெல்லாம் தன்னுடைய குட்டிச்சாத்தான்களின் படைகளை ஏவிவிட்டு கொள்ளையடித்தான் பெரிய சாத்தான்! அதையெல்லாம் தன்னுடைய கோட்டைக்குள் கொண்டு வைத்துக்கொண்டு, பின்வாசல் வழியாக தன்னுடைய ஆளுகைக்குட்பட்டவர்களுக்கு

தாரைவார்த்துக் கொண்டிருக்கிறான்.

குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்த தேவபிள்ளைகள் ஒரு வழியாக தூக்கம் தெளிந்து எழுந்து பார்த்தால்... ? கழுத்திலிருந்த செயினைக் காணோம், போர்டிகோவில் நின்று கொண்டிருந்த காரைக் காணோம், வீடு அடகு பத்திரமாக மாறியிருந்தது, **Bank Balance? Absolute zero!** ஏன் இந்த அவலம்? நம்மைச் சரிபடுத்துவதற்காகத் தேவன் ஒரு சில நேரங்களில் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை அனுமதித்தாலும், அது **Short period** க்குத்தான், அதற்காக இந்த நிலையைத் தொடர்ச்சியாக நீடித்திருக்க விடுவோமானால், அது நமது அறியாமை.

நம் அருமை ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய சொத்துக்களை நமக்கு உயில் எழுதி வைத்துவிட்டு, அது செல்லுபடியாகவேண்டும் என்பதற்காகவே மரித்தார், வயல்வெளி நம் வசமாயிற்று! நடந்தது எதையுமே அறியாத தேவக் குழந்தைகள்(?) – தேவஜனங்களைத்தான் சொல்லுகிறோம் – பால்பாட்டிலைக் கையில் வைத்துக்கொண்டு குவா குவா என்று அழுது கொண்டு திரிகிறார்கள். அது சரி வயல்வெளிக்கு என்னவாச்சு? அங்கே கழுதை மேயுது! (அது நம் கவனக்குறைவினால் நடந்தது, சரிசெய்வோம்.)

இடது கையில் திருவோட்டையும், வலது கையில் இரட்சிப்பின் செய்தி அச்சடிக்கப்பட்டிருக்கும் **Tracts** ஐயும் எடுத்துக்கொண்டு, ஒரு தேவனை அறியாத மனிதனின் எல்லைக்குள் நுழைந்து பாருங்கள், என்ன நடக்கிறது என்று? அவன் உங்கள் வலது கையைப் பார்ப்பான் என்றுதானே நினைக்கிறீர்கள், இல்லை பிரியமானவர்களே! திருவோடுதான் அவனுக்கு பூதாகரமாயிருக்கும்!

எழுப்புதல் ஏன் தீப்பொறிகளோடு நின்று போனது என்று இப்போது புரிகிறதா?

அறியாமையினால் ஆசீர்வாதத்தை சாத்தானின் கோட்டைக்குள்ளாக அனுப்பிவிட்டு ஆந்தையைப் போல் முழிக்கும் தேவ பிள்ளைகளுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். ஆசீர்வாதம் பந்து போல, நீங்கள் **miss** பண்ணினால் சாத்தான் **catch** பண்ணி விடுகிறான். இனிமேற்கொண்டு சாத்தானின் எல்லைக்குள் நம் ஆசீர்வாதம் போகக்கூடாது, அவன் அதை வைத்து சினிமா எடுக்கக்கூடாது, அதற்காகவாவது ஆசீர்வாதத்தை நீங்கள் கைப்பற்றுங்கள். எனக்குத்தான் ஆசீர்வாதம் தேவையில்லையே என்கிறீர்களா? தேவையுள்ளவர்கள் எவ்வளவோபேர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்குக் கொடுங்கள்!(?)

தேவபிள்ளைகள் ஆசீர்வாதமாக இருப்பதன் மூலம் நம் தேவன் பெரியவர் என்பதை புறஜாதிகள் முன்பாக நிரூபிக்கலாம். திருவோட்டுடன் நடமாடும் சுவிசேஷகர்களே, நீங்கள் ஜெயிக்க முடியாது, ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

திராட்சைப்பழத்தை கோட்டை விட்ட நரியைப் போலிருக்காமல், முயற்சி செய்யுங்கள். ஒரு **Stool** (ஸ்டூல்)ஐ எடுத்துப் போட்டு ஏறி நின்று பறிக்கலாம், அல்லது **Hook** (கொக்கி போன்ற அமைக்கப்பட்ட கம்பு)ஐ உபயோகித்து கொடியை கீழே இழுத்தும் பறிக்கலாம்! அப்புறம் பாருங்கள் பழம் நிச்சயம் இனிக்கும்!

## கழுத்தை ஒடித்த சுமை:

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; ... நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசா. 53:4,5

... அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே. 2 கொரி. 8:9

புதிய ஏற்பாட்டின் காலத்தில் இயேசு சிலுவையில் இரட்சிப்பிற்கான காரியத்தை நிறைவேற்றின பிறகும் கோடானுகோடி ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளாமல் மரித்து, பாதாளத்தில் இறங்குகிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை இயேசு சிலுவையில் சிந்திய இரத்தம் வீணாகிப்போனதல்லவா? சபையில் உள்ள கணக்கிலடங்காத தேவபிள்ளைகள் எப்போதும் அழுகையோடும், வீங்கிய கண்களோடும் காலத்தைக் கடத்துகிறார்கள், இயேசு சிலுவையில் அவர்களுடைய துக்கங்களைச் சுமந்தது வீணாகிப்போனதல்லவா?

சமாதானத்தையும், சந்தோஷத்தையும் சாத்தானிடம் காவு கொடுத்துவிட்டு அவதிப்பட்டே வாழ்க்கையை முடிக்கிறார்கள், இயேசு சிலுவையில் சமாதானத்தை உண்டுபண்ணி வைத்துத்தான் என்ன பிரயோஜனம்?

வியாதியை தேவன்தான் தருகிறார் என்று நினைத்து, வியாதியினூடே வாழ்க்கையை நடத்தி மரணப்படுக்கையில் முடிக்கிறார்கள், இயேசுவின் காயங்களால் என்ன லாபம்? தரித்திரம்தான் பரலோகத்தில் சேர்க்கும் என்ற தவறான கண்ணோட்டத்திலேயே வாழ்க்கையை முடித்தவர்களைப் பொறுத்தவரை தேவன் இயேசு சிலுவையில் தன்னுடைய ஐசுவரியத்தை இழந்தது வீண்தானே?

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், தாங்களே இன்னும் விடுவிக்கப்படாதவர்களாக இருந்தபோதிலும், நமக்காக வேதனைகள் மத்தியில் தீர்க்கதரிசனம் உரைத்தார்களே, அவர்களின் பிரயாசம் வீணாய் போயிற்றே!

பிதாவாகிய தேவன் நம்முடைய சுமைகளை இலகுவாக்கிக் கொடுத்திருந்தும், இன்னும் தேவ பிள்ளைகள் கழுத்து ஒடியும் அளவுக்கானச் சுமையைத் தலைமேல் வைத்துக் கொண்டு காருக்குள் உட்கார்ந்து பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள்! பாரத்தை இறக்கி பக்கத்தில் வைத்தால் போதும் கார் அதையும் சேர்த்துச் சுமக்கும் என்பதைக்கூட யோசிக்க முடியவில்லை, கார் டிரைவர் திரும்பிப்பார்த்து தலையில் அடித்துக் கொள்ளுகிறான்.

மல்கியாவோடு முடித்திருக்காமல் ஏன் பரிசுத்தாவியானவர் மத்தேயு சுவிசேஷத்தை ஆரம்பித்து வைத்தார்? புதிதாக இரட்சிப்புக்குள் வந்தவர்களுக்கு புதிய ஏற்பாட்டைத்தானே கொடுக்கிறோம்? அவர்களுக்கு புதிய வெளிச்சம் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தானே!

நாமே முதுகின்மேல் பாரத்தை வைத்துக்கொண்டு, பாரஞ்சுமப்பவர்களுக்கு சுவிசேஷம் சொல்லுகிறோம். விடுதலையாகாமலேயே விடுதலையை அறிவிக்கிறோம்! வியாதியில் இருந்துகொண்டே தெய்வீக சுகத்தையும், தரித்திரத்தில் இருந்தபடியே ஆசீர்வாதத்தையும் பிரசங்கம் பண்ணுகிறோம்!

நம்முடைய சூழ்நிலை புரியாமல், அடுத்தவருடைய எல்லைக்குள் நுழைகிறோம். சத்தியம் தெரியாததால் சத்தியத்திற்குப் புறம்பான விதைகளைத் தெரியாத்தனமாக விதைத்து தொலைத்துவிட்டோம். ஒரே ஒரு சொட்டு புளித்தமாவுதான் புதிய மாவுக்குள் விழுந்தது, புளித்துவிட்டது. எதையாவது போட்டு, புளிப்பை மாற்ற பிரயத்தனம் எடுத்தால் அந்த முயற்சி வீணானதாயிருக்கும். அதைக் கொட்டிவிட்டு, புதிய மாவை தயாரிப்பதே சரியானதாகும்.

## புதிய மாவை தயாரிக்கும் முறை:

கம்யூட்டரில் நாம் கணக்கு வழக்குகள், பணப்பரிமாற்ற விவரங்கள், ஆன்லைனின் பயன்படுத்தும் பாஸ்வேர்டு என ஏராளமானவற்றை பதிவு செய்து வைத்திருப்போம். பயன்படுத்திய பிறகு அந்த பைல்களை அழித்து விடுகிறோம். உடனே அந்த பைல் கம்யூட்டரைவிட்டுச் சென்று விட்டதென்று நினைத்துவிடக்கூடாது. பைல்கள் ரீசைக்கிள் பின் **(Recycle Bin)** என்ற போல்டரில் இருந்து அழிந்தாலும், நாம் உருவாக்கிய பைல்கள் மேக்னட்டிக் வடிவில் ஹார்டு டிஸ்கில் இருந்துக்கொண்டே இருக்கும். அதனால் மற்றவர்கள் அந்த மேக்னட்டிக் பீல்டுகளை மீண்டும் எடுத்து, நாம் அழித்த தகவல்களை மீண்டும் படிக்க முடியுமாம்.

அதனால் ஒரு பைலை முற்றிலும் கம்யூட்டரில் இருந்து அழிக்க வேண்டுமானால், அதன் மீது இன்னொரு பைலை இடம் பெறச் செய்வதே சரியான வழியாகும். நம் தேவன் இயேசு சிலுவையில் செய்தது இதற்கொப்பான காரியத்தைத்தான். நியாயப்பிரமாணத்தை ஒழித்தார்,

சாபங்களை அழித்தார். நாம் சத்தியத்தை அறிந்து, வசனத்தால் நம் இருதயத்தை மாற்ற வேண்டும். பிரச்சனைகளின் மேல் வசனத்தை பதிக்க வேண்டும்; பிரச்சனை மறைந்து விடும். டாக்டர் கொடுத்த மெடிக்கல் ரிப்போர்ட்டை எடுத்து திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டிருக்காமல்; அதன் மேல் "இயேசுவின் தழும்புகளால் குணமானேன்" என்ற வார்த்தைகளைப் படியவிடவேண்டும், வியாதியும், அதைக்குறித்ததான பயங்களும், டாக்டரின் வார்த்தைகளும் அழிந்து விடும்.

**Eraser - www.heidi.ie/node/6** என்னும் இணையதள முகவரியின் மூலமாக இந்த மென்பொருளை **(Software-ஐ)** பதிவிறக்கம் **(Download)** செய்யலாம். கம்யூட்டரில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் டாகுமெண்டுகள், இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பைல்கள், இணையதள முகவரிகள், ரீசைக்கிளிங் போல்டரில் உள்ள தகவல்களை அழிக்க இந்த மென்பொருள் உதவுகிறது. சங்கேதக்குறிகளாக மாற்றப்பட்ட பைல்களை அழிக்கவும், சுருக்கப்பட்ட பைல்களை அழிக்கவும் பயன்படுகிறது.

**UltraShredder (www.xtort.net/xtort-software/ultrashredder)** என்ற மென்பொருளை இறக்கினால் சிறிய ஜன்னல் திறக்கும். மவுசை **right click** செய்து அழிக்க வேண்டிய பைல்களை இணைக்கலாம். இந்த **software** ஒரு விசேஷித்த முறையைப் பின்பற்றி பைல்களை அழிக்கும். சம்பந்தப்பட்ட பைல்களை மீண்டும் எடுத்தால், சம்பந்தமில்லாத எழுத்துக்களை மட்டுமே பார்க்க முடியும். அதுமட்டுமல்ல **Hard Drive** முழுவதையும் அழிக்கும் வசதியும் இதில் உண்டு.

வேத வார்த்தைகளுக்குத் தெய்வத்துவ வல்லமை உண்டு, எப்படியென்றால் இயேசுதான் வசனங்கள், வார்த்தைகள், அதனால்தான் அவைகளுக்கு ஜீவன் இருக்கிறது, வல்லமை இருக்கிறது, பிரச்சனைகளின் மேல் படிந்து அவற்றை அழிக்கிறது. நாம் சத்தியத்தை அறிந்து கொண்டு, இயேசு சிலுவையில் நமக்கு ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையின் காரியங்கள் என்னென்னவென்று ஆராய்ந்தறிந்து அவற்றை இருதயத்தில் பதிவு செய்ய வேண்டும். பிறகு அந்த சத்தியத்தால் நியாயப்பிரமாண நம்பிக்கைகளை, சாபங்களை, பிற்போக்கான சிந்தனைகளை, தோல்வி மனப்பான்மையை, தரித்திரத்தை, கண்ணீரை, மாற்ற வேண்டும்.

இக்கால சபை நியாயப்பிரமாண போதகராக மாறி நிற்கிறது. முழுவதுமாக மாற்றப்பட வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் துளி புளித்த மாவும் மொத்த மாவையும் உப்பப் பண்ணிவிடும். மீண்டும் மீண்டுமாக நியாயப்பிரமாணத்திற்குள்ளாகவே போய்க்கொண்டிருப்போம். விசுவாசத்தைத் தொலைத்து விட்டு, கிரியைகளினாலே நீதிமான்களாக முயற்சிக்கிற தேவபிள்ளைகளின் அறியாமையின் வியர்வைத் துளிகள்! அது பெருவெள்ளமாகி ஓடி கடலில் கலந்து அதன் உப்பை அதிகரிக்கச்செய்கிறது.

விசுவாசிகளைச் சொல்லி குற்றமில்லை, "ஆலையில்லாத ஊரில் இலுப்பைப்பூ சர்க்கரை" என்ற கதையாய் என்ற பரிதாப நிலை! சத்தியத்தை அறிந்து போதிக்க ஆளில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய் அத்தி பூத்தாற்போல ஒரு சிலர் எழும்புகிறார்கள். அவர்களும் அடிவாங்காத குறைதான்! பொங்கிபோட ஆளில்லாததால் பழைய சோறாவது இருக்கிறதே என்று சாப்பிட்டுச் சாப்பிட்டு? கடைசியில் ... அல்சர்! சுகர்! பிளட் பிரஷர்! **(Ulcer, Sugar, Hypertension)**

தேவனை அறியாமல், நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல்பண்ணப்பட்டிருந்த நாட்களில் காணப்பட்ட அறியாமைகள், பாவங்கள், உலகத்தாரைப் போன்ற மோசமான கீழ்த்தரமான வாழ்க்கை யால் சாத்தானின் பாதாள அறையில் பதுங்கிக் கிடந்தோம். காலம் நிறைவேறின போது, இயேசு வெளிப்பட்டு நம்மைத் தூக்கியெடுத்தார். கிருபையால் இரட்சிக்கப்பட்டோம், விசுவாசத்தால் ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கும் வாய்ப்பு! நாம் எதுவுமே செய்ய வேண்டியதில்லை "சும்மா இரு" என்று சொல்லிவிட்டு நம் யுத்தத்தை தன் தோளில் போட்டுக் கொண்டார் இயேசு!

சத்தியத்தை அறிந்து கொள்ளக் கூடிய வழியில் தேவன் நம்மை கொண்டு வந்து நிறுத்திய பிறகும், மதியீனத்தால் மீண்டும் பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கைக்குள் படியிறங்குவோமானால் நம் முன்னிலைமையை விட, பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்குமே!

நானும் இப்படிப்பட்ட அறியாமையின் இருளில் சிக்கி, சிலுவையின் இரகசியங்களை அறியாமல் இருந்ததால், நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அதன் குரைக்கிற தன்மை

மாறாது என்ற பழமொழியை நினைத்து அங்கலாய்த்தேன். விஞ்ஞானம் மனிதனையும் ஒரு மிருகம்தான் என்கிறது, தேவனை அறியாத மனிதனின் பிரகாசமில்லாத கண்கள் அதை சரி என்று ஒத்துக்கொள்கிறது. ஆனால் அப்படியல்ல, மனிதன் எவ்வளவோ விசேஷித்தவனாயிருக்கிறான்.

அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? ... 1 கொரி. 4:7 எதுவுமேயில்லை, எல்லாம் நமக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது.

இயேசு அழைக்கிறார் ... வாருங்கள்

இயேசு விடுவிக்கிறார் ... விடுதலையாகுங்கள்

இயேசு வாழ்வு கொடுக்கிறார் ... பெற்றுக் கொள்ளுங்கள்

இயேசு நல்லவர் ... ருசித்துப் பாருங்கள்

இயேசு வல்லவர் ... ஆராய்ந்து பாருங்கள்

இயேசு ஜீவிக்கிறார் ... ஒத்துக்கொள்ளுங்கள்

இயேசு வருகிறார் ... எதிர்கொள்ளுங்கள்

நாம் விதைப்பது நமக்காகத்தானே தவிர தேவனுக்காக அல்ல. தேவனே விதை தருகிறார், நாம் விதைக்கிறோம், நம் விதைப்பின் பயனை நமக்குத் திரும்பித் தரவே இந்த ஏற்பாடு. நாம் விதைத்து தேவனுக்கு லாபம் சம்பாதித்துக் கொடுக்கும் நிலையில் அவர் இல்லை. வானமும், பூமியும், எந்த விண்வெளி ஆராய்ச்சியாளராலும் ஆராய்ந்தறிய முடியாத அண்டசராசரங்களும் அவருக்குரியது.

“நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே. சங். 50:12”

“... கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். சங். 50:12”

இந்த வசனத்தின்படி கர்த்தரை நம்பினாலே ஆசீர்வாதம் வரும், விதைக்க வேண்டியதில்லை என்பதைப் போன்றதான கருத்துக்கள் நான் போய்க்கொண்டிருந்த பாதையில் உலாவருவதைப் பார்த்து, போய் அதைப் பிடித்தேன்! ஆசீர்வாதத்திற்காக ஒருவன் கர்த்தரைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறான் என்பதையே அவன் விதைப்பதை வைத்துத்தான் கண்டுபிடிக்க முடியும். கர்த்தரை நம்புகிற ஒருவன் விதைக்காமல் இருக்க மாட்டான், ஆத்தும ஆதாயப்பணிக்காக காணிக்கை எதுவும் கொடுக்காத ஒருவர் கர்த்தரை நிச்சயம் நம்பமாட்டார். வாக்குத்தத்தமானது இயேசுவை ஏற்றுக் கொண்டு, இரட்சிக்கப்பட்டு, மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதன் மூலம் அவருடைய மரணம், உயிர்த்தெழுதலின் சாயலில் பங்கு பெற்றவர்களுக்கு மட்டுமே. இவர்கள்தான் தேவனுடைய புத்திரர்கள் (பிள்ளைகள்) எனப்படுகிறார்கள், அதனால் தேவனுக்கு பங்குதாரர்கள் ஆகிறார்கள்.

இந்தத் தகுதி **(Qualification)** இல்லாமல் தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற முயற்சிக்க வேண்டாம், உங்கள் முயற்சி வீணாகுமென்பதை முன்கூட்டியே சொல்லி எச்சரித்துவிடுகிறோம். அதாவது மனம்திரும்பியதுடன் நின்று கொண்டு ஞானஸ்நானம் எடுக்காமல், வக்கலாத்து பேசிக்கொண்டிருப்பவர்களைச் சொல்லுகிறோம். உங்கள் வீட்டின் சுவரில் தொங்கும் ஆசீர்வாத வாக்குத்தத்தங்கள் சுவருடனேயே நின்று போகும்!

“... உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ... 1 கொரி. 9:10”

விதைக்கிறவன் தேவனை நம்புகிறதால்தான் விதைக்கிறான், தேவனை நம்புவதால்தான் விதைப்பிற்கு பலன் (விளைச்சல்) வரும் என்று எதிர்பார்க்கிறோம். விதையையும் நம்பாமல், விதைத்தால் பயிர் விளையும், என்பதையும் நம்பாமல் இருக்கும் ஒரு விவசாயிக்கு வயல்வெளியில்

என்ன வேலை? அவன் எப்படி திருப்தியாக வேலை பார்க்க முடியும்? அவன் வேலை பார்த்துதான் என்ன பிரயோஜனம்?

ஞானஸ்நானம் எடுக்காமல் (இரட்சிக்கப்பட்டபின்பு மூழ்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவி நாமத்தினாலே எடுக்கப்படுவது) தங்களைத் தேவனுடைய சுதந்தரவாளிகள் என்று நினைத்துக் கொண்டு, தன்னைத்தான் வஞ்சித்துக் கொண்டு, ஆசீர்வாதங்களைப் பெற முயற்சிப்பவர்களுக்கு அவர்கள் பலமுறை வாசித்த வேத வசனங்களைக் கொண்டே விவரிக்கிறோம்.

"... பிலிப்பும் மந்திரியும் ...தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். அப். 8:38"

"... அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங்கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். யோவான். 3:23"

"தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள். மத். 3:6"

மூழ்கி எடுப்பதற்கு வசதியாக ஞானஸ்நானம் நதிக்கரையோரமாக நடத்தப்படுகிறது. அதிகமாக தண்ணீர் வசதி இருக்கும் இடத்தில்தான் ஞானஸ்நானம் கொடுக்கப்படும்.

"... யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். மத். 3:13"

நீங்கள் இயேசுவை விட பெரிய பரிசுத்தவான்களாக இருந்தால், ஞானஸ்நானம் எடுக்க வேண்டியதில்லை!

"... நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, ... மத். 28:19"

இந்த வசனம் தேவன் இயேசு தன்னுடைய வாயினாலே சொன்ன வார்த்தைகள். இயேசுவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை, அதனால் ஒன்றும் பிரச்சனையில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கும் அதிமேதாவிகளை நோக்கி இதோ வந்து கொண்டிருக்கின்றன பிரச்சனைகள்!

"யோவான் ...ஞானஸ்நானங்கொடுத்து, ...ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான். மாற். 1:4"

ஞானஸ்நானம் தேவையில்லையென்றால், அதைக்குறித்து பிரசங்கம் எதற்கு?

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். மாற். 16:16

இந்த வசனத்தின்படி ஒருவர் ஞானஸ்நானம் எடுக்க தயக்கம் காட்டினாரால்; அவருடைய விசுவாசம் பிரச்சனைக்குள்ளாகிறது. விசுவாசமில்லாதவன் தேவனுக்குப் பிரியமாக இருக்க முடியாது. தேவனுக்குப் பிரியமாக நடக்காமல் அவருடைய இராஜ்ஜியத்திற்குள் மாத்திரம் பிரவேசிக்க வேண்டும் என்று பகல் கனவு காண்பது எந்த விதத்தில் நியாயம்?

"ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, ... வானம் திறக்கப்பட்டது; லூக். 3:21"

ஞானஸ்நானம் பெற்றவுடன் நாம் வெளிப்படையான எந்த வித்தியாசத்தையும் நம் ஆவி ஆத்துமா சரீரத்தில் உணராமல் இருக்கலாம். ஆனால் ஒரு மாபெரும் காரியம் நம்முடைய ஆவிக்குரிய உலகத்தில் நடக்கிறது. பரலோக இராஜ்ஜியம் திறக்கப்படுகிறது... நமக்காக. அபிஷேகம், தொடர்ந்து பரலோக ஆசீர்வாதங்களைப் பெற ஏதுவுண்டாக்குகிறது.

"பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்கு

கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள். லூக்கா. 7:30"

கேடு உண்டாகுமாம், என்ன கேடு? இயேசுவோடு மரித்து, உயிர்த்தெழும் அனுபவம் இல்லாமல் போவதால், அவரோடு உடன்படிக்கை செய்யாததினால், பிரச்சனை நேரத்தில் நாமே தனியாக நின்று சமாளிக்க வேண்டியது வரும். குழியில் விழுந்து விட்ட ஒருவன் தன்னுடைய ஒரு கையினால் மற்றொரு கையைப் பிடித்து வெளியே இழுத்து தூக்கிவிடுவது சாத்தியமாகுமா? நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள முடியாது, அதனால் முடிவு சோகமயமானதாயிருக்கும்.

"... இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். யோவான். 3:22"

வானவெளி ஆராய்ச்சியாளர்களை **(Planetary Scientist)** வாயைப் பிளக்க வைக்கும் விண்வெளியையும் அதில் சுற்றியோடும் இராசிகளையும் உருவாக்கிய இயேசு அதே வல்லமையுள்ள கரத்தால், அவரே (தானே) ஞானஸ்நானம் கொடுப்பதை கவனியுங்கள்.

"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். ... மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அப். 2:41"

தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்கத் திராணியில்லாமல் அழுமூஞ்சியாகக் கேட்பவர்கள் ஞானஸ்நானம் பெற மறுக்கிறார்கள். சந்தோஷமாக தேவவார்த்தையை ஏற்றுக்கொள்ளுங்கள், ஆவியானவரே இந்த சத்தியத்திற்குள் நடத்துவார்.

"...நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து ... ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான். அப். 22:16"

ஞானஸ்நானம் பெறாமல் இருந்து கொண்டு, என் பாவங்கள் இயேசுவால் கழுவப்பட்டன, நான் பரிசுத்தவான், நீதிமான், விசுவாசி என்றெல்லாம் அறிக்கையிடுகிறீர்களா? அது வேண்டுமானால் பெயரளவில் இருக்கலாம். உங்களை வைத்தே உங்களை வஞ்சிக்கும் சாத்தானின் நயவஞ்சகம் அது! தண்ணீரில் மூழ்கும்போது நம்முடைய பழைய பாவ மனுஷன் இயேசுவுடன்கூட மரித்து அடக்கம் பண்ணப்படுகிறான், தண்ணீரில் இருந்து வெளியேறும்போது பாவத்துக்கு மரித்த புதிய மனிதன் உயிர் பெற்று எழுகிறான். (நியாயப்பிரமாணத்துக்கு அடிமையாக இருந்த மனிதனின் கதை முடிகிறது, புதிய பிரமாண உரிமை பெற்ற மனிதனின் கதை ஆரம்பிக்கிறது) இதற்கு ஒப்பனையாக ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது. வெளியரங்கமாகப் பார்க்கும்போது இது ஒரு சடங்கைப் போலத் தோன்றுவதால், சாத்தானால் எளிதாக ஏமாற்றப்படுகிறார்கள்.

"ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே அனுப்பினார்; ... 1 கொரி. 1:17" – இந்த வசனத்தை எடுத்துக்கொண்டு ஞானஸ்நானம் தேவையில்லை என்கிறார்கள். சுவிசேஷம் அறிவிப்பதுதான் பிரதானமானது. சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும் ஒருவனை அவன் விசுவாசித்து ஏற்றுக் கொண்ட சத்தியமே அவனை ஞானஸ்நான சத்தியத்திற்குள்ளும் நடத்திவிடும். யாரும் அவனைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியமிருக்காது.

அப்படியானால் – "... நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, மத். 28:19" – என்ற சொல்லியிருக்கமாட்டாரே.

முடிவாக ... "... ஞானஸ்நானமானது, ... தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்தெழுதலினால் இரட்சிக்கிறது; ... 1 பேது. 3:21"

கைக்குழந்தையாக இருந்தபோது (விசுவாசிக்கத் தெரியாதபோது) தலைமேல் தண்ணீர் தெளித்து, பெயர் சூட்டின நாளை ஞானஸ்நானம் என்று தவறாக நினைத்துக் கொண்டு, இன்னும் நியாயப்பிரமாணத்தை விட்டு வெளியேறாமல், பாரம்பரியங்களுக்குள் உட்கார்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ... எத்தனையோ பேர் இதற்கு முன்னதாக அணியணியாக அணிவகுத்து

வந்து இந்த ஞானஸ்நான சத்தியத்தை பிரசங்கித்து விட்டு கடந்து போய்விட்டார்கள். எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது, சொல்லிவிட்டேன், உங்களுக்கு இனியொரு சந்தர்ப்பம் வராமலும் போகலாம்... சிந்தியுங்கள்.

ஞானஸ்நானம் எடுக்க யோசிப்பவர்கள் இன்னும் பழைய பிரமாணங்களின்படித்தான் போய்க்கொண்டிருக்கிறார்கள், இன்னும் திரை விலகவில்லை, சிலுவை ஆசீர்வாதங்களின் வெளிச்சம் கிடைக்கவில்லை. அப்படிப்பட்டவர்களுக்காக திரைவிலக்கப்பட்டவர்கள் ஜெபிப்போம்!

...நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்... எபி. 10:19

பரலோகம் ஆசீர்வாதங்களினால் நிரம்பி வழிந்தது. ஆசீர்வதிக்கப்பட்ட அந்தப் பரலோக இராஜ்ஜியத்திலுள்ள தேவன் இந்த உலகத்தையும் அதன் நிறைவையும் உருவாக்கும்போது, அங்கே இருந்ததைத்தான் பயன்படுத்தினார், அதனால்தான் எல்லாவற்றையும் நல்லது என்று கண்டார்.

மனிதனையும் அப்படியே ஆசீர்வாதமாகத்தான் உருவாக்கினார், ஆசீர்வதித்தார், தொடர்ச்சியாக ஆசீர்வாதங்களையே கொடுத்தார். ஏவாளின் புத்திக்கெட்டத்தனத்தை ஆதாம் தொடர்ந்த போது ... (ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே ... என்ற விபரீதச் சொல் வழக்கு புறஜாதிகளுக்குத் தெரிந்திருக்கிறது – ஆச்சரியப்படுகிறேன்.) ஒட்டுமொத்தமாக ஆசீர்வாதம் சாத்தானிடம் கைமாறிப்போனது. சரி, விடுங்கள்... அது நடந்து முடிந்த கதை, பழைய பஞ்சாங்கத்தைப் பாடி பிரயோஜனமில்லை. சாத்தானால் தரித்திரம் பிடித்துப்போன உலகத்தை, தேவன் இயேசு தன் சிலுவை மரணத்தினால் சரி செய்தார். மீண்டும் ஆசீர்வாதத்தை மனிதனுக்குள் நுழைய வைத்தார்.

ஆனால் ... சிலுவை தெரிகிறது... சிலுவையில் அறையப்பட்ட இயேசுவையும் தெரிகிறது...

இருந்தும் சத்தியம் தெரியவில்லை.

அதனால் மீண்டுமாக தேவபிள்ளைகள் தங்கள் சொத்து சுகங்களை மூட்டை கட்டி சாத்தானிடமே கொடுத்துவிட்டார்கள். இன்றைய நவீன ஆதாம்கள், நவீன ஏவாள்கள்!

ஆதியாகமம் ... எத்தனையோ முறை வாசித்த அதிகாரங்கள்தான், என்றாலும் நம் ஆவிக்குரிய கண்களால் வாசித்தோமானால், ஆச்சரியம் விழியைப் பிதுங்க வைக்கிறது.

தேவன் விதைத்த நல்ல கனிதரும் விருட்சங்கள் அழகாக குழையாடிக்கொண்டிருப்பதைக் கண்டு பொறுக்க முடியாத சாத்தான், உலகத்தைச் சுடுகாடாக மாற்ற சில நச்சு விதைகளை வார்த்தை வடிவில் மாற்றி எடுத்துக்கொண்டு வந்து ஏவாளின் இதயத்தில் விதைக்கிறான். அதுவரை ஏவாளின் கண்களுக்குச் சாதாரணமாக தெரிந்த மரம்; இப்போது சாத்தானின் **butter** போட்ட வார்த்தைகளைக் கேட்டதும் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க பழமாக தெரிகிறது!

கண்ணால் பார்க்கும் போது அழகாக இருக்கிறது, சரி. அது புசித்தால் மிக ருசியாக இருக்கும் என்று எப்படித் தெரியும்? சர்ப்பத்தின் வார்த்தைகள் அந்த அளவுக்கு அவளை வசப்படுத்தியதால்... அவனுடைய வார்த்தைகளை அந்த அளவுக்கு நம்பியதால்... இந்த பயங்கரம் உலகத்திற்கு வந்தது.

முதலில் சாத்தானின் நச்சு விதைகள் அவளுடைய காதுகளுக்குள் நுழைந்தது, அதை மூளை கிரகித்தது, அதைப்பற்றி யோசித்தது, கற்பனை சிறகடித்தது, கோட்டை கட்டியது, கோட்டை அரணானது, கடைசியாக சாத்தான் அந்த அரணுக்குள்ளாகவே ஆதாமையும், ஏவாளையும் தள்ளி கதவை அடைத்து, வெளியே பூட்டுப்போட்டு, சாவியை எடுத்துக் கொண்டுப் போய்விட்டான்! மூளை கண்ணுக்கு கட்டளையிட, கண் மரத்திலிருக்கும் பழத்தை நோக்கித் தாவியது, கூடவே மனம், கை, கால் தாவியது, குரங்காக மரத்தில் ஏறியது, குரங்கில் இருந்துதான் மனிதன் தோன்றினான் என்று **Darwin** ஐ **Theory** எழுத வைத்தது!

ஒரு மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதால் பாவம் எல்லோர் மேலும் காரிருள்

போல வந்து மூடியது. ஜென்ம பாவம் உருவெடுத்தது, குழந்தை வயிற்றில் உருவாகும்போதே அதனுடன் போய் ஒட்டிக் கொண்டது.

"...நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். சங். 51:5"

"... மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது... ஆதி. 8:21"

தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியேறும்போதே ஒன்றாக ஒட்டிப்பிறக்கும் இரட்டைக் குழந்தைகளைப் போல சேர்ந்தே பிறக்கிறது! அந்தோ பரிதாபம். **(How sad!)** தேவனால் இந்தக் கொடுமையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இந்த ஜென்ம பாவம்தான் பாவமனிதன் என்றழைக்கப்படுகிறான். விஷத்தில் ஊற வைக்கப்பட்ட சாத்தானின் வார்த்தைகள், ஏவாளின் நல்ல நிலமான இருதயத்தில் நுழைந்து இந்த விபரீதக் குழந்தையைப் பெற்றெடுத்தது! அந்தோ பரிதாபம். **(How sad!)**

மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,

"தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. ஆதி. 6:6"

ஆனால் தன்னுடன் ஒட்டிப் பிறக்கும் பாவத்தைப் பற்றி மனிதனுக்குக் கொஞ்சமும் கவலையில்லை, உணர்வில்லை, சுரணையில்லை, அதற்குத்தக்கவாறு தன்னை மாற்றியமைத்துக் கொண்டான்! கையில் பிஸ்கெட் வைத்திருக்கும் குழந்தையிடம் போய் அதைக் கேட்டு கையை நீட்டினால் வெடுக்கென்று கையைப் பின்னுக்கு இழுத்து பிஸ்கெட்டை மறைக்க முயற்சிக்கும்! பாவ சுபாவம்! கற்றுக் கொடுத்தது யார்? யாருமில்லை, அது கூடவே பிறந்தது!

இரட்டைக்குழந்தைகள் தாயின் வயிற்றில் இருக்கும்போது, கர்ப்பப்பையில் ஏற்படும் பிரச்சனைகளால் ஒட்டி பிறப்பதைக் கேள்விப்பட்டிருப்போம், செய்திகளில் பார்த்திருப்போம். இதுவரை எடுத்திருக்கும் கணக்கெடுப்பின்படி உலகத்தின் 50,000 இரட்டைக்குழந்தைகளில் ஒரு ஜோடி மட்டும் ஒட்டிப் பிறக்கிறதாம். அப்படி ஒட்டிப் பிறந்த 100 ஜோடிகளில் 1 ஜோடி மட்டும்தான் ஓராண்டுகள் தாண்டி உயிர்வாழ்கின்றன. அப்படியே உயிர் வாழ்ந்து வளர்ந்து வாழ்க்கையை முடித்த லட்சத்தில் ஒன்றும், கோடியில் ஒன்றும் இருக்கத்தான் செய்கின்றனர்.




இப்படிப்பட்ட பிறவிகளைப் பார்த்து நாம் ஆச்சரியப்படுகிறோம், வேதனைப்படுகிறோம், அனுதாபப்படுகிறோம், பலவிதமாகப் பேசி சம்பாஷிக்கின்றோம். ஆனால் இந்த உலகத்தில் பிறக்கும் எந்தவொரு மனிதனுடனும் பிறக்கும் போதே இதற்கொப்புமையான பாவம் ஒட்டிக்கொண்டு பிறக்கிறது என்பதைப் பற்றி யாரும் யோசிப்பதில்லை, ஆச்சரியப்படுவதுமில்லை, அதை வெட்டிவிட முயற்சி செய்வதுமில்லை.

இப்போது நாம் உதாரணத்திற்காகப் பார்க்கப்போவது 18 வயது வரை ஒட்டிய உடலுடன் வாழ்ந்து வரும் இரு (ஒரு!) சிறுமிகள்!

அமெரிக்கா ... பெற்றி, மைக் தம்பதிகளுக்கு 1990 மார்ச் 7ல் ஒட்டிப் பிறந்தன இரு பெண் குழந்தைகள். பிறந்தவுடன் வீரிட்டு அழுத இரண்டு குழந்தைகளைப் பார்த்து சந்தோஷப்பட முடியவில்லை அவர்களுக்கு... காரணம் அவற்றின் விசித்திரத் தோற்றம்!

இரண்டு தலை, மார்பு பகுதியில் இணைந்து, கீழே போகப்போக ஒன்றாகியிருந்தனர். முதுகெலும்பு, தண்டுவடம், குடல், இதயம் ஆகியவை இரண்டு. கருப்பை ஒன்று, நுரையீரல், கிட்னி மூன்று, கை கால் இரண்டுதான். முதலில் அதிர்ந்துபோய் புலம்பினாலும், நமக்குத் தேவன் தந்தது என்று தங்களையே ஆற்றித் தேற்றிக்கொண்டனர். அந்தக் குழந்தைகளின் துருதுரு அழகில் மயங்கினர்.

கர்ப்பத்திலேயே பாவம் ஆரம்பிக்கிறது, பிறக்கும்போதே ஒட்டிப் பிறக்கிறது. நியாயப்பிரமாண காவலில் குழந்தை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறது. கூடவே ஒட்டிக் கொண்டிருக்கும் கண்ணுக்குத் தெரியாத பாவ மனுஷன்! ஒரு விந்தையான காரியம்.

பிறக்கும் போதே குழந்தையின் ஆவிக்குரிய கண்கள் குருடாக இருப்பதால் இருட்டைப் பார்த்து அழுகிறது! சிறு குழந்தைகளின் பாவத்தை எளிதாக எடுத்துக் கொண்டு அது அவர்களின் சுபாவம் **(nature)** என்று விட்டு விடுகின்றனர்.

பெற்றோரைவிட அதிக நடைமுறைக் கஷ்டத்தை அனுபவிக்கும் இச்சிறுமிகள் (ஆப்பி – பிரிட்னி) இயற்கைக்கு மாறான இந்த நிலைக்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொண்டதுதான் அதிசயம்! வளர, வளர அவர்களின் கஷ்டங்களும் சேர்ந்தே வளர்ந்தன. படுக்கையறை என்றாலும், குளியலறை என்றாலும், கழிவறை என்றாலும் சேர்ந்தே செல்ல வேண்டும், நாம் நினைப்பது போல் அவ்வளவு எளிதல்ல.

நாளொரு மேனியாக பாவ மனுஷனும் கூடவே சேர்ந்து வளர்வதால் அது மனித சுபாவமாகிப் போனது. அதற்கிசைவாக தங்களை மாற்றிக் கொள்கின்றனர். தேவன் உருவாக்கிய ஆவியில் இணைந்திருக்கும் மனசாட்சி அவ்வப்போது அபாய எச்சரிப்பினைக் **(Red signal)** காட்டினாலும் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலை. இயேசுவை ஏற்றுக் கொள்ளும்வரை விடுபட முடியாத சூழ்நிலை, எந்த நம்பிக்கையும் கிடையாது... நியாயப்பிரமாணத்தினாலும் விடுதலையைப் பெற முடியாது. ஆனால் அப்படியே ஓடிக்கொண்டிருக்கிறார்கள்; இயேசு கிறிஸ்து சந்திக்க வரும் வரை!

உடம்பின் இடது பகுதி பிரிட்னிக்கு உரியது, வலது பகுதி ஆபிகெய்ல். இருவருக்கும் அவரவர் பகுதி உறுப்புக்களை மட்டுமே கட்டுப்படுத்த முடியும், அதாவது ஒரு கை, ஒரு காலை மட்டும். அடுத்த பகுதி உறுப்பு இருக்கும் உணர்வே இருவருக்கும் இருக்காது!

நடக்கும்போது கூட இருவரும் கவனமான மாற்றி மாற்றி காலடி எடுத்து வைத்தால்தான் முடியும்.

நிர்ப்பந்தம்... ஆவிக்கு விரோதமாக மாமிசமும், மாமிசத்திற்கு விரோதமாக ஆவியும் போராடுகிறது, ஓநாய் காட்டுக்கு இழுக்கிறது, முதலை தண்ணீருக்குள் இழுக்கிறது.

கொஞ்சம் கூனல் நடையாக இருந்தாலும் வேகமாக நடக்கிறார்கள், ஓடுகிறார்கள், சைக்கிள் ஓட்டுகிறார்கள். இதற்கெல்லாம் விசேஷப் பயிற்சிகள் எதுவும் கிடையாது, அவர்களாகவே கற்றுக் கொண்டிருக்கிறார்கள்! (தேவனுடைய கிருபை!)

கூடைப்பந்து, வாலிபால் கலக்குகிறார்கள், தனித்தனியாக கார் ஓட்டுநர் பயிற்சி பெற்று லைசென்சும் வைத்திருக்கிறார்கள். தனிமை கிடையாது, எப்போதும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டும், சுமந்துக்கொண்டும் இருக்க வேண்டும். ஒருவருக்கு தூக்கம் வந்தால், அடுத்தவருக்கு **TV** பார்க்க வேண்டும் என்று தோன்றும், ஒருத்தி படித்துக் கொண்டிருக்கும்போது, அடுத்தவளுக்கு பசி எடுக்கும்! தன் கூடப்பிறந்த தம்பி தங்கையுடன் சரிக்குச்சரியாக விளையாடுகிறார்கள். படிப்பிலும் சோடை போகவில்லை, ஒரே நேரத்தில் பிரிட்னி இடது கையாலும், அபிகெய்ல் வலது கையாலும் கடகடவென்று எழுதுவதைப் பார்க்கும் ஆசிரியர்கள் வியந்து போகிறார்கள். ஆனால் யாரும் தங்கள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்துவதையோ, அக்கறை அனுதாபம் காட்டுவதையோ இவர்கள் விரும்புவதில்லை.

ஒரே உடம்புடன் ஒற்றுமைக்கு இலக்கணமாக இருக்கும் இந்த சகோதரிகளின் விருப்பங்கள், நினைவுகள், ஆசைகள் முற்றிலும் வேறுபட்டவை. சில நேரங்களில் இதனால் காராசாரமான விவாதங்கள் வந்து, சண்டைகளும் வருவதுண்டாம்!

சுவிசேஷத்தை யாராவது அறிவிக்கக் கேட்கும் போது அவ்வப்போது உணர்வு வரும், என்றாலும் விதைகளைப் பறவைகள் பொறுக்கிவிடுவதால், வெறும் வெட்டாந்தரையான மணல் பரப்புதான் மிச்சம்! ஆண்டாண்டு காலமாக இப்படிச் சாத்தானால் வெட்டவெளியாக்கப்பட்ட வயல்வெளிகள் கட்டாந்தரையாக வானம் பார்க்கின்றன!

நாங்கள் வித்தியாசமானவர்கள், எனக்கு **pink** பிடித்த நிறம், அவளுக்கு வேறொன்று. ஆனால் இருப்பது ஒரு உடம்புதானே, அதனால் எனக்கு பிடித்த நிறத்தில் ஒரு நாள் டிரஸ் அணிவோம், அடுத்த நாள் அவளுக்கு பிடித்த மாதிரி, என்று சிரிக்கிறாள் அபிகெய்ல். அப்படியே பிடித்தமான உணவுகளும் வேறுபட்டவை. தனித்தனி தட்டு என்றாலும் ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொள்கின்றனர்.

தேவனுக்குப் பிரியமாக நடக்க வேண்டும் என்று முயற்சி எடுக்கும்போதெல்லாம், கூடவே ஒட்டித்திரியும் கண்ணுக்குத் தெரியாத அந்த பாவத்தின் மாய உருவம் அதை சாத்தியமற்றதாக்குகிறது.

அமெரிக்காவில் மிகப் பிரபலமான இவர்கள் பிரபலமான **Opera Winpray Show, Discovery Channel, Learning Channel** நிகழ்ச்சிகளில் தோன்றியிருக்கின்றனர். இவர்களைப் பார்ப்பவர்களுக்கெல்லாம் தோன்றும் ஒரே விஷயம் "ஏன் இந்த அவஸ்தை, இவர்களைப் பிரித்து விடலாமே" என்பதுதான்! ஆனால் இவர்கள் பிறந்ததுமே இவர்களைப் பிரிப்பதில்லை என்று முடிவெடுத்துவிட்டனர் இவர்களது பெற்றோர். ஒரு குழந்தைக்காக இன்னொன்றைத் தியாகம் செய்யலாம் என்று சிலர் சொன்ன ஆலோசனைகளையும் தள்ளிவிட்டனர். ஆனால் இவர்கள் விஷயத்தில், பிரித்தால் உயிர்பிழைப்பதற்கு 1 % கூட வாய்ப்பில்லையென்பதால் இப்படியே இருந்துவிட்டு போகட்டும் என்றும் மருத்துவர்களும் பெற்றோரின் விருப்பத்திற்கே விட்டுவிட்டனர்.

பாவத்தை விட்டு ஓய்ந்திருக்க, பரிசுத்தமாக வாழ தேவனற்ற உலக மார்க்கத்தார் எத்தனையோ வகையான முயற்சிகளை எடுத்துப்பார்க்கின்றனர். புண்ணியஸ்தலத்திற்கு நடந்தே செல்கின்றனர்... தீயில் நடக்கின்றனர்... தவம் செய்கின்றனர்... தியானம் பழகுகிறார்கள்... இன்னும் பல நவீன யுக்திகளைக் கையாளுகின்றனர். என்றாலும் பாவ மனிதனின் பிடிவாதம் வலுக்கிறது! ஏன் அப்படி? அவர்களுக்கு இந்த நவீன யுக்திகளை ஆலோசனையாகக் கொடுப்பவனே அவன்தானே! (ஆடு நனைகிறதே என்று நரி கவலைப்பட்டதாம்! பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டதாம் கருடா சௌக்கியமா? என்று!) பாவத்திற்குக் காரணமான சாத்தானே எப்படி பாவத்திலிருந்து விடுதலை தரமுடியும்? உணர்வில்லாத ஜனங்கள்! நாளடைவில் பாவங்கள் சுபாவம் **(casual)** ஆகிப்போனது. யாரும் யாரையும் கண்டிப்பதில்லை, கண்டுகொள்வதுமில்லை.

இவர்கள் இப்படியிருப்பதில் எங்களுக்குத் துளியும் வருத்தம் இல்லையென்கின்றனர் பெற்றோர். என் பொண்ணுங்கதான் உலகத்திலேயே மிக அழகானவர்கள் என்கிறார் அன்பு அம்மா பெற்றி! சாதாரணமான பெண்களைப் போலவே இவர்கள் மனதிலும் படிப்பு, பட்டம், கல்யாணம், வாழ்க்கை, குழந்தைகள் என்ற கனவுகள் மிதக்கின்றன!

இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல், ஞானஸ்நானமும் பெறாமல் பெயரளவில் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்டு, பரலோகக் கனவுகளோடு காலத்தை கடத்திக் கொண்டிருக்கும் இவர்களின் வாழ்க்கையில் இனிமேல் ஒரு நம்பிக்கை ஒளி வீசுமா? நிச்சயமாக...

"இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது ... மத். 4:15"

ஆதாம் தன்னுடைய மீறுதலால் பாவத்துக்கு வாசலாக மாறினான். சாத்தானிடமிருந்த பாவம் பாம்பு போல ஊர்ந்து அந்த வாசல் வழியாக பூமியில் நுழைந்தது. பாவம் செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது. வயிற்றிலிருக்கும் குழந்தையையும் ஆண்டு கொண்டது. பிறக்கும்போது ஒட்டிக்கொண்டு பிறந்தது, பிரிப்பது என்பது சாத்தியமற்ற ஒன்றாகிப்போனது. சாத்தியமில்லாததை

சாத்தியமாக்கவே இயேசு பிறந்தார். சிலுவையில் பாவ மனிதனைக் கொன்று மனுக்குலத்தை விடுதலையாக்கினார். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படும் ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் பாவ மனிதன் பிரிந்து சென்று விடுகிறான். ஞானஸ்நானம் பெறும்போது தண்ணீருக்குள் மூழ்குகிறோம், அப்போது பழைய பாவ மனிதன் புதைக்கப்படுகிறான். வெளியே வரும்போது பாவம் நீங்கி விடுதலையான புதிய மனிதன் விடுதலையோடு எழும்பும் அற்புதக் காட்சி! இரட்சிக்கப்பட்டபின்பும் ஞானஸ்நானம் பெறாமல் காலத்தை ஓட்டுபவர்கள் நாளடைவில் பின்மாற்றத்திற்குள் போய்விடுவதன் காரணம்; அவர்களுடைய பாவ மனிதன் புதைக்கப்படாமல் இருப்பதுதான். மீண்டும் சாத்தான் உயிரூட்டிவிடுகிறான். சத்தியத்திற்குக் கீழ்ப்படிய மறுக்கும் பிடிவாதத்திற்கு இடம் கொடுக்காமல் எச்சரிக்கையாயிருப்போம்!

## புதிய பிரமாணம் விதைப்பைப் பற்றி என்ன சொல்லுகிறது?

ஒரு புதிய கண்ணோட்டம்... இதுவரை விதைத்ததை அறுவடை செய்துதான் ஆக வேண்டும் என்பதைப் பார்த்தோம். சரி, தெரியாமல் விதைத்து விட்டோம், விமோசனமே இல்லையா? நம்பிக்கையில்லாத ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை தேவையா? நம்பிக்கையில்லாதவன் எப்படி ஒரு நல்ல கிறிஸ்தவனாக இருக்க முடியும்?

இயேசு கிறிஸ்து சிலுவையில் ஏற்படுத்திய புதிய விசுவாசப் பிரமாணத்தின்படி நிச்சயமாகவே தவறான, மோசமான விஷ விதைகளை விதைத்தவர்களுக்கும் நம்பிக்கை உண்டு. முதல் மனிதன் ஆதாம் தன் அறியாமையால் சாத்தானிடமிருந்து பெற்ற ஒரு விஷ விதையை விதைக்க, பூமியின் மீது சாபம் விளைந்தது. பூமி முட்களையும், கள்ளிச்செடியையும் முளைப்பித்தது. பூமியில் இருந்து சாபத்தை அகற்ற தேவன் ஞானமாக தன்னுடைய ஒரே குமாரன் மூலமாக செய்த காரியத்தை ஆராய்ந்தால் நமக்குப் பிரமிப்பு ஏற்படும். சாப விதையின் விளைச்சல் அகற்றப்பட்டது, விசுவாசிக்காதவர்களின் காட்டில் இன்னும் விளைந்து கொண்டுதான் இருக்கிறது. விசுவாசித்தால் அவைகள் சுட்டெரிக்கப்படுவதைப் பார்க்க முடியும். “என் எல்லைகளுக்குள்ளாக கிடக்கும், அறியாமையால் விதைக்கப்பட்ட விஷ விதைகளை இயேசுவின் நாமத்தில் பிடுங்கி எறிகிறேன்” என்று அறிக்கை செய்யலாம்.

“தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். நீதி. 28:13”

தேவனுடைய பிள்ளைகளான பின்பு செய்யும் பாவங்களை உடனுக்குடன் அறிக்கை செய்து விட்டுவிடவேண்டும். அப்படி அறிக்கை செய்யாவிட்டால் அந்த பாவ விதை வேரூன்றி விடுகிறது. பிறகு வாழ முடியாத அளவுக்கு பெருங்காடாக நம் வாழ்க்கையின் எல்லைகளை ஆக்கிரமித்துவிடுகிறது.

தேவன் தந்த தரிசனக் கருவான “விதைகள்” என்ற தலைப்பிலான சத்தியங்களை வசன வெளிச்சத்தில் ஆராய்ந்த போது இன்னும் ஆழங்களில் இருந்த புதையல்கள் அகப்பட்டது.

“நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். 1 கொரி. 13:11” என்று சொன்ன பவுலின் அனுபவம்தான் எனக்கும் நேரிட்டது. என்னிடத்தில் ஒரு வளர்ச்சியைப் பார்க்க முடிந்தது. விதைகள்–பகுதி 1–லிருந்து வரிசையாக வாசித்துப் பார்த்தால் அதைக் கவனிக்க முடியும். குழந்தையும் பிதாவாகிய தேவனின் பிள்ளைதான், வாலிபனும் பிள்ளைதான், கிழவனும் பிள்ளைதான். எல்லாத் தரப்பினருக்கும் ஆவியானவர் வெளிப்பாடுகளைத் தரத்தான் செய்கிறார், அவரிடம் பாரபட்சமில்லை. உள்ளான ஆவிக்குரிய மனிதனின் வளர்ச்சிக்கேற்ப, வயதிற்கேற்ற அவர்களை நடத்தும் விதத்தில் வித்தியாசம் இருக்கலாம். 2 வயது குழந்தையை இடுப்பில் தூக்கி வைக்கிறோம், ஆனால் 22 வயது மகனை அப்படித் தூக்கி வைக்க முடியாது, (தூக்கவும் விடமாட்டான்!) ஆனால் பாசம் ஒன்றுதான்!

“... குழந்தையாயிருக்கிறபடியினால் நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். எபி. 5:13”

வசனத்தில் ஒரே நாளில் தேறிவிட முடியாது, கொஞ்சம் கொஞ்சமாக அதனோடு பழகி பரிபூரணமாக கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கேற்றபடிதான் பரிசுத்தாவியானவரின் வெளிப்பாடுகளும் இருக்கும். நான் குழந்தையாக இருக்கிறேன் என்பதற்காக எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை நான் சொல்லாமல் இருக்கக் கூடாதே! அதனால் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை எனக்குத் தெரிந்த மழலையில் சொல்ல ஆரம்பித்தேன். அம்மாவுக்கு 2 மாதக்குழந்தையின் மழலையும் புரியும். (பிதாவாகிய தேவன் நமக்கு அப்பா மாத்திரமல்ல, அம்மாவும் கூடத்தான்!) (ஏசா. 49:15)

வேதத்திலும் பழைய ஏற்பாட்டின் பழைய பிரமாணங்கள் இருக்கின்றன, பழைய ஏற்பாடும் சேர்த்துத்தான் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. புதிய பிரமாணம் பிறந்தவுடன், பழைய பிரமாணம் ஒழிக்கப்பட்டது, என்றாலும் நாம் வாசித்து அதையும் தியானிக்க வேண்டும் என்பதற்காக நமக்குத் தரப்பட்டிருக்கிறது, ஏன்? நாம் தேடிச் சென்று ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான்! மறைபொருள்களைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். புதையலை யாரும் வெளியே வைக்க மாட்டார்கள், பல அடி ஆழமாக குழி தோண்டி புதைத்து வைப்பார்கள். பின்வரும் சந்ததியினரின் கடப்பாறையில் அது எதிர்பாராமல் தட்டுப்படும்போது வெளிப்படுகிறது. ஆழத்தில் தங்கம் சுரங்கத்திற்குள்தான் இருக்கிறது, அவை வெட்டி எடுக்கப்படுகிறது. தங்கம் பாளம் பாளமாக ரோட்டோரங்களில் கிடந்தால் அதற்கு மதிப்பிருக்குமா? செங்கல்லுக்கு இருக்கும் மதிப்புதான் அதற்கும் இருக்கும்! புதையலைத் தேடிப்போன வழியில் ஏற்பட்ட அனுபவங்கள்தான் விதைகள் புத்தகங்கள்!

தங்கச் சுரங்கங்கள் 7.5 கி.மீ. ஆழங்கள்வரைக்கூட வெட்டப்படுகின்றன. மோரோ வெல்கோ **(Moro Wellhoo)** என்ற சுரங்கத்தைப் பார்வையிட்ட (2,300 கி.மீ. ஆழமுள்ளது) பிரெஞ்சு எழுத்தாளர் டாக்டர் லூக் டூர்ட்டேன் **(Dr. Luke Doordaan)** எழுதுகிறார்.

புகழ்பெற்ற தங்கச் சுரங்கங்கள் ரியோ டி ஜெனிரோவிலிருந்து **(Rio De Jeniro)** சுமார் 400 கி.மீ. தூரத்தில் இருக்கின்றன. சில சுற்றுலாப் பயணிகள் அங்கே போகிறார்கள். அவர்களுக்கு வழிகாட்டப்படுகிறது, விளக்கத்தோடு, எச்சரிப்பும் கொடுக்கப்படுகிறது.

16 மணி நேர ரயில் பயணத்திற்குப் பிறகு, காடுகளால் சூழப்பட்ட ஆழமான பள்ளத்தாக்குக்குள் இறங்குகிறார்கள். தங்க அடுக்கு கீழே சாய்ந்துச் செல்கிறது. ஆறாவது படியிலிருந்து சுரங்கம் ஆரம்பமாகிறது. கித்தான் மேலங்கி, தோல்சட்டை அணிந்துக் கொண்டு மிக எச்சரிக்கையுடன்இருக்கிறார்கள். சுரங்கத் தலைவர் ஒருவர் கூட வருகிறார். காற்றோட்ட அமைப்பிலிருந்து வரும், ஜீரோவிற்கு மேல் நான்கு டிகிரியாக இருக்கும் குளிர் காற்றில் வெடவெடக்கின்றனர்.

முதல் 700 மீ. குடைவுக் கிணற்றின் வழியாக குறுகலான ஓர் உலோகக் கூண்டில் சென்று, இரண்டாவது குடைவுக்கு வருகின்றனர். பிறகு அடுத்த குடைவுக் கிணறு வழியாக கீழே இறங்குகிறார்கள். கடல் மட்டத்திற்கு கீழ் வந்துவிட்டார்கள், காற்று அதிக வெப்பமடைகிறது.

அடுத்த குடைவுக்கிணற்றின் காற்று முகத்தை சுடுகிறது, வியர்வை வழிந்தோடுகிறது. தணிவான கூரைக்கு அடியில் குனிந்து, ஓலமிடும் இயந்திரங்களை நோக்கி நடக்கிறார்கள். அங்கே கண்ட காட்சி ... அடர்த்தியான புழுதிப் படலங்களுக்கிடையே சுரங்கத் தொழிலாளர்கள் இடுப்புக்கு மேல் துணி எதுவுமின்றி வியர்வை வழிந்தோட வேலை செய்கிறார்கள். முடிவின்றி ஒவ்வொருவரின் கைக்கும் மாறிச் செல்கிறது குளிர்த்தண்ணீர் குடுவை. வெட்டிக் கீழே தள்ளப்படும் அந்த கனிப்பாளங்களின் வெப்பநிலை 57 டிகிரி. தொட்டுவிடாதீர்கள் என்ற எச்சரிக்கப்படுகிறார்கள்.

சகிக்க முடியாத இந்தப் பயங்கரத்தால் கிடைப்பதுதான் என்ன? நாள் ஒன்றுக்கு சுமார் பத்து கிலோகிராம் தங்கம்! நகைக்கடைக்குப் போய் எந்தக் கஷ்டமும் படாமல், பணம் கொடுத்து, தங்க நகையை வாங்கி அணிந்து கொள்ளும் எத்தனை பேருக்கு இந்த உண்மை தெரியும். எங்கோ, முகம் தெரியாத ஒரு தொழிலாளியின் வியர்வையில் குளித்து வந்தது தான் இந்தத் தங்கம்! நியாயப்படி நகை அணிகிற ஒவ்வொருவரும் இந்த வேதனையை அனுபவிக்க வேண்டும்.

நாம் அனுபவிக்க வேண்டியப் பாடுகள் எல்லாவற்றையும் தேவன் இயேசு அனுபவித்தாரே.

நாம் இனிமேலும் அவற்றை அனுபவிக்கக் கூடாது என்பதற்காகத்தான். அதுமாத்திரமல்ல, அதற்குப் பதிலாக நன்மையையும், ஆசீர்வாதங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான், நாம் சிலுவை சுமக்கக்கூடாது என்பதற்காகத்தான்!

தங்கச் சுரங்கத் தொழிலாளர்களைப் போல் நாம் வியர்வையில் நனைய வேண்டியதில்லை. எந்தக் கிரியையும் இல்லாமல் கிருபையாய், மிக எளிதான விசுவாசத்தால், அதை அறிக்கை செய்வதால் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறோம். (ஆசீர்வாதங்கள் என்றால், வேதத்தின் அடிப்படையிலான நன்மையான காரியங்கள் எல்லாம் – உலகத்தில் உள்ள அனைத்து நன்மைகளும் – உ.ம்.: விடுதலை, சுகம், சந்தோஷமான சௌகரியமான வாழ்க்கை, அதற்குத் தேவையான பணம், தங்க நகைகள், கார்கள், வீடுகள், தோட்டங்கள், லேப்டாப், செல்போன், டன்லப் மெத்தை, எலக்ட்ரிக்கல் குக்கர், டேபிள் டாப் கிரைண்டர், ஃபோர்க், கேஸ் லைட்டர், குண்டூசி, அதைவிடச் சிறியதான கண்ணுக்குத் தெரியாதப் பொருட்கள் வரை... இடையிடையே தேவையானதைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.)

தேவன் எல்லாவற்றையும் நமக்காகத்தான் படைத்தார். வேலை வெட்டியில்லாமல், நேரம் போகாமல் எதையும் உருவாக்கவில்லை. நாம் நன்மையான எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் படைத்தார், எல்லாவற்றையும் நன்மையானது என்று கண்டார், ஆசீர்வதித்தார். அப்படியிருக்க, தீண்டாதே, ருசிபாராதே, தொடாதே, தீட்டு, என்பதான வீணான உபதேசங்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டிய அவசியமென்ன?

இரட்சிக்கப்படும் ஒவ்வொரு மனிதனையும் தேவன் சரியான வழியில்தான் நிறுத்துகிறார். அதே வழியில் போய்க்கொண்டிருந்திருப்போமானால் சரியான இலக்கில் பயணித்திருந்திருப்போம். நம் அறியாமையால், சத்தியத்தை பற்றிக் கொண்டிருக்க மனதில்லாமல் போனபடியால், குழப்படி உபதேசங்களால், பாதை மாறிப் போனோம், கடைசியில் எங்கேயோ வந்து நின்று கொண்டிருக்கிறோம்.

அறிஞர் பிளோட்டோவை ஒருவர் தேடி வந்தார். என் மகனுக்கு கல்வி கற்றுக்கொடுக்க எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கிறீர்கள்? என்று பிளேட்டோவிடம் கேட்டார். 500 வெள்ளிகள் என்று பிளேட்டோ சொன்னார். அடேயப்பா, இவ்வளவு பணம் என்னத்துக்கு? இதைவிட குறைந்த விலையில் ஒரு அடிமையையே வாங்கிவிடலாமே என்றார் வந்தவர்.

உண்மை, இந்த தொகைக்கு ஒரு அடிமையை வாங்கிவிடலாம்தான். அப்போது உங்கள் மகனையும் சேர்த்து இரண்டு அடிமைகள் உங்கள் வீட்டில் இருப்பார்கள்! என்றார் பிளோட்டோ நறுக்கென்று, நச்சென்று! சத்தியத்தை அறிந்து கொள்ள விருப்பமில்லாத மனது... சாக்குப் போக்குச் சொல்லி வேதாந்தம் பேசித் திரிந்தது. கிருபையைவிட்டு விழுந்து, மீண்டும் நியாயப்பிரமாண நுகத்தடியை கழுத்தின் மேல் தூக்கி வைத்துக் கொண்டது! பழைய ரசமே போதுமென்றது! தங்கத்தைக் கையால் தொடமாட்டேன் என்றது! தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட வசனத்தால் ஏற்பட்ட தவறான கிரியைகள். சாத்தானுக்கு வசதியாகிப் போனது, அவன் தங்கத்தை அள்ளிக் கொண்டு போய் விக்கிரக கோவில் கட்டி, தங்க மூலாம் பூசி, தங்கச் சிலை வைத்துக்கொண்டிருக்கிறான். அதற்கு பட்டுச்சேலை கட்டி பூவும் சூட்டுகிறான். இங்கே நஷ்டப்பட்டது யார்? சிந்திக்க மறந்து மூளையை துருப்பிடிக்கவிட்ட தேவப்பிள்ளைகள்தானே!

சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று வாஞ்சையுள்ளவர்களுக்குத் தேவன் இக்கடைசிக்காலங்களில் வெளிப்படுத்தியிருக்கும் காரியங்களைச் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள மனதில்லை, தயக்கம், பயம், சந்தேகம் ... கடைசியில் எதிர்க்க ஆரம்பிக்கிறார்கள்.

தங்கம் யாருடையது?

தேவனே விதையிட்டு விளையச் செய்கிறார். (ஆதி. 2:11)

பொன் நல்லது, கெட்டதோ, தொடக்கூடாததோ அல்ல. (ஆதி. 2:12)

விசுவாசிகளின் தகப்பன் ஆபிரகாம் நிறைய தங்கம் வைத்திருந்தார். (ஆதி. 13:2)

நகை போடப்படுகிறது. ஆதி. 24:22

தேவன் ஆசீர்வதிக்கும்போது பொன்னைத் தருகிறார். (ஆதி. 24:35)

நகை வாங்குவதுதான் வாக்குத்தத்தம்! (யாத். 3:22)

தேவாலயம் முழுவதும் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டது.

(யாத். 25 – 31 வரையிலான அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள்.)

இங்கே முக்கியமான ஒரு காரியத்தை அறியத் தருகிறோம். நகைகளைக் கழட்டுவதோ, கழட்டச் சொல்வதோ தேவன் அல்ல. அதைவிட முக்கியமான காரியம் நகைகளைக் கழட்டுவதும், கழட்டச் சொல்வதும் சாத்தான் என்பதைப் பார்க்கப்போகிறோம். கவனியுங்கள்:

“ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள். ... அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். ... ஐயோ இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள். (யாத். 32:3, 4, 31)”

இனிமேலாவது தேவன் கழட்டச் சொன்னார், கழற்றிப் போட்டார் என்று சொல்லாதிருப்போமாக.

தங்கக் கிரீடம் நமக்கு! (எஸ்றா. 8:15)

ஆறுதல் ... (யோபு. 42:11)

காணிக்கையாகத் தங்கத்தைக் கொடுக்கலாம். (சங். 72:15)

பொன்னோடு புறப்படச் செய்கிறார். (சங். 105:37)

“வெள்ளிப் பொட்டுகளுள்ள பொன் ஆபரணங்களை உனக்குப் பண்ணுவோம். உன். 1:11”

நம் பிள்ளைகளுக்கும் நகைகளைச் செய்வோம். (ஏசா. 60:9)

நாம் இழந்த (விதைத்த) வெண்கலத்திற்குப் பதிலாக அதே அளவு எடையுடைய தங்கம் கிடைக்கும், விளைச்சலாக! (ஏசா. 60:17)

நகைக் கடைகளை ஏற்படுத்துவோம். (ஏசா. 27:22)

தேவ தூதர்களையும் மூடும் பொன்னாடை. (எசே. 28:13)

தங்கத்தை பெருகச் செய்கிறவர். (ஓசி. 2:8)

பொன் தேவனுடையது. (ஆகா.2:8)

இயேசு பிறந்தவுடன் முதலில் கொடுக்கப்பட்ட பரிசு தங்கம்தான்! (மத். 2:11)

ஆசீர்வதிக்கப்பட பொன்னை வாங்க ஆலோசனை. (வெளி. 3:18)

வசனங்களின் ஞான அர்த்தத்தை மட்டும்தான் எடுக்க வேண்டும் என்று வாதாடுபவர்களுக்கு: ஞான அர்த்தத்தை எடுப்போம், நல்லது, அதை நித்தியத்திற்கான காரியங்களுக்கு உபயோகப்படுத்துவோம். எழுத்தின்படியான அர்த்தத்தையும் எடுத்துக் கொள்வோம், அதை இவ்வுலக வாழ்க்கைக்குப் பயன்படுத்துவோம். நாம் இன்னும் இந்த உலகத்தில்தான் இருக்கிறோம், பறந்துவிடவில்லை. இந்த உலகத்தின் வாழ்க்கைதான் நம்மை பரலோகத்திற்கு தயாராக்குகிறது.

இந்த உலகத்தையும், அதின் நிறைவையும், பொன்னையும், சகல ஆசீர்வாதங்களையும் தேவன் அர்த்தமில்லாமல் உருவாக்கவில்லை, ஒரு நோக்கத்துடனேயே உருவாக்கினார். வாழ்வே மாயம் என்று புலம்பவேண்டாம், வாழ்க்கை அர்த்தம் நிறைந்தது. அதில் ஆசீர்வாதத்தை ஊற்றி,

அது நிரம்பி வழியும்படிச் செய்ய, தேவனுக்கு இடம் கொடுப்போம்.

தேவ இராஜ்ஜியத்தினிமித்தம் நாம் அறியாமையினால் சில காரியங்களை இழந்திருந்தாலும், தேவன் அவைகளை விதைகளாக அங்கீகரிக்கிறார். அவைகள் வீணாகப் போகப்போவதில்லை, மண்ணைப் பொத்துக்கொண்டு வெளியேறும் வீரிய விதை!

பழைய ஏற்பாட்டின் பழைய பிரமாணக் காலத்திலும் தேவ ஜனங்கள் அவருடைய வெளிச்சத்தில், அவருக்கு பிரியமானவர்களாக வாழத்தான் செய்தார்கள். ஆனால் பூரணத்துவம் கிடைக்கவில்லை. சிக்கிமுக்கி கல்லினால் தீயைப் பற்ற வைத்தான் ஆதி மனிதன்... விறகு கட்டைகளில் குளிர்காய்ந்தான்... மண்ணெண்ணெய் விளக்கைப் பற்ற வைத்தான்... மின்சார பல்ப் வந்தது... இன்று லேசர் ஒளிக்கற்றைகள்! மாறவில்லையா? எல்லாக்காரியத்தையும் மனுக்குலம் ஏற்றுக் கொள்ளவில்லையா? ஏற்றுக்கொள்ளுவோம் தேவன் இயேசுவின் புதிய திட்டங்களை.... நாம் வாழ்ந்திருக்க... அநேகரை வாழ வைக்க... அது உதவியாயிருக்கும். அதுதான் தேவன் இயேசுவின் திட்டமாயிருந்தது. புதிய பிரமாணத்தின் எந்தத் திசையில் பார்த்தாலும் நம் அருமைத் தேவனுடைய **Soft corners!** பிடித்துக் கொள்ளுவோம் இதை!

நாம் ஆசீர்வாதமாக இருப்பதே தேவனுடைய விருப்பம் என்பதைப் புரிந்து கொண்ட சிலர் சத்தியத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தவறான வழியில் போய்விடுவதும் உண்டு.

"நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்தரம் வைத்துப்போகிறான்; பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்துவைக்கப்படும். நீதி. 13:22"

ஆரம்பக்காலத்தில் இந்த வசனத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட நாங்கள் லாட்டரி டிக்கெட் வாங்கியதுண்டு! இது உண்மையாயிருந்தால் எல்லா நீதிமான்களுக்கும் லாட்டரியில் பணம் கொட்டோ கொட்டென்று கொட்டியிருக்குமே! ஆனால் ஒரு நீதிமானுக்குக் கூட லாட்டரி டிக்கெட் விழவில்லை! யார் சொன்னது... விழுந்திருக்கிறதே, என்று நீங்கள் யோசிப்பது தெரிகிறது, அப்படி லாட்டரி அடித்தவர் நீதிமான் இல்லை, பெயர்க்கிறிஸ்தவர். கையில் இருந்த பணம் காலியானதும் இப்போது ஒரு காய்ந்த ரொட்டி கூட வாங்கக் காசில்லாமல் லாட்டரி அடித்துக்கொண்டிருக்கிறார்!

அப்படியானால் ஏன் வசனத்தில் அப்படி இருக்கிறது? நல்லவன் (நீதிமான்) தன் கைகளினால் நலமான வேலைகளைச் செய்து பிரயாசப்படுகிறான், கர்த்தரை நம்புகிறான், வாக்குத்தத்த ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது, செழிக்கிறான், தனக்குப் போக மீதியான சொத்தை தன் பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கு வைத்துவிட்டு மரிக்கிறான். பாவியும் ஆஸ்தியை சேர்க்கிறான். பாவி இரட்சிக்கப்படாமல் இருப்பதால் அவனுக்கு இயேசுவைத் தெரியாது, அவருடைய ஆசீர்வாதங்களைப் பற்றியும் எதுவும் தெரியாது. அதனால் மனம் போன போக்கில் சரியாகவோ, தவறாகவோ எப்படியோ சம்பாதிக்கிறான். பிள்ளைகள் செலவழிக்கத் தெரியாமல் மனம் போன போக்கில் பணத்தை செலவழிக்கிறார்கள். நாளடைவில் பணம் குறைய ஆரம்பிக்கிறது, அஜாக்கிரதையின் வாசல் வழியாக வெளியேறுகிறது. வெளியேறிய பணம் எங்கே போகிறது? தேவனை விசுவாசித்து, கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் என்ற வாக்குத்தத்தத்தின் வாசலோரமாக காத்திருக்கும் தேவபிள்ளையின் எல்லைக்குள்ளாக நுழைகிறது. அப்படியே தீட்டுடன் நுழைவதில்லை, வசனத்தால் புடமிடப்பட்டு சுத்தமாகித்தான் நுழைகிறது. இப்படியாக பாவியின் ஆசீர்வாதம் ஒரு மறைவான யுக்தியின் மூலமாக நீதிமானைச் சென்றடைகிறது, இது தேவ திட்டம்!

இதைச் சரியாக புரிந்து கொள்ளாமல் பாவியினுடைய சொத்து சுகங்களை நீதிமான் சுரண்ட முயற்சிப்பானானால் அவன் திருடன்!

விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்... முள்ளுக்குள் விழாமல், கல்லுக்குள் விழாமல், பாதையில் விழாமல், வரப்பின் மேல் விழாமல் பார்த்து விதைத்திருந்தால், பலருடைய விசுவாசம் காப்பாற்றப்பட்டிருக்கும். நம்முடைய அஜாக்கிரதையான சுவிசேஷ வேலையால் சாத்தானுக்குத் தீனி போட்டுவிடுகிறோம், என்னவொரு மதியீனம்! வயலுக்குப் புறம்பாக விழுந்த விதைகளையெல்லாம் அவன் பொறுக்கித் தின்று குண்டாகிக் கொழுத்துப்போனான்,

கொழுக்கவிட்டது யார்? குறி வைத்து சுடுவோம்... தரிசனத்தைச் சரியாக **Focus** பண்ணுவோம், ஆத்துமாக்கள் கை வசம்!

சோர்ந்து போகாமல் விதைப்போம், இப்போதே பனித்துளிகளாக பெய்து கொண்டிருக்கிறது எழுப்புதல், பெருமழை நிச்சயம்... அப்போது விதைகள் தீவிரித்து எழும்பும்.

## புதிய பிரமாணத்தின்படி எத்தனை % காணிக்கை கொடுக்க வேண்டும்?:

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9:7 நாம் சுயாதீனமுள்ளவர்கள், எதையும் முடிவெடுக்கத் தேவன் நமக்கு முழுச்சுதந்திரம் கொடுத்திருக்கிறார்.

நாம் தேவனுடைய பிள்ளைகள், அவர் நம்மில் வாசம் செய்கிறார், அவருடைய குணாதிசயம் நம்மில் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதால் கண்டிப்பாகச் சரியான முடிவைத்தான் எடுப்போம். தேவனை விசுவாசித்து 10% ஐ ஒரு ஒழுங்குக்காக மனதில் நியமித்தவர்கள் கொடுக்கலாம், அது நியாயப்பிரமாணமாச்சே என்று யோசிக்க வேண்டியதில்லை. நியாயப்பிரமாணக் காலத்தில் அது கட்டாயம், இன்று அது ஆலோசனையாக சுயாதீனப்பிரமாணத்தின் வழியாகக் கடந்து வருகிறது. அதற்குக் குறைவாகவும் கொடுக்கலாம், அதிகமாகவும் கொடுக்கலாம். எவ்வளவு கொடுத்தாலும் 1% லிருந்து 100% க்குள் எதையாவது ஒன்றைத்தான் கொடுக்கிறோம். அவர் அப்பா, நாம் பிள்ளைகள், அதனால் எவ்வளவு கொடுத்தாலும் சந்தோஷமாகப் பெற்றுக் கொள்கிறார். பொருத்தனை பண்ணியோ, நிபந்தனையோடோ, விசனத்தோடோ, கட்டாயத்தோடோ கொடுக்கும்போது கண்ணியில் மாட்டிக் கொள்ளும் அபாயம் வருகிறது. நம்மையுமறியாமல் நியாயப்பிரமாணத்திற்குள்ளாகச் சிக்கிக்கொள்கிறோம்.

## பழைய துருத்தி, புதிய துருத்தி:

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய முயற்சித்து தோல்வியைத் தழுவினார்கள்; நம்முடைய பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்கள். நாமோ நம் தேவன் இயேசு தந்த புதிய பிரமாணத்தை நிறைவேற்றி ஜெயகெம்பீரமாக “யெகோவா நிசி” என்ற கொடிகளைக் கொண்டுபோய் அவர்களுடைய எல்லைகளுக்குள் நாட்டுகிறோம்.

“அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார். எபி. 11:40”

பழைய ஏற்பாட்டின் சத்தியங்கள் பழைய துருத்திக்கு ஒப்பனையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. பழைய திராட்சை ரசம் புளித்துப் போய்விட்டதால், அது பழைய துருத்திகளில் சேகரிக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் இயேசு தன் இரத்தத்தை சிந்தி நமக்காக ஏற்படுத்திக்கொடுத்த புதிய பிரமாணம் புதிய துருத்தியில் சேகரிக்கப்படும் திராட்சை ரசத்திற்கு ஒப்பனையாகச் சொல்லப்படுகிறது. பழைய துருத்தியிலுள்ள திராட்சை ரசத்தில் கொஞ்சம் புதிய ரசத்தைச் சேர்ப்பதால் அதனால் பெரிய பாதிப்பு ஒன்றும் ஏற்படாது. அது அப்படியே இருக்கும். ஆனால் புதிய திராட்சை ரசத்தோடு ஒரு துளி பழைய ரசம் சேர்க்கப்பட்டாலும் போச்சு, முழுவதும் புளித்து, துருத்தி கிழிந்து, ரசமும் சிந்தி, யாருக்கும் பிரயோஜனப்படாமல் போய்விடும். அதனால் வேதத்தைப் பழைய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் வாசிக்காமல், புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் வாசிக்க வேண்டும். புதிய பிரமாணத்தை ஒரு விளக்கைப் போல கையில் எடுத்துக் கொண்டு, வாக்குத்தத்தங்கள் குவிந்து கிடக்கும் தேவனுடைய சுரங்கத்திற்குள் பிரவேசியுங்கள், பாளம் பாளமாக தங்கம்! புதிய ஏற்பாட்டில் நமக்குக் கிருபையினடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கும் புதிய பிரமாணத்திலிருந்து வீசும் ஒளிக்கற்றைகளைக் கொண்டு ஆராய்ந்தால்தான் தங்கம் அங்கே இருப்பது தெரியும். அந்த ஒளிக்கதிர்கள் ஆசீர்வாதங்களின் மேல் பட்டுத் திரும்ப நம் பார்வைப் புலத்துக்குள் வருவதால்தான் நம் கண்களுக்கு அவைகள் தெரிகின்றன.

“மனிதன் அந்தகாரத்திலும் மரண இருளிலும் இருக்கிற கற்களைக் கடையாந்தரமட்டும்

ஆராய்ந்து தேடி, இருளுக்கும் அங்கே முடிவுண்டாக்குகிறான். யோபு. 28:3"

"கன்மலைகளுக்குள்ளும் நீர்க்கால்களை வெட்டுகிறான்; அவன் கண் விலையுயர்ந்த எல்லாவற்றையும் காணும். யோபு. 28:10"

பழைய ஏற்பாட்டின் ஜெபம் இரட்டுடுத்தி, சாம்பலைப் பூசிக்கொண்டு கதறியது. புதிய ஏற்பாட்டின் ஜெபம் அழகான செல்லக்குழந்தையாய் தன் அப்பாவின் மடியில் படுத்துக் கிடந்தது. நம் குழந்தைகள் நம்மிடம் எதுவும் கேட்காவிட்டாலும், நேரத்திற்கு நேரம் கூப்பிட்டு சாப்பாடு கொடுக்கிறோமே, நம் ஆவிகளின் பிதாவானவரின் அன்பு அதைவிட எத்தனை கோடி பெரியது!

"...இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். மத். 6:32,33"

தேவன் தன்னுடைய வாக்குத்தத்தங்களுக்குள் சிக்கிக்கொண்டிருக்கிறார், நம் விசுவாசம் அவரை விடுவிக்கும்! வேதத்தில் உள்ள ஆயிரக்கணக்கான வாக்குத்தத்தங்களின் முற்பகுதியில் ஒரு நிபந்தனை ஒட்டிக்கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். அந்த நிபந்தனையை நிறைவேற்றினால்தான் வாக்குத்தத்தம் நமக்குச் சொந்தமாகும் என்றுதான் சபைகளில் பெரும்பான்மையாகப் போதிக்கப்படுகிறது. அது நியாயப்பிரமாணத்தின் காலத்தைய உபதேசம். அந்த நிபந்தனையை நிறைவேற்ற முயற்சித்த நம் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் தோற்றுப்போனார்கள், அவர்களால் முடியாமல் போன காரியத்தை நாம் செய்து முடிக்க வேண்டுமே என்பதற்காக, இயேசு கிறிஸ்து நமக்காக ஒரு காரியத்தைச் சிலுவையில் செய்து முடித்தார். கிரியை எதுவும் இல்லாமல் இயேசுவால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு எளிய விசுவாசத்தால் வாக்குத்தத்தம் நமக்குச் சொந்தமாகும்படி வழி ஏற்படுத்திக் கொடுத்தார். அதனால் வாக்குத்தத்தத்தின் முற்பகுதியில் இணைக்கப்பட்டிருக்கும் நிபந்தனையால் வாக்குத்தத்தத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாது! எப்படி? வாக்குத்தத்தக் கட்டளைகளை நிறைவேற்றும் பொறுப்பை அவர் எடுத்துக் கொள்கிறார், அவருடைய தகுதியின் மேலேறி நாம் நிற்கிறோம்!

இது சரியாக வராதே என்று கூட நினைக்கத் தோன்றும். அப்படி நிபந்தனையின்றி ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு வருமானால் அதனால் பாவங்கள் அதிகமாகும் வாய்ப்புகள் உண்டாகுமே என்று கூடத் தோன்றலாம். ஆனால் உண்மை அதுவல்ல. வாக்குத்தத்தங்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, பரிசுத்தவான்களாக மாற்றப்பட்ட தேவபிள்ளைகளுக்கு மாத்திரம்தான். அதனால் அவர்களுக்கு வாக்குத்தத்தம் சொந்தமாகும்போது, கண்டிப்பாக அதன் நிபந்தனைகளையும் அவர்கள் நிறைவேற்றவே செய்வார்கள். தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட தேவபிள்ளைகள் அதை காட்சிப்பொருளாக (showcase) வைத்து வேடிக்கை பார்க்க மாட்டார்கள், கண்டிப்பாக விதைக்கத்தான் செய்வார்கள்.

இரட்சிக்கப்படாதவர்கள் வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளிகள் இல்லையென்பதால் அவர்களால் பெற்றுக் கொள்ள முடியாது என்பதால், இயேசுவின் இந்தப் புதிய திட்டத்தில் பிரச்சனையே இல்லையென்பதைப் பார்க்கிறோம்.

வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்காக நம்முடைய விசுவாசம் "விதை"யாகத் தூவப்படுகிறது. நம்முடைய விசுவாசம் துளிர்விட்டு வளர வளர வாக்குத்தத்தம் விளைச்சலாகி நிறைவேறுகிறது! எதிர்மறையான காரியங்களினால் பாதிக்கப்படாத விசுவாசமே வெற்றியடைகிறது. நம்முடைய விசுவாசம் அறிக்கை செய்யப்படும்போது காணும் பொருளாக மாறுகிறது. அதாவது நம் ஆவிக்குரிய கண்களால் பார்க்கும் ஆசீர்வாதத்தை மாம்ச கண்களும் காணும் அளவாக இந்த உலகத்திற்குள் கொண்டு வருகிறது.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசித்து இரட்சிக்கப்படும்போது, இரட்சிப்புடன் சேர்ந்து சிலுவையின் ஆசீர்வாதங்களான ஐசுவரியம், சுகம், விடுதலை போன்ற காரியங்களும் கிடைக்கிறது. அதனால் தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, இரட்சிப்புடன் சேர்ந்து அவர்களுக்குக் கிடைக்கப்போகிற ஐசுவரியத்தைக் குறித்தும், பிணியாளிகளைச்

சொஸ்தப்படுத்தும்போது, அதைவிட முக்கியமான இரட்சிப்பையும் அவர்களுக்குச் சொல்லுகிறோம்.

“அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்ற அவர்களுக்குச் சொல்லுங்கள். லூக். 10:9”

“நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. மத். 12:28”

சுவிசேஷம் என்றால் நற்செய்தி. இயேசு கிறிஸ்து சிலுவையில் இரத்தம் சிந்தி, அவருடைய இரத்தத்தால் நம்மைக் கழுவி, நம்மைப் பரலோக இராஜ்ஜியத்திற்குள் நுழைய வைத்து, அங்கேயிருக்கும் ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள வழி ஏற்படுத்தி வைத்திருக்கிறார். அதைச் சொல்லி, அந்த வெளிச்சத்திற்குள் மக்களை நடத்துவதுதான் நற்செய்தி. இயேசுவை ஏற்றுக்கொண்டால் துக்கம், பாடு, அழுகை, கண்ணீர், புலம்பல்தான் பிரதர், ஆனால் பரலோகம் போய் விடலாம் – இப்படிப் பிரசங்கித்தால் அது கேட்பவர்களின் காதுகளில் துர்ச்செய்தியாக விழும், ஆத்துமா விலாங்கு மீன் போல கையிலிருந்து வழுக்கி, மீண்டும் கடலுக்குள் விழுந்து காணாமல் போய்விடும்.

**Christmas Star** அவிழ்க்கும்போது, அதனுள் செத்துக் கிடந்த நூற்றுக்கணக்கான சிறிய பூச்சிகளைப் பார்க்க முடிந்தது. வெளிச்சத்தை தேடும் உலக மனிதர்கள் – இயேசுவை அறியாமல் தன்னுடைய மாயையான நாட்களை முடிக்கும் பரிதாபம்! உயரமான வாதுமை மரத்தில் ஒரு **Star** தொங்க வைத்திருந்தோம், அதை அவிழ்க்க, படியில் ஏறியபோது, ஒரு காட்சியை பார்க்க முடிந்தது. சில நாட்களில் அதை அவிழ்க்கப் போகிறோம் என்று தெரியாத ஒரு சிலந்திப் பூச்சி, அதை ஆதாரமாகக்கொண்டு அந்த மரத்தில் தன்னுடைய அழகான பட்டு இழை கூட்டைக் கட்டியிருந்தது! அந்தக் கூடு நிரந்தரம் என்று நம்பி ஏமாந்த அதிகாலைப் பனித்துளிகள் அதில் அழகாக மின்னிக்கொண்டிருந்தன! இப்படிப்பட்ட மனிதர்களின் மத்தியில்தான் நாம் நற்செய்தி அறிவித்து வருகிறோம். நற்செய்தி, நல்ல + செய்திகள் நிறைந்ததாக இருக்கட்டும், துர்ச்செய்திகளால் அவர்களை ஏமாற்றாதிருப்போம். நம் தேவன் நல்லவர், நல்லதை மாத்திரமே செய்பவர், நல்லதை மாத்திரம்தான் அவரால் செய்ய முடியும், ஏனென்றால் பரலோகத்தில் நல்லது மாத்திரம்தான் உண்டு.

## உலகத்தை பார்த்து அங்கலாய்த்தார் சாலமோன் ஞானி.

“சூரியனுக்கு கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. பிர. 1:14” (பிர. 1:17, 2:11,17,26, 4:4,16)

சாலமோன் ஞானியால் அதை மாத்திரம்தான் செய்ய முடிந்தது. ஆனால் சாபத்தால் கோணலாகிப் போன காரியங்களை நேராக்க அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் அக்காலங்களில் சாத்தான் தோற்கடிக்கப்படவில்லை, உலகத்தின் சாபங்களும் மாறவில்லை. ஆனால் சாலமோனிலும் பெரியவர் நமக்குள் இருக்கிறார், அதனால் நாம் சாலமோனை விட அதிகப்படியான ஞானிகள்! உலகத்தின் சாபங்களை இயேசு சிலுவையில் மாற்றினார், சத்தியங்களை அறிந்து கொண்டு நாமும் சாபங்களை மாற்றிக் காட்டுவோம்! சிலுவையின் சத்தியங்களை – புதிய பிரமாண சத்தியங்களை எப்படி கண்டுபிடிப்பது, விளங்கிக்கொள்வது?

“நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. ... 1 யோவான். 2:27”

– பரிசுத்தாவியானவரே நமக்குப் போதித்து நடத்தும்போது நாம் பயப்படவேண்டியதில்லை, கண்டிப்பாக சரியான சத்தியத்திற்குள்ளாகத்தான் கடந்து போவோம். இலக்கை அடைவது நிச்சயம். நம்முடைய மூக்கணாங்கயிற்றை அவரிடம் விட்டு விடுவோம், அவர் இழுத்த

இழுப்புக்கெல்லாம் போனாலே போதும், உன்னதங்களில் வேரூன்றலாம்!

ஒரு சாயங்கால வேளை – உலாவச் சென்ற ஒரு தேவ மனிதர் கவனித்த ஒரு காட்சி – ஒரு சின்னப்பையன் தன்னுடைய சைக்கிளில் ஒரு மலைப்பாதையில் கடந்து சென்றுகொண்டிருந்தான். மலைப்பாதை மேல்நோக்கி வளைந்து சென்றதாலும், எதிர்காற்று வீசிக்கொண்டிருந்ததாலும் பையன் சைக்கிளை ஓட்டுவதற்கு மிகவும் சிரமப்பட்டு, வேகத்தைக் குறைத்து கடைசியில் நின்றே விட்டான். அப்போது, ஒரு மோட்டார் வாகனம் அந்த வழியாக அவனைக் கடந்துச் சென்றது. இமைப்பொழுதில் பையன் தன் கையால் அந்த வாகனத்தின் பின்புறமிருந்த வளைவானக் கம்பியை இறுகப் பிடித்துக் கொண்டான்! அவ்வளவுதான் அவன் மேல்நோக்கி வளைந்து போய்க்கொண்டிருந்த அந்த மலைப்பாதையில் ஒரு பறவையைப் போல சிட்டாகப் பறந்து சென்றான்! பாதையின் தன்மையோ, எதிர்காற்றோ இப்போது அவனை தடுத்து நிறுத்தவில்லை, தடுத்து நிறுத்த முடியவுமில்லை! "... இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; ... யோவான். 14:6" என்றார்.

இயேசுவே சத்தியம், அந்த சத்தியம் இயேசு சிலுவையில் ஏற்படுத்திய புதியபிரமாணத்திற்குள் ஒளிந்திருக்கிறது, உற்றுப் பார்த்தால் அதைக் கண்டுப்பிடிக்கலாம். மேலோட்டமான வேத வாசிப்பு சுயாதீனப்பிரமாணத்தை வெளிப்படுத்தாது, பிரகாசமுள்ள மனக்கண்களைத் தாரும் என்று ஜெபித்து வாசிக்கும்போது சத்தியம் வெளிப்படும். இந்தக் காரியங்களைக் குறித்து இதற்கு முன்னதாகவே எழுதியிருக்கிறேன்.



இந்தப் படத்தை உற்றுக் கவனியுங்கள். இது என்னது என்பதை ஊகிக்க முடிகிறதா? ஒரு வலையிலிருந்து வெட்டப்பட்ட வட்டமானப் பகுதியைப் போலத் தோன்றுகிறது. இந்த படத்தை மேஜையின் மேல் செங்குத்தாக நிறுத்திவிட்டு, நான்கு அடிகள் பின்னாக நகர்ந்து நின்று பாருங்கள்; மனிதக் கண் ஒன்று புலப்படுகிறது! அருகே வந்துப் பார்த்தால் ... மீண்டும் வலை! (கம்ப்யூட்டரில் வாசிப்பவர்கள் சீட்டில் இருந்து எழும்பி மானிட்டருக்குச் சற்று தள்ளி நின்று பார்க்கவும்)

இது சாதாரணப் படத்திலுள்ள ஒரு பகுதிதான், பத்து மடங்கு பெரிதாக்கப்பட்டிருக்கிறது. புள்ளிகள் சிறியதாயிருந்தால், படிக்கும் போது நாம் புஸ்தகத்தை பிடித்துக் கொள்ளும் வழக்கமான தூரத்தில் மொத்தமாக ஒன்றிணைந்துவிடுகின்றன. ஆனால் புள்ளி பெரியதாக இருந்தால், அதிகமான தூரத்தில்தான் அது அவ்வாறு ஒரு திடமான பின்னணியத்தில் ஒன்றிணையும். ஒரு சாதாரணப் படத்தை 10 மடங்கு உருப்பெருக்கம் செய்யும் உருப்பெருக்கியின் மூலம் பார்த்தால், படத்தில் இருப்பதைப் போன்ற புள்ளிகளின் அமைப்பைப் பார்க்க முடியும். ஆஃப்டோன் (**Half-tone?**) படங்களைப் பார்க்கும்போதெல்லாம் நம்மை ஏமாற்றும் ஒரு சாதாரண ஒளியியல் மாயத் தோற்றம்தான் இதுவும்.

வேதத்தை வாசிக்கும்போது நம் உள்ளான மனிதனின் கண்களும் இவ்விதமான பாதிப்புக்குள்ளாவதால்தான், பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபிக்க வேண்டியதாயிருக்கிறது. சும்மா வாசித்தால் வலைப்பின்னல்தான் தெரியும், கொட்டாவி வரும், பிறகு கெட்ட ஆவி சிலந்தி ரூபத்தில் வலையில் உலா வரும்!

"சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, ... யாக். 1:25"

சுயாதீனப் பிரமாணத்தை (விசுவாச பிரமாணம், பூரண பிரமாணம்) கற்றுக் கொள்ள செய்ய

வேண்டிய ஒரு ஆவிக்குரிய ஜெபத்தினைத் தொடர்ந்து செய்தால் பிரகாசமுள்ள மனக்கண்கள் கிடைக்கும். பிறகு பாருங்கள், உங்களுக்கு யாரும் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது.

எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவரே, உம்மை நான் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை எனக்குத் தாரும். என்னை நீர் அழைத்ததினாலே எனக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், நீர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த உமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிற என்னிடத்தில் காண்பிக்கும் உம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நான் அறியும்படி, எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் தாரும். (எபே. 1: 17–19)

நான் உம்முடைய ஆவியினாலே என் உள்ளான மனுஷனில் (மனுஷியில்) வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து என் இருதயத்தில் வாசமாயிருக்கவும், நான் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவனா(ளா)கி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவனா(ளா)கவும், உம்முடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், நீர் உம்முடைய மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே எனக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். (எபே. 3:16–19)

நம்முடைய கிரியைகளினால் பரலோகம் போகலாம் என்று நினைத்தோமானால் ஒருவர் கூட அங்கே போக முடியாது. நாம் பரலோகம் செல்ல என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் நம் கர்த்தர் இயேசு தாமே செய்து முடித்துவிட்டதால் நாம் அவருடைய தகுதியில் பரலோகம் போகிறோம், அவருடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு!

பரலோகம் செல்வதற்காக மாத்திரம் தேவன் நம்மைத் தேடி வந்து இரட்சிக்கவில்லை. சத்தியத்தை அறிந்து கொண்டு, பூரண பிரமாணத்தின் மூலமாக நமக்கு கையளிக்கப்பட்ட பரலோக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, நாம் வாழ்ந்திருந்து, மற்றவரையும் வாழ வைக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம். புதிய பிரமாண சத்தியத்தைப் பூரணமாக விளங்கிக்கொண்டோமானால்; பிரமித்துப் போவோம்; பரலோகத்தை இந்த பூமியிலேயே அனுபவிக்க முடியும்.

இவ்வுலகம் பாடுதான் ... என்று பாடுகிறார்களே! அப்படி விசுவாசித்து பாடுகிறவர்களுக்கு பாடுகள்தான்! நாம் என்னத்தை விசுவாசிக்கிறோமோ அதுதான் நமக்கு நடக்கும், எப்படி விசுவாசிக்கிறோமோ அப்படியே மாறிப்போகிறோம் ...

**(a)** சிலுவையில் சந்தோஷம், சுகவாழ்வு, தெய்வீக சுகம், செழிப்பு, விடுதலை, ஞானம், அக்களிப்பு, பரவசம், பிரமிப்பு, சிரிப்பு ...

**(b)** சிலுவையில் துக்கம், வறுமை, வியாதி, சிறையிருப்பு, அழுகை, சஞ்சலம், வனாந்திரம் ... இதில்

நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்களோ அதை **Tick** செய்யுங்கள். அதுதான் உங்களுக்கு நடக்கும். உண்மையில் சரியான விடை **'a'** தான்! தம்முடைய அறியாமையினால், பூரண பிரமாணம் தெரியாததால், சிலுவையில் என்ன நடந்தது என்பது புரியாததால் **'b'** ஐ **Tick** அடித்துவிட்டு வறுமையிலும், வியாதியிலும், புலம்பலிலும் வாழ்க்கையை முடித்துவிட்டு, உருண்டு பரலோகம் போய்விட்டார்கள் சிலர்.

விண்ணுலக மகிமையை துறந்து, நமக்காக மண்ணுலகத்துக்கு இறங்கி வந்து, பாவ மனிதனின் சாயலைத் தரித்துக் கொண்டு, நம் பாடுகளை ஏற்றுக்கொண்டு, நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்காக, தான் தரித்திரராகி, நம்முடைய கிரியைகளை ஓரம் கட்டி, தன்னுடைய தகுதியில் நமக்கு பரலோக பாக்கியத்தை அளித்த நம் தேவன் இயேசுவின் சொல்லிமுடியாத அன்பை விளங்கிக்கொள்ளாமல் உலக வாழ்க்கையை இழந்ததை நினைத்து அழுதுகொண்டிருக்கிறார்கள்! தேவன் அவர்கள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டிருக்கிறார்! **How sad!** நம் அறியாமையினால் இந்த உலகத்தில் தேவனைத் துக்கப்படுத்தினோம், பரவாயில்லை,

போனது போகட்டும், பரலோகத்தில் போயும் அவரை துக்கப்படுத்துவது நியாயமா?

தன்னுடைய மகனை உலகத்திற்கு அனுப்பியும், இன்னும் காரணகாரியம் தெரியாமல், நுகத்தடியுடன் திரியும் தன்னுடைய பிள்ளைகளைப் பார்க்கும்போது, பிதாவின் இருதயம் எவ்வளவாய் வேதனைப்படும்? இந்த பூமி நம்ம அப்பாவுக்குரியது, அவர் அதை நமக்குத் தந்தார். நாம் சுதந்தரிப்போம், சொந்தம் கொண்டாடி, போரிட்டு, சாத்தானின் எல்லைகளுக்குள்ளாக சிக்கியிருப்பவற்றை மீட்போம். தேவனை சந்தோஷப்படுத்துவோம்.

காண்பதை ஒரு மனிதன் நம்ப வேண்டியதில்லையே, காணாததை நம்புவதற்காகத்தான் நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்கள் தரப்படுகின்றன.

"... நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ரோ. 8:26"

புதிய பிரமாணம் நம்முடைய பழைய நம்பிக்கைகளை தவிடுபொடியாக்குகிறது, கேள்விக்குறிகள் நிறைந்திருந்த பழைய நியாயப்பிரமாணம் என்ற பழைய நம்பிக்கையான மண்சட்டியை சுக்கல்நூறாக்கி, புதிய நம்பிக்கைகள் அடங்கிய பொற்பாத்திரத்தை நம் கையில் கொடுத்தார் இயேசு! அது புரியாமல் உடைந்துபோன மண்சட்டியை களிமண்ணைக் குழைத்து ஒட்டவைத்துக்கொண்டு; சரியாக ஒட்ட உதவி செய்யும் தேவனே என்று ஜெபித்துக்கொண்டிருக்கிறோம்.

நமக்கு ஏன் சரியாக ஜெபிக்கத் தெரியவில்லை என்று இப்போது புரிந்திருக்கும். பிரமாணத்தை சரியாக புரிந்துகொள்ளாமல் ஜெபிக்க ஆரம்பிப்பது; கேள்வியைச் சரியாக புரிந்துக்கொள்ளாமல் பதில் எழுதுவதைப் போல. **Examination Hall** - எங்கும் அமைதி நிலவுகிறது – எல்லோருக்கும் **Question paper** கொடுக்கப்படுகிறது. மேற்பார்வை செய்து கொண்டிருக்கும் ஆசிரியர் முதலில் மாணவர்களைப் பார்த்து "எல்லோரும் முதலில் கேள்வித்தாளை முழுவதுமாக வாசித்துவிடுங்கள்" என்பார்! இந்த அனுபவம் எல்லோருக்குமே உண்டு. நம்முடைய வெளியுலக வாழ்க்கையில் இவ்வளவு கவனமாக இருக்கும் நாம், நம் உள்ளான மனிதனை ஜெப நேரத்தில் ஏனோதானோ என்று அல்லாட விட்டுவிடுகிறோம். புரியாத கேள்விக்குப் பதில் கண்டிப்பாக தவறாக இருப்பது போலவே, தவறாக புரிந்து கொண்ட வசனத்தை வைத்து, தவறாகவே ஜெபித்தும் முடித்து விடுகிறோம்.

ஆனால் நம் தேவன் நம்மை அல்லாட விடுகிற தேவன் அல்ல; நம்முடைய அறியாமையைப் பார்த்து பெருமூச்சு விட்டபடி நமக்காக தன் ஆவியானவர் மூலமாக வேண்டுதல் செய்ய வைக்கிறார். சத்தியத்தை அறிந்திருக்கும் பரிசுத்தாவியானவர் புதிய பிரமாணத்தின்படி ஜெபிப்பதால், தேவனிடமிருந்து நமக்குச் சரியான வேளையில் சரியான பதிலும், பலனும் கிடைத்துவிடுகிறது.

ஆனால் இங்கே இன்னொரு பிரச்சனை வருகிறது. நாம் எப்படி ஜெபித்திருக்கிறோமோ, அதற்கேற்றவாறு பதில் வரவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் தேவனுடைய பதிலோ அவருடைய சித்தத்திற்கிசைவானதாக இருக்கிறது, அதாவது பரிசுத்தாவியானவரின் ஜெபத்திற்கு அவர் பதில் கொடுத்துவிடுகிறார். அதனால் தேவன் நம் ஜெபத்தைக் கேட்கவில்லை என்று தவறாக நினைத்து, முறுமுறுத்து, ஆவியில் சோர்ந்து போய், அவிசுவாசத்தால் விசுவாச படகில் ஓட்டை போட்டு விடுகிறோம். உள்ளே தண்ணீர் ஏறி படகு விபத்துக்குள்ளாகிறது!

... அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். ஏசா. 53.5

... அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். 1 பேதுரு. 2:24

இந்த இரண்டு வசனங்களைச் சற்று கவனியுங்கள். ஏசாயா தீர்க்கதரிசனமாக சொன்ன வார்த்தைகள் புதிய உடன்படிக்கையின் வார்த்தைகளாக சிலுவையில் நிறைவேறியது. நாம் இயேசுவின் தழும்புகளால் குணமானோம். உண்மை அப்படியிருக்க, ஆண்டவரே எனக்குச் சுகத்தைத் தாரும் என்று அதிக வேதனையோடு வியாதி நேரத்தில் அழுது ஜெபிக்கிறோம். வசனத்தை அறிக்கை செய்து கொண்டிருந்தாலே போதும். இந்த சத்தியம் விளங்காமல் ஜெபிப்பதால் பரிசுத்தாவியானவர் நமக்காக ஜெபிக்க வேண்டியதாயிருக்கிறது.

இதனால் கண்டிப்பாக பரிசுத்தாவியானவரின் அபிஷேகம் தேவை என்பதை உணர்கிறோம்.

"தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. ரோமர். 8:9"

பரிசுத்தாவியானவர்தான் நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்களின் வழியாக வசனத்தின் சரியான சத்தியத்தை விளங்கிக் கொள்ள உதவி செய்கிறவர். அவர் இல்லாவிட்டால், மனக்கண்கள் வேலை செய்யாது, வேறு வழியில்லாமல் நம் மூளையறிவினால் எதையாவது புரிந்து கொண்டு எதையாவது ஜெபிப்போம், எதுவும் நடக்காது. நம் விருப்பப்படி ஏதாவது ஒரு காரியம் நடந்தால் அது தேவனுடைய சித்தம் என்று சொல்லிக்கொள்வோம், விருப்பத்திற்கு மாறாக நடந்தால் தேவனுக்கு சித்தமில்லை என்று நினைத்து திருப்தியடைந்து விடுவோம். இப்படியாக வண்டி ஓடுகிறது. ஆனால் இந்த ஓட்டம் ரொம்ப தூரத்திற்குத் தாக்குப்பிடிக்காது, சில மைல்கற்கள் போனதும் மாடு படுத்துவிடும்!

18ஆம் நூற்றாண்டின் காலங்களில் சோவியத் யூனியனில், செல்வச்சீமான்கள் உபயோகப்படுத்தும் கூஜா படத்தில் காட்டப்படுகிறது. இந்தக் கூஜாவிலிருந்து பானத்தை குடிக்க




முடியாது, ஏனென்றால் கூஜாவின் மேல்பகுதியில் காணப்படும் டிசைன் போன்ற துளைகளின் வழியாக, திரவம் வெளியே சிந்தி உடலை நனைத்துவிடும். பழைய ஏற்பாட்டின் உபதேசங்களையே கேட்டுக் கேட்டு, ஜெபிக்கத் தெரியாமல் காலங்காலமாக ஜெபித்து ஜெபித்து, இயேசுவின் கிருபையை இப்படித்தான் வீணாக்கி சிந்த விட்டுவிடுகின்றனர். ஆனால் விவரம் தெரிந்தவர்கள் விரலால் **"B"** என்ற அந்த துளையை விரலால், மூடிக்கொண்டு சிந்தாமல் குடித்தனர்! சூட்சுமம் எங்கே என்று தேடி ஆராய்ச்சி செய்வோம், சத்தியத்தைக் கண்டு பிடிப்போம், அதற்கேற்றபடி ஜெபிப்போம், வல்லநாட்டு மலை பெயர்ந்து ... கடலில் போய் விழும், காட்டத்தி மரம் வேரோடு பிடுங்கப்பட்டு கடலில் நாட்டப்படும்!

தேவனுடைய பொக்கிஷம் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க வேண்டுமானால், பரிசுத்தாவியானவரின் உதவியுடன் வேத வசனங்களில் மறைந்திருக்கும் இரகசிய குறிச்சொற்களை ஆராய வேண்டும். இதற்கு பரிசுத்தாவியானவரின் உதவியில்லாமல் நடக்காது. நாம் நினைக்கும் இடத்தில் பொக்கிஷம் இருக்காது, அது இருக்கும் இடத்திற்கு நாம் போக வேண்டும்.

உலகளாவிய சபை மக்களுக்கு இந்தப் புதிய பிரமாணத்தைப் பற்றிய வெளிச்சம் பரிபூரணமாகக் கிடைத்தால், இப்போது பனித்துளியாய் இருக்கும் எழுப்புதல், பனிப்புயலாகிவிடும்! சபையில் மறைக்கப்படும் சத்தியத்திற்குள் எழுப்புதல் மறைந்திருக்கிறது, அது வெளிப்பட்டால், இதுவும் வெளிப்படும்! பாதாளம் தன்னை வெற்றிடமாக்கிக்கொண்டு அங்கலாய்க்கும், நரகம் தன்னையே மறுதலிக்கும். தேவ பிள்ளைகளே, நம் கையில்தான் எல்லாம் இருக்கிறது. (சிலர் நாற்காலியின் நுனியில் உட்கார்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது)

வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச்சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்க வேண்டாம். சங். 32:9

இக்காலங்களில் நமக்கு ஆவியானவரால் வெளிப்படுத்தப்படும் காரியங்களுக்கு உடனடியாகக் கீழ்ப்படிவோம். தாமதமாகக் கீழ்ப்படிவது கீழ்ப்படியாமைக்குச் சமம். அது லோத்தின் அலங்கோல நிலைமைக்குள் நம்மை நடத்திவிடும்.

நான் யார்? ஏன் பிறந்தேன்? என்னைக் குறித்து தேவனுடைய நோக்கம் என்ன?

எனக்கு என்னென்ன உண்டு? என்னென்ன கிடையாது? எங்கே இருக்கிறோம்? எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்? நம்முடைய நம்பிக்கை என்ன? இப்படிப்பட்ட பலதரப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சிலுவையின் பின்னணியத்தில் உண்டு. சிலுவையில் இயேசு நமக்காக என்னவெல்லாம் செய்திருக்கிறார் என்பதை விளங்கிக்கொள்ளாமல், கோபுரத்திலும், பீடத்திலும், ஆல்ட்டரிலும், செயினிலும் அதை இணைப்பதில் என்ன பிரயோஜனம்? **Resemblance** க்காக இவைகளெல்லாம் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், சத்தியத்தை அறிந்து கொள்ளாதவரை அவற்றால் என்ன பிரயோஜனம்? அவைகள் விக்கிரகங்களைப் போன்றதே.

“இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். 1 கொரி. 2:2”

இயேசு கிறிஸ்துதான் வார்த்தையானவர், அவர் ஆதியிலே பிதாவின் வார்த்தையாயிருந்தார். அந்த வார்த்தைகளைப் பிரசங்கிக்கிறோம். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை (வார்த்தைகளை) பிரசங்கிப்பதே பிரதானமானதாகும். சிலுவையில் இயேசு அறையப்பட்டதற்கான பிரதான நோக்கம் – சிலுவையின் பின்னால் மறைந்திருக்கும் இரகசியங்கள் – புதிய உடன்படிக்கையின் சத்தியங்கள் அதனடிப்படையில் தேவனின் அன்பு – அவருடைய ஆசீர்வாதங்கள் – என்பதைப் பற்றி நாமும் அறிந்து கொண்டு, அறிந்ததை மற்றவருக்கும் அறிவிப்பதே நம் தீர்மானமாகட்டும்.

எபே. 1: 17–19, 3:16–19 – ல் பரிசுத்தாவியானவரால் கொடுக்கப்பட்டிருக்கும் ஆவிக்குரிய ஜெபத்தைக் கற்றுக் கொண்டு புரிந்து கொண்டு செய்வோமானால், உலக சபையில் உள்ள தேவைபிள்ளைகள் இதற்கு ஒத்துழைப்பார்களானால், உலகத்திலும், அதன் நிறைவிலும் இருக்கும் சாபத்தை மாற்றி, ஆதியில் இருந்தது போல, நன்றாக இருந்தது என்று பிதா சொன்னபோது எப்படி இருந்ததோ, அந்த நிலைக்கு உருட்டிக் கொண்டு போய்விடலாம்! நம்ப முடியவில்லையா? உண்மைதான் நம் தேவனின் அன்பு – அது அளவிடமுடியாதது – நம்ப முடியாதது – பிரமிக்க வைப்பது – மயங்கி விழ வைப்பது ...

“என்னை விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டுபோனார்; என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே.

... நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன். உன். 2:4,5

... நேசம் மரணத்தைப்போல் வலிது; நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது; அதன் தழல் அக்கினித் தழலும் அதன் ஜ்வாலை கடும் ஜ்வாலையுமாயிருக்கிறது. உன் 8:6”

ஆண்டாண்டுகாலமாக தேவனுடைய கோபாக்கினையைப் பற்றிய பிரசங்கங்களைக் கேட்டு மனம் மிகவும் மரத்து, சோர்ந்து, நொந்து, வெந்து, நம்பிக்கையிழந்து, களையிழந்து, தன்னிடத்தைவிட்டு நகர்ந்து எங்கேயோ போயிருந்தது. அப்போதெல்லாம் நான் யோசிப்பதுண்டு; தேவனுடைய கோபம் இவ்வளவு கொடூரமானதாகக் கடந்து வந்துகொண்டிருக்குமானால் யார் இரட்சிக்கப்படுவார்கள்? எல்லோரும் நம்பிக்கையிழந்திருப்பார்களே? யார்தான் பரலோகம் போக முடியும்? ஏதோ ஒரு சத்தியம் எனக்கு மறைக்கப்படுவதை பரிசுத்தாவியானவர் என் ஆவியின் அடிமட்டத்திலிருந்து உணர்த்திக்கொண்டேயிருந்தார். அதன் குமிழிகள் தண்ணீரின் மேல் வட்டவட்டமாக அலைகளாக பரவிக்கொண்டேயிருந்தது. முடிவில் நான் **Guess** பண்ணியதுதான் சரி, சத்தியம் மேலெழும்பி வந்து என்னை தட்டி எழுப்பியது!

சத்தியம் மறைக்கப்பட்ட போதனைகளால் நான் ஜீரணிக்கப்பட்டுப் போயிருந்தேன்... அவற்றால் என் கடந்தகாலம் செல்லரித்துப் போயிருந்தது. ஆனால் வீணடிக்கப்பட்ட கடந்த காலத்தையும் என் தேவனால் திரும்பத் தர முடியும் என்று உணர்ந்தபோது புல்லரித்தது!

“... வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன். யோவேல். 2:25”

என்னுடைய எதிர்காலம் எனக்குத் தெரியாதுதான், ஆனால் எதிர்காலத்தை கையில் வைத்திருப்பவரை எனக்குள் வைத்திருக்கிறேன், அதனால் எதிர்காலம் கைவசமாவதும்

சாத்தியம்தான்.

இஸ்ரவே-ன் பரிசுத்தரும் அவனை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்; ... ஏசா. 45:11

... உலகமாகிலும் ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது; 1 கொரி. 3:22

நிகழ்காலமும் நம்முடையதுதான் ... நம்முடைய இறந்தகால கிரியைகள், அறியாமையினால் இருட்டுக்குள் செய்த காரியங்களின் விளைச்சல் இந்த நிகழ்காலம். வெளிச்சம் கிடைத்திருக்கிறது, சத்தியத்தின்படி செயல்பட்டால், பிரகாசமான எதிர்காலம் நமக்கு மட்டுமல்ல, சமுதாயத்திற்கும், சபைக்கும், நாட்டுக்கும், உலகத்திற்கும் நிச்சயம்.

அடிக்கடி நாம் பிரசங்கங்களில் அடிக்கடி கேட்டிருக்கும் ஒரு கதை: ஒரு சிறு பையன் ஒரு அணைக்கட்டின்வழியாக நடந்து வந்துக் கொண்டிருக்கிறான். அணையில் ஒரு விரல் செல்லும் அளவிற்கு ஒரு ஓட்டை விழுந்து தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த சிறு பையன் இதை அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டால் தண்ணீரின் அழுத்தத்தால் அணை உடைந்து வெள்ளச் சேதம் ஏற்பட்டு, கிராமத்திலுள்ள மக்களுக்கு ஆபத்து வரும் என்று புரிந்து கொண்டான். உடனே தன்னுடைய கட்டைவிரலை அதிலே வைத்து அழுத்தி, ஓட்டையை அடைத்துக் கொண்டு அருகில் இருந்த ஒரு கல்லின்மேல் உட்கார்ந்து கொண்டான். நேரமாக ஆக காற்றடிக்க ஆரம்பித்தது, பையன் குளிரில் நடுங்க ஆரம்பித்தான். நேரம் போய்க்கொண்டே இருந்தது, பொழுது விடிந்தது, பையனின் வீட்டில் அவனைக் காணோமென்று தேடிக்கொண்டிருந்தார்கள். அணைக்கட்டின் ஓரமாக மாடுமேய்த்துக் கொண்டிருந்த ஒரு ஆள் அணையின் ஓட்டையில் கையை வைத்தபடி விரைத்து செத்துப்போயிருந்த ஒரு பையனைப் பார்த்தான் ...

ஒரு பையனின் தியாகம் ஒரு கிராமத்தைக் காப்பாற்றியது, அதைப் போலவே உலகத்தின் பாவத்தை தன்மேல் போட்டுக் கொண்ட இயேசுவின் தியாகம், நம்மைப் பரலோகவாசிகளாக மாற்றியது. உலகத்தின் சாபத்தை தன் மேல் போட்டுக்கொண்ட இயேசுவின் தியாகம் நமக்கு விடுதலை தந்தது. உலகத்தின் வியாதியை தன் மேல் போட்டுக் கொண்டு இயேசு சுகத்தை நமக்குக் கொடுத்தார். மக்களின் தரித்திரத்தைச் சிலுவையில் சுமந்து தீர்த்த இயேசு நமக்கு ஐசுவரியத்தைக் கொடுத்தார். நாம் எதையெல்லாம் அனுபவித்துக் கஷ்டப்படக்கூடாதென்பது தேவனுடைய நோக்கமாயிருந்ததோ, அந்த நோக்கத்தையெல்லாம் தங்கள் அறியாமையினால் வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள் சபையின் பிள்ளைகள்.

அவர் (இயேசு) சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது, உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. ... நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்து... நெருக்கி... தரையாக்கிப்போட்டு... உன்னிடத்தில் ... ஒரு கல்லின்மேல் ஒரு கல்-ராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார். லூக். 19:41-44

நம் அறியாமையினால் நம் தேவனை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். நம் பிள்ளைகள் நன்றாக இருப்பதைப் பார்த்து நாம் எவ்வளவாய் சந்தோஷப்படுகிறோம் ... நம் பரம தகப்பனின் நிலைமையும் அதுதானே! நம்முடைய பிள்ளைகளுக்காக நாம் பரிதபிக்கும் அந்த சுபாவம் நம் பிதாவிடமிருந்துதான் நமக்கு வந்திருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வருகை நெருங்கியிருக்கும் இக்கடைசிக்காலத்தில் இதுவரை மறைவாயிருந்த நமது சமாதானத்திற்கு ஏற்ற காரியங்களைத் தேவன் நமக்கு வெளிப்படுத்தி வருகிறார்.

தேவனை விசுவாசித்து விதைத்துதான் பார்க்கிறோம், எந்த பிரயோஜனமும் இல்லையே என்று அங்கலாய்ப்பவர்களை பார்க்க முடிகிறது. நாம் எப்படிப்பட்ட நிலத்தில் விதைக்கிறோமோ, அதற்கேற்ற பலன்தான் நமக்குக் கிடைக்கும். சபைக்கோ, சுவிசேஷம் அறிவிப்பதற்கோ, ஏழைகளுக்கோ நாம் கொடுக்கும்போது; அங்கே தேவனுடைய நோக்கம் நிறைவேறுகிறதா என்பதையும் பார்க்க வேண்டும். சத்தியத்தை மறைத்து, இந்த உலகத்தில் துன்பம் துக்கம்

பாடுகள்தான், எப்படியோ உருண்டு போய் பரலோகத்தில் விழுந்தால் போதும், என்று பிரசங்கிப்பவர்களுக்குக் காணிக்கை கொடுத்தால் என்ன நடக்கும்? அவர்கள் உபதேசித்துச் சொன்ன துன்பம் துக்கம் பாடுகள்தான் விளையும்! புரிந்திருக்கும்.

"நல்லதொரு நிலம் பார்த்து நாளும் விதை விதைக்கணும்" என்பது ஒரு பழைய நாட்டுப்புறப்பாடல்! தேவன் நம்மை முன்குறித்து, அழைத்து, மகிமைப்படுத்தியிருப்பதன் நோக்கம் கண்டிப்பாக விசேஷித்த ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.

தேவனை அறிந்து கொண்டு, அவரிடம் வந்த பிறகும், இன்னும் பாடுதான், துன்பம் தான், தொல்லைதான் என்ற அதே பழைய பல்லவியைப் பாடிக்கொண்டிருந்தோமானால் ... இதற்காகவா தேவனிடத்திற்கு வந்தோம்? சபை கூடுகை, ஆராதனை, ஜெபங்கள், வேத ஆராய்ச்சி கூட்டங்கள், ... எல்லாம் எதற்காக?

பரலோகத்தின் வீதியெல்லாம் சுத்த பொன்னாமே ... அழகான பாட்டு! பொன் மயமான பரலோக இராஜ்ஜியத்தின் வீதியில் தரித்திர கோலத்தில் நடந்து போக நான் தயாராக இல்லை, அப்போ நீங்க?!

சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை. 1 தெச. 5:3

உலகத்தாருடைய நிலைமை இதுதான். தேவனை அறியாத உலக மக்கள் உலக ஐசுவரியத்தில் வாழ்ந்து, செழித்துச் சுகித்திருப்பதைப் பார்க்கிறோம்.

"அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது; அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது. சங். 73:7"

தேவனுடைய பிள்ளைகளுடன் ஒப்பிடும்போது, உலகத்தார்தான் எல்லா ஆசீர்வாதத்தினாலும் செழித்திருக்கிறார்கள். காரணம் என்னவென்பதை முன்னமேயே பார்த்தோம். தேவ பிள்ளைகளின் ஏமாளித்தனத்தை தனக்கு சாதகமாக்கிக்கொண்ட சாத்தானின் ராஜதந்திரம் அது. தங்களுடைய செழிப்பான நிலைமையைப் பார்த்து பெருமையினால் அவர்களுக்கு தலைகால் புரிவதில்லை. தங்களுடைய இந்த வசதியான வாழ்வு நிரந்தரமானது என்றும் இந்தச் சௌகரியமான வாழ்க்கைக்கு முடிவு வராது என்றும் நினைக்கிறார்கள். அவர்களுக்குத் தேவனைப் பற்றிய உணர்வும் இல்லை, தேவனைத் தேடுவதும் இல்லை, அவர்கள் நினைவெல்லாம் தேவன் இல்லையென்பதே!

அப்படிப்பட்டவர்களின் முடிவு எப்படியிருக்கும் என்பதை வேதம் விவரிக்கிறது:

உதாரணமாக அந்த அணைக்கட்டின் ஓட்டையில் விரலை வைத்து, ஊருக்கு வரும் ஆபத்தை தடுத்து நிறுத்திய ஹாலந்து நாட்டுச் சிறுவனையே எடுத்துக் கொள்வோம். சற்று வித்தியாசமாகச் சிந்திப்போம். இருட்ட ஆரம்பிக்கிறது, அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கும் ஆற்றோரமான கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் சுகமாக தூங்கப் போகிறார்கள். தங்களுடைய ஊரின் அணை மிகவும் வலிமையானது என்றும், எவ்வளவு வெள்ளம் வந்தாலும் உடையாது என்ற தைரியத்தோடிருக்கிறார்கள். குறட்டை சத்தங்கள் கேட்க ஆரம்பிக்கிறது.

அணைக்கட்டு பக்கமாகப் போய்ப் பார்ப்போம். ஓட்டையில் விரலை வைத்து அடைத்துக் கொண்டிருந்த சிறு பையனுக்கு குளிர் தாங்க முடியாமல் காய்ச்சல் அடிக்க ஆரம்பிக்கிறது, இனியும் அங்கே உட்கார்ந்திருந்தால் உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்த அவன் அந்த ஓட்டையில் இருந்து தன்னுடைய விரலை உருவி விடுகிறான்!

அவன் வீட்டுக்கு ஓடிப்போய் ஏறக்குறைய ஒரு மணி நேரமாகிறது... அணைக்கட்டின் ஓட்டையிலிருந்து தண்ணீர் வேகமாக பீறிட்டுப் பாய்கிறது, மெல்ல மெல்ல அணையில் விரிசல் விழ ஆரம்பிக்கிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் ஊர் மக்களுக்கு என்ன சம்பவிக்கப்போகிறதென்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

வெள்ளத்தால் அந்த ஊரே அழிக்கப்படப் போகிறது. இதே சம்பவத்தின் ஒரு பிரதிபலிப்பைப்

(**Mirror image-**ஐ) தேவனுடைய பிள்ளைகளுக்கு நடக்கும் காரியத்திற்கு ஒப்பீடாகக் கொண்டு வந்து பார்ப்போம்.

தேவனுடைய பிள்ளைகள் தேவனை தங்களுடைய அப்பாவாக ஏற்றுக் கொண்டு, இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரைத் தொழுது, ஆராதித்து, சேவிக்கிறார்கள். எல்லாக்காரியத்திற்கும் அவரையே நம்பியிருக்கிறார்கள், அவருடைய பிரமாணத்தின் படி நடக்கிறார்கள், கீழ்ப்படிகிறார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் செய்த தியாகம், அதனடிப்படையில் அருளப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு விசுவாசித்து, விதைக்கிறார்கள். தேவனிடமிருந்து வரும் நற்காரியங்களுக்காக காத்திருக்கிறார்கள்... காத்திருக்கிறார்கள்... கொஞ்சம் களைப்பு மேலிடுகிறது. தொடர்ந்து விசுவாசித்து, ஜெபித்து காத்திருக்கிறார்கள்... காத்திருக்கிறார்கள்... சிந்தனை சிதற ஆரம்பிக்கிறது. விடாப்பிடியாக ஜெபத்தின் மேல் ஜெபம் செய்து தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்கிறார்கள்... காத்திருக்கிறார்கள் ... காத்திருக்கிறார்கள்... எதிர்பார்த்த அளவிற்கு எந்த நன்மையும் வராததைக் கண்டு, சோர்ந்து துவண்டு அப்படியே தூங்கிப்போய்விடுகிறார்கள், காரிருள் மூடியதைப் போன்றதொரு அனுபவம்.

விதைகளின்மேல் சாம்பல் தூவப்படுகிறது, நம்பிக்கையின் மேல் இருள் மொய்க்கிறது, கண்கள் பஞ்சடைத்து ... இந்த சூழ்நிலையில் ... தங்களுடைய வாழ்க்கை இனி முடிந்தது, இனி சந்தர்ப்பமே இல்லை என்று அவர்கள் நினைத்திருக்கும் அந்த நிமிடத்தில் ஒரு காரியம் நடக்கிறது! கர்ப்பவதிக்கு திடீரென்று **Labour pain** வந்து குழந்தை பிறப்பதைப் போல ... சடிதியாக ஒரு அற்புதம், ஆச்சரியம் நடக்கிறது. வாக்குத்தத்தத்தின் வாசல்கள் படீர் படீர் என்று திறந்து கொள்கிறது ... வைகறைக் காற்று இரசியமாக காதை உரசிக்கொண்டு போனபோது; ஒரு காரியத்தை கிசுகிசுத்துவிட்டுப் போகிறது ... அது "இயேசு வந்து கொண்டிருக்கிறார்" என்று! அவருக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும், வாக்குறுதி (**Surity**) கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் படபடவென்று இறக்கைகளை அடித்துக் கொண்டு வெளியே குதிக்கிறது...

... அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; லூக். 6:38

அணைக்கட்டின் முழுவதும் தண்ணீருக்குப் பதிலாக தேவனுடைய உன்னத ஆசீர்வாதங்கள் நிறைந்திருப்பதாக வைத்துக் கொள்வோம்! பையன் ஓட்டையிலிருந்து விரலை உருவி விடுகிறான்!

தீடீர் ஆசீர்வாதங்கள் கொட்டோ கொட்டென்று ... இது கற்பனையில்லீங்க, நிஜம்!

பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது மிகுந்த ஆர்வமும், விறுவிறுப்பும் ஏற்படும், புதிய ஏற்பாட்டை விட அநேகர் பழைய ஏற்பாட்டையே விரும்பி வாசிப்பதற்கு இது ஒரு காரணம். பழைய ஏற்பாட்டையும் வாசிக்க வேண்டும்; ஆனால் புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் வாசிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டை சிவப்பு விளக்குக்கும், புதிய ஏற்பாட்டை பச்சை விளக்கிற்கும் ஒப்பிடலாம்.

பச்சை விளக்கு "தடைகள் மாற்றப்பட்டது" என்பதைக் குறிக்கிறது. சிவப்பு விளக்கு "நிற்க வைக்கிறது", தொடர்ந்து போக முடியாதபடி நடைகள் தடை செய்யப்பட்டன. பச்சை விளக்கின் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது, தீர்க்கத்தரிசனமாகச் சொல்லப்பட்டிருக்கும் சிலுவையைப் பற்றிய இரகசியங்கள், இயேசுவைக் குறித்த வெளிப்பாடுகள், புதிய பிரமாணத்தினால் எற்படுத்தப்பட்டிருக்கும் சாத்தியக்கூறுகள் (**advantages**) பற்றி எழுதப்பட்டிருக்கிறது. சிவப்பு வெளிச்சத்தில் புதிய ஏற்பாட்டை வாசிக்கும்போது; பழைய பிரமாணத்தினால் ஏன் தோல்வியடைந்தது என்பதையும், அதனுடைய அசாத்தியங்கள் (**disadvantages**) பற்றியும் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு முட்டையை வெந்த முட்டையா, பச்சை முட்டையா? என்பதைக் கண்டுபிடிப்பது எப்படி? அவற்றை சுழலச் செய்யவேண்டும். நன்றாக வேக வைத்த முட்டை, பச்சை முட்டையை விட அதிக விரைவாகவும், அதிக நேரத்திற்கும் சுழலும். (இது புதிய பிரமாணத்தைக் குறிக்கிறது). பச்சை முட்டையை சுழலச் செய்வதற்கே கடினமாயிருக்கும். இதன் உள்ளே இருக்கும் வேகாத திரவப் பகுதி சுழற்சி இயக்கத்தை உடனே பெறுவதில்லை.

மேலும் வெந்த முட்டையும் பச்சை முட்டையும் சுழற்சியை நிறுத்திக் கொள்வதும் வித்தியாசமாகத்தான் இருக்கும். வெந்த முட்டையை விரலினால் தொட்டால், அது உடனேயே நின்று விடுகிறது. பச்சை முட்டை விரலை எடுத்தப் பிறகும் சிறிது நேரம் சுழலும். ஏனென்றால் இதன் திரவ உள்ளடக்கம், கெட்டியான ஒடு சுழலாமல் நின்ற பிறகும் தொடர்ந்து இயங்குகிறது. ஆனால் வெந்த முட்டையில் வேகாத பகுதி (திரவம்) உள்ளே இல்லை என்பதினால், அதன் ஓட்டின் இயக்கம் நின்றவுடனேயே உட்பகுதியின் இயக்கமும் நின்று விடுகிறது.



பச்சை முட்டையின் மூலம் நியாயப்பிரமாண கிரியைகளின் தோல்வியையும், வெந்த முட்டையின் மூலம் பூரண பிரமாணத்தின் வெற்றியையும் ஒப்புவமையாக மனக்கண்முன் நிறுத்தி அறிந்து கொள்ளலாம். பச்சை முட்டை வேகாத உட்பகுதி அதன் துவக்கம், முடிவு இரண்டையுமே பிரச்சனைக்குள்ளாக்குகிறது. வெந்த முட்டையின் பூரணத்துவம் அதன் துவக்கம், முடிவு இரண்டையுமே எளிதாக்கியது! நம் முற்பிதாக்கள் பின்பற்ற முடியாமல், கீழ்ப்படிய முடியாமல், தடுமாறி தவித்த காரியங்களையெல்லாம் தேவன் இயேசு சிலுவையின் மூலமாக எளிதாக்கியிருக்கிறார். அப்படியிருந்தும், பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் செய்த காரியங்களைக் கூடச் செய்ய முடியாமல் போவதற்கு என்ன காரணம்? தேவனை அறியாத புறஜாதியார் தைரியமாக நம்மை கைநீட்டி குற்றம் சாட்டுவதற்கு என்ன காரணம்?

சத்தியத்தை சரிவர அறிந்து கொள்ளாமல், இயேசு கிறிஸ்துவின் கிருபையினூடே, நியாயப்பிரமாண கிரியைகளையும் போட்டு குழப்பி, அது முடியாமல் போய், முடிவில் ஒரு தோல்வி உலக ஜனங்களுக்கு முன்பாக வெளிப்பட்டு விடுகிறது. சத்தியத்தை அறிந்து கொண்டு, இயேசுகிறிஸ்துவின் கிருபையைச் சார்ந்திருப்போமானால் அவர்களால் குற்றம் சொல்ல முடியாது, இடறவும் மாட்டார்கள், சுவிசேஷமும் வெற்றியடையும். உலகத்தார் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள தயக்கம் காட்டுவதற்கு காரணம் "நற்காரியங்களை" சுவிசேஷமாக அறிவிக்காததுதான்.

சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன. ஏசா. 52:7

சுவிசேஷம் அறிவிக்கும்போது எதையெல்லாம் சொல்ல வேண்டும் என்பது வசனத்திலேயே வருகிறது. இயேசுவை அறிவித்து, அவருடைய சிலுவைப் பாடு மரணம் மூலமாக உலகத்திற்கு அருளப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களை தெரியப்படுத்தி, மனம்திரும்புவதற்கேதுவான ஆர்வத்தை உருவாக்குவதுதான் சுவிசேஷம். சொந்தக்கதை சோகக்கதைகளைச் சொல்லி, கண்கலங்கி, கேட்டுக் கொண்டிருப்பவர்களையும் அழ வைத்து, அவர்களைப் பள்ளத்தாக்குகளுக்குள் இழுத்துக்கொண்டு செல்வது எப்படி "நற்காரியம்" ஆகும்?

நாம் நம்முடைய அறியாமையினால் அனுபவித்த பாடுகளை நம் பிள்ளைகள் அனுபவிக்கக்கூடாது என்ற ஆசை எல்லாத் தேவ பிள்ளைகளுக்குமே உண்டு. நல்ல எதிர்பார்ப்புதான், ஆனால் அதற்காக நாம் என்ன செய்திருக்கிறோம்? அவர்களைச் சரியான சத்தியத்திற்குள் நடத்த வேண்டும். ஏதாவது ஒரு ஆவிக்குரிய சபைக்கு அனுப்புகிறோம், அப்பாடா நிம்மதி என்று இருந்து விடுகிறோம். பாரம்பரிய சபையில் இருந்து வெளியேறி ஒரு பெந்தெகோஸ்தே சபைக்குப் போன பிறகும், வாழ்க்கை மாறாவிட்டால்? ... மனம் மறுரூபமடையாவிட்டால், ... சாட்சியின் வாழ்க்கை இல்லாவிட்டால், ... என்ன பிரயோஜனம்?

எனக்குத் தெரிந்தவரையில், ஞானஸ்நானம், அபிஷேகம், அந்நியபாஷை, பரவசத்தோடு

கூடிய ஆராதனை ... இப்படிப்பட்ட காரியங்களைத் தவிர மற்றெல்லாவித உபதேசத்திலும் இன்னும் பழைய பாரம்பரியங்களும், நியாயப்பிரமாணக் கலவைகளும், பழைய இரசத் துளிகளும், உப்பிப்போன புளித்த மாவுகளும்தான் பிரதானமாகக் காணப்படுகின்றன. தப்பித் தவறி யாராவது புதிய திராட்சை ரசத்தைக் கொண்டு வந்து கொடுத்தால்; அவருக்கு அடிவிழாத குறைதான்!

(உ.ம்.) ஒரு பாரம்பரிய சபைக்குப் போய்க்கொண்டிருக்கும் கிறிஸ்தவனிடம் ஒரு பெந்தேகோஸ்தே சபை விசுவாசி சொன்னார்: "இந்த சபைக்குப் போனால் பரலோகம் போக முடியாதே" என்றார், தொடர்ந்து ஏன் போக முடியாது என்பதற்கான சில விளக்கங்களையும் கொடுத்தார். அதற்கு அந்த பாரம்பரிய கிறிஸ்தவன் சொன்னான்: "எனக்குத் தெரிந்த **X** என்ற ஆவிக்குரிய சபைக்கு **Y** என்ற அம்மாள் 20 வருஷமாக ஆராதனைக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்த அம்மா அந்த சபையில் இருந்து பரலோகம் போவார்களானால், நான் இந்த சபையிலிருந்தே பரலோகம் போய்விடுவேன்" என்றானாம்!

இதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு தான் வந்தது, என்றாலும் உண்மையில் இன்றைய சபைகளின் நிலவரம் பெரும்பாலும் இதுதானே! சபையில் புதிய உடன்படிக்கையின் சத்தியங்கள் தைரியமாகப் போதிக்கப்படும் வரையில் பிரச்சனைகள் மாறப்போவதில்லை. பரிணாமவியலின் தந்தை என்று போற்றப்படும் டார்வின், தேவனை அறியாமல் இருந்த காலத்தில், "மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான்" என்ற தவறான கோட்பாட்டை உருவாக்கி, எல்லோரையும் நம்ப வைத்தார். அந்த கருப்பு விதை மாணவர்களின் பாடப்புத்தகங்களில் விதைக்கப்பட்டு, உலகளாவிய கல்வி கலாசாலைகளில் அமோக விளைச்சலைக் கொடுத்தது. காலம் கடந்து, தன்னுடைய கடைசிகாலங்களில் மனம்திரும்பிய டார்வின் உண்மையை உணர்ந்து கொண்டு, தன்னுடைய தவறான கோட்பாட்டை ஒழிக்க முயற்சி செய்தார், அதற்காக ஜெபித்தார், கடைசிகாலங்களில் தேவனுக்காக ஊழியம் செய்தார். இக்கால சபைகளின் அவல நிலைமைகள், உபதேச குழப்பங்கள், ஒருமனம் இல்லாத காரியங்கள், மாறுபாடுகள், எல்லாவற்றிற்கும் காரணமே ஊழியக்காரர்கள்தான்! அவர்களைக் குற்றம் சொல்வது இங்கே பிரதானமான நோக்கமல்ல, அவர்கள் அறியாமையினால்தான், தாங்களே சத்தியத்தை அறிந்துக் கொள்ளாமல் இருந்ததால்தான் இப்படிப்பட்ட கறுப்பு விதைகளைத் தூவி விட்டார்கள்! விதை வளர்ந்து விளைய ஆரம்பித்துவிட்ட பிறகு யாராலும் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. அப்போ, சபையின் நிலமையே இதுதானா? எதுவுமே பரிகாரம் செய்ய முடியாதா? ஏன் முடியாது? முடியும் "மனம்பொருந்தி செவிகொடுங்கள்"!

டார்வினின் கோட்பாடு **(Darwin Theory)** முற்றிலும் தவறானது என்று இக்காலத்தில் நிரூபிக்கப்பட்டு விட்டது. இன்னும் இந்தக் காரியங்கள்தானே பாடப்புத்தகங்களில் இருக்கிறது? இருக்கலாம், சாத்தான் வெறும் தகர டப்பாவை வைத்துக் கொண்டு ஓசை எழுப்பிக்கொண்டு திரிகிறான். அவன் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டது உண்மை, இப்போது அவன் நடத்துவது வெறும் கொரில்லா யுத்தம்தான்!

"நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள். ஏசா. 1:19"

எதில் மனதை பொருத்த வேண்டும்? வசனத்தில்தான்! எந்த வசனத்தின் மேல் மனதைப் பொருத்துவது? இந்த வசனத்தில்தான்...

"அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்... அப். 13:41"

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர். 12:2

நாம் எப்படி தண்ணீர் குடிக்கிறோம்? இதுவெல்லாம் ஒரு கேள்வியா? இருங்கள், விஷயம் இருக்கிறது, அதனால்தான் கேட்கிறேன். தண்ணீருள்ள ஒரு பாட்டில் அல்லது டம்ளரின் விளிம்பில் உதட்டை பொருத்தி உறிஞ்சி தண்ணீரை உள்ளே இழுக்கிறோம். எப்படி திரவம் நம் வாயினுள் பாய்ந்து தொண்டை வழியாகச் செல்லுகிறது? நாம் தண்ணீர் குடிக்கும்போது நம்

மார்புபகுதி விரிவடைகிறது. இதனால் வாயிலுள்ள காற்றின் அடர்த்தி குறைகிறது, அப்போது வெளியிலுள்ள காற்றின் அழுத்தம், திரவத்தை அழுத்தம் குறைவாயிருக்கும் பகுதிக்குச் செல்லுமாறு தள்ளுகிறது. இவ்விதமாகவே தண்ணீர் நம் வாய்க்குள் செல்கிறது.

இவ்விதமாக வேத வசனங்களை வாசிக்கும்போது, அதில் நம் மனதை பொருத்தி, அதை உறிஞ்சிக் குடிக்கும்படி செய்ய வேண்டும். ஏற்ற விதத்தில் உதட்டைப் பொருத்தினால்தான் தண்ணீர் குடிக்க முடியும், அதையும் கவனிக்க வேண்டும்! பாட்டில் நுனியில் நம் உதடு படாவிட்டால் தண்ணீர் குடிக்க முடியாது, பாட்டில் வாயை நம் உதடுகளினால் முற்றிலும் மூடிக்கொண்டாலும் குடிக்க முடியாது! ஏனென்றால் வாயிலுள்ள காற்றின் அழுத்தமும், நீருக்கு மேலேயுள்ள காற்றின் அழுத்தமும் சமமாக இருப்பதால், தண்ணீரை வாய்க்குள் அனுப்ப வெளிக்காற்றினால் முடியாது, காரணம் அது உள்ளே நுழைய இடமும் கொடுக்கப்படவில்லை.

பிரகாசமுள்ள மனக்கண்கள் வேண்டும் என்று ஜெபித்து, பெற்றுக் கொண்டு, அந்த கண்களினால் வேதத்தை வாசிக்க வேண்டும். பிரகாசமுள்ள மனக்கண்கள் நம் ஆவிக்குரிய உள்ளான மனதில் இருக்கிறது. அப்படி வாசிக்கும்போது, நம் மனம் வசனத்தோடு பொருந்தி, அதன் சாரை உறிஞ்சி எடுக்க பரிசுத்தாவியானவர் உதவி செய்வார்.

எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிது. என்று திருக்குறள் சொல்கிறது. உலகத்தாரே தாங்கள் கேட்கும் உலகக் காரியங்களைக் குறித்து கவனமாயிருக்கும்படி எச்சரிக்கப்படுகிறார்களே! நாம் எவ்வளவு அதிகம்! உலகத்திலேயே தலைசிறந்த பிரசங்கியாராக இருந்தாலும் சரி, புகழ் வாய்ந்த சுவிசேஷகராக இருந்தாலும் சரி, அவர் சிலுவையின் சத்தியங்களை மறைத்து, வேறெதையாகிலும் பிரசங்கிக்கிறாரென்றால், அதை ஓரங்கட்டிவிடுவது நல்லது. மிக நன்றாக பிரசங்கிக்கிறார், மெய் மறந்து போகிறது, சிலிர்க்க வைக்கிறது, கண் இமைக்க மறந்து போகிறது, பிரம்மிப்பாக இருக்கிறது என்பதற்காக பிரசங்கியார்களின் வார்த்தைகளை அப்படியே விழுங்கி விடுவது ஆபத்தானதாகும். தேவனை அறியாத சில அரசியல் தலைவர்கள், உலக அறிஞர்கள், மத போதகர்கள் பிரசங்கிப்பது கூட நன்றாகத்தான் இருக்கிறது. அதற்காக ...

ஒரு ஊழியக்காரரின் பேச்சு; இயேசுவின் முகத்தை மறைத்து, நம்மை அந்த ஊழியரின் பக்கமாக ஈர்க்கிறது என்றால் ... எச்சரிக்கையோடு பின்வாங்கிவிடுங்கள்.

... இந்நாட்களுக்கு முன்னே தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள். அப். 5:36

இந்த வசனத்தின்படி பலர் எழும்பி, கொஞ்ச நாட்கள் மக்கள் மத்தியில் பிரபலமாகி, பிறகு காணாமல் போகும் காரியத்தைப் பரவலாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம், இக்கடைசி காலங்களில் இப்படிப்பட்ட ஆபத்துகள் அதிகம், எச்சரிக்கையாய் இருப்போம், பரிசுத்தாவியானவர் மட்டுமே நம்மைச் சகல பாதுகாப்புகளோடு நடத்த முடியும்.

நம்முடைய விசுவாசம் ஒன்றாகவும், அறிக்கை வேறாகவும் இருக்கக்கூடாது, இரண்டும் ஒத்திருக்க வேண்டும். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி என் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். பிலி.4:19 – என்ற வசனத்தை அறிக்கையிட்டுவிட்டு ஒரு மணி நேரம் கழித்து "கையிலே பைசா காலி, இந்த மாச செலவை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்" என்று யோசித்தால் ... ?

இயேசுவின் தழும்புகளால் குணமானேன் – என்று சொல்லி விட்டு, அடுத்த நாள் காலையில் "லேசா தலையை வலிக்கிற மாதிரி இருக்கே, காய்ச்சல் வருமோ" என்று சொன்னால்...

உலகத்திலிருக்கும் சாத்தானைவிட என்னிலிருக்கும் இயேசு பெரியவர் – என்ற விசுவாச அறிக்கையை காதுகள் கேட்கச் சொல்லிவிட்டு, இராத்திரியில் சலங் சலங் என்று சத்தம் கேக்குதே, மோகினிப் பிசாசாக இருக்குமோ என்று பயந்து ஜன்னலைப் பூட்டினால் ... ?

ஒரு கொத்து திராட்சைப் பழத்தைச் சாப்பிட்டுவிட்டு, ஒரு துளி விஷத்தையும் சாப்பிட்டால் ... நிறைய திராட்சைப் பழங்கள் சாப்பிட்டிருக்கிறேன், அதனால் விஷம் எதுவும் செய்யாது என்று

இருக்க முடியுமா? சாப்பிட்டு சில நிமிஷங்களில் விஷம்தான் வேலை செய்ய ஆரம்பிக்கும், திராட்சைப் பழங்கள் வாயை மூடிக்கொண்டு மூலையில் கிடக்கும். ஒரு ஆலோசனை, வசனங்களை அறிக்கை செய்த பிறகு உங்களால் விசுவாசமாக பேச முடியவில்லையென்றால், வாயை மூடிக்கொண்டு சும்மாவாவது இருங்கள், உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும்...

அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ: நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க ... கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் ... எண். 13:31

அங்கே ... இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுகிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, ... துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள். எண்.13:33

மோசே வேவு பார்ப்பதற்கென்று அனுப்பிய மனிதர்கள் உண்மையைத்தான் சொன்னார்கள், அவர்கள் பொய்யைச் சொல்லவில்லை, என்றாலும் அவர்களின் வார்த்தைகளை வேதம் துர்ச்செய்தி என்று வர்ணிக்கிறதே, ஏன்? அவர்கள் தங்களுடைய கண்களையும், சூழ்நிலைகளையும் நம்பினார்கள், தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் நம்பவில்லை. தேவன் அந்த தேசத்தை கொடுப்பதாக எண்.13 அதிகாரத்தின் 2 ஆம் வசனத்திலேயே வாக்களிப்பதைக் கவனியுங்கள்:

நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ...

அதனால் நிச்சயமாக தேவன் அந்த தேசத்தைக் கொடுக்கத்தான் போகிறார், அது முதலிலேயே நிச்சயிக்கப்பட்ட காரியம். தேவன் தரப்போகிற தேசத்தைச் சுற்றிப் பார்த்து அதன் காரியங்களை விசாரிக்கத்தான் அவர்கள் அனுப்பப்படுகிறார்கள், காரியத்தையே கெடுக்க அல்ல. வேதம் ஒன்றைச் சொல்ல, நாம் இன்னொன்றைச் சொன்னோமானால் அது அவிசுவாச அறிக்கை, அதைத்தான் துர்ச்செய்தி என்கிறது வசனம்.

நாமும் இப்படித்தான் செய்கிறோம். வசனம் ஒரு காரியத்தைச் சொல்லிக்கொண்டே இருக்கிறது. பிரச்சனை அதற்கு எதிர்மறையானதைச் சொல்லிக் கொண்டேயிருக்கிறது. டாக்டர் "இனிமேல் எதுவும் செய்வதற்கில்லை, பிழைக்கமாட்டார், சொல்ல வேண்டியவங்களுக்கு சொல்லியனுப்பிடுங்க" என்று கையை விரித்து விடுகிறார். வசனமோ, "அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என்கிறது.

குணமாகிறீர்கள் என்றோ, குணமாவீர்கள் என்றோ சொல்லவில்லை. குணமாகிக்கொண்டேயிருக்கிறீர்கள் என்றோ, குணமாகிக்கொண்டேயிருப்பீர்கள் என்றும் சொல்லவில்லை! இப்படிப்பட்ட **samalification** வார்த்தைகளால் ஊழியக்காரர் விசவாசியை வேண்டுமானால் திருப்திபடுத்தி அனுப்பிவிடலாம், தானும் திருப்திப்பட்டுக் கொள்ளலாம், ஆனால் தேவனை இந்தப் பதில் திருப்திப்படுத்தாது.

தேவன் தன் ஒரே குமாரனைக் கொடுத்து கிருபையாய் வாக்குத்தத்தங்களைத் திறந்து வைத்திருக்க, ஒரு மெகா சைஸ் பூட்டை எடுத்துக்கொண்டு போய், வாக்குத்தத்தக் கதவுகளை இழுத்துப் பூட்டிவிட்டு சாவியை இடுப்பில் சொருகிக்கொண்டு வந்தால் ... இது பெரிய காரியமா? இதற்காகவா இயேசு மரித்தார்?

**Showcase** ல் காட்சிப்பொருளாக வைக்கப்பட்டிருந்த வாக்குத்தத்தங்கள் மேல் தூசி படிந்து, பூசணம் பூத்து, நிறம் மங்கி, பழசாகிப் போனது. முதலிலேயே குழந்தை கேட்டது, "பொம்மை அழகாக இருக்கிறது, விளையாடுவதற்கு எடுத்துக்கொள்ளவா?" என்று. "அச்சச்சோ, கூடாதும்மா, அது அழகுக்காக வைக்கப்பட்டிருக்கிறது, எடுக்கக்கூடாது" என்று அம்மா சொல்லிவிட்டாள்!

இப்போதோ, அது குப்பைக்கூடையில் போடப்பட்டது. பரிதாபக் குழந்தை அதைச் சோகத்துடன் எடுத்து ஏக்கத்துடன் பார்த்தது. எடுத்துக் கொண்டுப் போய், அதை துணியால் துடைத்து, சுத்தம் செய்து, அழகுபடுத்தி, தன்னுடைய மேஜையில் வைத்துக் கொண்டது! தன்னுடைய பெயரை அதில் எழுதிக்கொண்டது, தினமும் விளையாடியது. பொம்மையை ஜன்னல் வழியாக தூக்கிக்காட்டி, பக்கத்துவீட்டு பாப்பாவையும் விளையாடக் கூப்பிட்டது.

தேவனுடைய நற்செய்திகளை (வாக்குத்தத்தங்களை) நம்முடைய துர்ச்செய்திகளால் கெடுக்காமலிருப்போம்.

அப்படியானால் ஏற்றவிதத்தில் விசுவாசித்து வாக்குப்பண்ணப்பட்டதை பெற்றுக் கொள்ள என்ன செய்யலாம்?

... விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். ரோமர் 10:17

வேத வசனங்களை வாசித்து, தியானித்து வருவதனாலும், வேத வசன விளங்கங்கள், வியாக்கியானங்கள், பிரசங்கங்கள் கேட்பதினாலும் வரும்.

வேதம் வாசித்தாலும், பிரசங்கம் கேட்டாலும் விசுவாசம் வரவில்லையென்றால் ... ?

விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. யாக். 2:22

கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் என்ற வசனத்தை விசுவாசித்தாலே ஆசீர்வாதம்தான் என்றாலும், விதைத்துக் கிரியை நடப்பிக்கும்போது வசனத்தின்மேலுள்ள நம் விசுவாசம் பூரணப்படுகிறது. விசுவாசம் கிரியை நடப்பிக்கும், விதைப்பது ஒரு விசுவாசக்கிரியை ஆகும்.

## தொடரும் சந்தேகங்கள்:

சபையின்மேலும், ஊழியக்காரர்கள்மேலும் நம்பிக்கையில்லாத தேவபிள்ளைகள் பலர் ஏழைகளுக்கு உதவி செய்கிறார்கள், தானதர்மங்கள் செய்கிறார்கள், ஆனால் சுவிசேஷப் பணிக்காக காணிக்கையெதுவும் கொடுப்பதில்லை. இதைப்பற்றி? ஏழைகளுக்கு கொடுப்பது நல்லது, வேதம் பல இடங்களில் அதை பரிந்துரை செய்கிறது, இல்லையென்று சொல்லவில்லை.

பசியோடிருக்கும் ஒருவனுக்கு ஒரு மீன்குழம்பு சாப்பாடு வாங்கிக் கொடுக்கிறீர்கள், அது நல்ல காரியம், பாராட்டுகிறோம். தினமும் இதையே நம்மால் செய்ய முடியுமா? அவனுக்கு மீன் பிடிக்க ஒரு படகையும், மீன் வலையையும், தூண்டிலையும், மீன் சேகரிப்பு பெட்டியையும், வெட்டும் கத்தியையும், தராசு, .... தொடர்ச்சியாக சில இத்தியாதிகள் ... வாங்கிக் கொடுத்தால் அவனுடைய வாழ்க்கையின் கடைசிப்பகுதி வரைக்கும் அது அவனுக்கு பிரயோஜனமாக இருக்குமல்லவா?

தானதர்மம் செய்வதை விட சுவிசேஷம் அறிவிக்க செலவழிப்பது ஆயிரம் மடங்கு மேலானது என்பதை அதற்காகத்தான் மீண்டும் மீண்டும் சொல்லுகிறோம். தான தர்மத்தை விட வேண்டாம், எது முக்கியம் என்பதை இங்கே தெளிவாக்குகிறோம். யோசிக்க வேண்டாம், உங்களுக்கு நம்பிக்கை வராவிட்டால் நீங்களாகவே செலவு செய்து சுவிசேஷம் அறிவிக்கலாம்.

சுவிசேஷம் மனிதனின் வாழ்க்கையை மாற்றும்... வறுமையை மாற்றும்... வியாதியை குணமாக்கும், சாபத்தை நீக்கும், பாவத்தைப் போக்கும், விடுதலையைக் கொண்டுவரும். இந்த உலகத்தில் பலதரப்பட்ட மனிதர்கள், அவர்களின் பிரச்சனைகள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஒரு லட்சம்! ஒவ்வொரு பிரச்சனையாகத் தீர்ப்பதற்கு ஒரு லட்சம் முறை அவர்களின் எல்லைகளுக்குள் பிரவேசித்து, **risk** எடுப்பதைவிட, அவர்களுக்கு இயேசுவைக் கொடுத்துவிட்டால் போதும்! (இயேசுதான் பிதாவின் வார்த்தை ... அந்த வார்த்தைதான் சுவிசேஷம்) இருக்கிற ஒரு லட்சம் பிரச்சனைகளுக்குள்ளும் தேவனுடைய வார்த்தைகள் ஊடுருவிச் சென்று அவற்றை அகற்றும்.

## நல்ல தேவன்:

தேவன் பயங்கரமானவர், பட்சிக்கிற அக்கினி, ஆக்கினையை ஊற்றுபவர் என்று சொல்லி மனதை நோகடிக்கும் பிரசங்கங்களில் மத்தியில், “நம் தேவன் நல்லவர்” என்ற செய்தி... பாலைவனத்தில் நடந்து கொண்டிருக்கும் மனிதனின் நாக்கைக் குளிரச் செய்யும் குளிர்நீரூற்றைப் போலிருக்குமல்லவா?

ஆகாயமண்டலத்திலே பிரகாசிக்கிற சூரியனை ... ஒருவரும் நோக்கிப் பார்க்கக்கூடாதே;

தேவனிடத்திலோ பயங்கரமான மகத்துவமுண்டு. யோபு. 37:22

அவர்களைப் பார்த்துப் பயப்படவேண்டாம்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார், அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன். உபா. 7:21

... கர்த்தரால் உண்டான பயங்கரம் ஜனத்தின்மேல் வந்ததினால், ... 1 சாமு. 11:7

கோபாக்கினையைச் செலுத்துகிற தேவன் அநீதராயிருக்கிறார் ... ரோம. 3:5

தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலிகளாகத் தகனிக்கும்படி ... நான் சொன்னதுமில்லை, இவைகள் என் இருதயத்தில் தோன்றினதுமில்லை. எரே. 19:5

அண்டசாராசரங்களை உருவாக்கிய தேவனின் கிரியைகளுக்கு முன்னதாக சூரியன் ஒன்றுமில்லாதது போல இருக்கிறதல்லவா? ஆனால் நமக்கோ அது ஒரு பிரமாண்டம்! தொடர்ச்சியாக சில நிமிடங்களுக்கு உற்றுப் பார்க்க முடியாது. அவர் எவ்வளவு பெரியவர் என்று அளவிட எந்த கற்பனாசக்தியினாலும் முடியாது. அவ்வளவு மகத்துவமுள்ள தேவன் மனிதர்களிடம் வரும்போது, நெருங்கும்போது, இடைபடும்போது தவிர்க்க முடியாமல் சில காரியங்கள் நடக்கிறது, அதைத்தான் பயங்கரம், கோபாக்கினை, பட்சிக்கிற அக்கினி என்ற வார்த்தைகளால் வர்ணிக்கப்படுகிறது.

உதாரணமாக எறும்பு என்னைவிட 10,00,000 மடங்கு சிறியது! எனக்கு எறும்புகளைப் பிடிக்கும், அதன்மேல் எனக்கு எந்தவிதமான கோபமோ, விரோதமோ கிடையாது. கையில் கடிக்கிறதே என்று இறுகத் தொட்டால் போதும் நசுங்கிச் செத்துப் போகிறது. நடக்கும்போது நமக்குத் தெரியாமலேயே என்னுடைய பிரமாண்டமான உருவத்தால் (எறும்பைப் பொறுத்தவரை) அவை நசுங்கிச் செத்துப் போகின்றன. சில நேரங்களில் சூடான காப்பியினுள் விழுந்து செத்து மிதக்கும் ... இப்படியே சொல்லிக்கொண்டே போகலாம். இதனால் நான் பயங்கரமானவள் என்று அர்த்தமா? இல்லையே, ஆனால் எறும்புகள் அப்படித்தான் நினைத்துக் கொள்கின்றன, தங்கள் அறியாமையினால்! அவைகளின் சொற்ப புத்திக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.

நான் உங்களை நேசிக்கிறேன் என்று அவைகளிடம் போய் சொன்னேன், அவைகளுக்குப் புரியவில்லை, ஏன் நான் சொன்னதே அவைகளுக்குக் கேட்கவில்லை, கேட்க வேண்டும் என்று அவைகள் முயற்சிக்கவுமில்லை, என் பேச்சு கேட்கவில்லையே என்று அவைகள் கவலைப்படவும் இல்லை. ஒரு எறும்பைக் கையில் எடுத்து விவரம் சொல்ல முயற்சி எடுத்தேன், அதற்குள் கை பட்டு நசுங்கி, அதன் கால்கள் உடைந்து விட்டன! என்ன செய்வது?

இதே பிரச்சனைதான் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே நடந்தது. இந்தப் பிரச்சனையை தவிர்ப்பதற்காக, தேவன் தன்னுடைய குமாரன் இயேசுவை உலகத்திற்கு அனுப்பி, மனிதனுடைய அளவின்படியே சிறியதாக மாற்றி அனுப்பி, அவர் மூலமாக தன்னுடன் தொடர்பு வைக்க வழி ஏற்படுத்தினார். மகா பெரிய தேவன் நமக்காக, மகா சிறியவராகி நம்மோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். அவருடைய அன்பிற்கு இதைவிட ஒரு அளவீடு இருக்க முடியுமா? இனிமேலும் தேவனைத் தவறாகப் புரிந்து கொண்டு அவரை வேதனைப்படுத்தாமலிருப்போம்.

மின்சாரம் மனுக்குலத்திற்கு எண்ணிலடங்காத நன்மை செய்து வருகிறது. மின்சாரம் **(Electricity)** இல்லையென்றால் மனிதனே இல்லை என்று சொல்லுமளவிற்கு எங்கும் எதிலும் மின்சக்திதான்! காற்று, நிலக்கரி, தண்ணீர் மூலமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை நாம் அப்படியே உபயோகிக்க முடியாது. அதைச் சரியான விதத்தில் உள்வாங்கி, கிரமமாக அந்தந்த மின்இயங்கி சாதனங்களுக்குள்ளாக **(Zero watts Bulb, Tube lights, Radio, TV, Computer, Iron box, Motors, Electric Trains, Satellites, Rockets)** செலுத்தும்போதுதான் அது உபயோகமுள்ளதாக மாறுகிறது. இவ்விதமாகத்தான் இயேசுவும், பரிசுத்தாவியானவரும் பிதாவின் மகத்துவங்களை நம் எல்லைகளுக்குள்ளாகக் கொண்டு வருகிறார்கள்.

ஒழுங்கு முறைகளோடு இந்தக்காரியங்கள் செய்யப்பட்டு வந்தாலும், மின்சார தாக்குதலால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்காது. காரணம்? கவனக்குறைவு, அறியாமை, சூழ்நிலைகள், கட்டாயச் சூழ்நிலைகள், அவசரம், இன்னும் நிறையச் சொல்லலாம்.

தேவனைக் குறித்த சரியான அறிவில்லாததினால், வேத வாசிப்புக் குறைவால் (அவர் நம்மோடு பேசுவது தடைபடுகிறது), ஜெபக்குறைவால் (நாம் அவரோடு பேசுவது தடைபடுகிறது), பல பிரச்சனைகள் நமக்கு ஏற்படுகின்றனவே தவிர தேவனுடைய கோபம் காரணமல்ல. தேவன் நல்லவர், அவரால் நல்லதை மாத்திரமே செய்ய முடியும். ஏனென்றால், பரலோகத்தில் கெட்டது கிடையாது, அதனால் பரலோகத்தில் இருக்கும் தேவன் அங்கே என்ன உண்டோ அதைத்தான் தன் செயல்களினூடே கொண்டு வருவார். அங்கே கண்ணீர், கவலை, துக்கம், வியாதி, தரித்திரம், பயம், அவிசுவாசம், பெருமை, பாவம், பயங்கரம், கோபாக்கினை, தீ, எதுவுமே கிடையாது. அதனால் இவை யாவும் தேவனிடமிருந்து வருவதில்லை என்பதை அறிந்து கொள்ளலாம்.

புதிய பிரமாணம் ஒரு புதையல், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன ஆகமங்களில் அவைகள் புதைக்கப்பட்டிருந்தன. அன்றே அவற்றைத் தோண்டியெடுக்க பலர் முற்பட்டனர், ஏன் தேவ தூதர்கள்கூட முயற்சி எடுத்தனர். ஆனால் முடியாமல் போனது, ஏனென்றால் அவற்றின் மேல் முத்திரை **(lock)** போடப்பட்டிருந்தது.

“தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.

தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள். (1 பேதுரு. 1:11,12)”

வசனத்தின்படி மறைக்கப்பட்டிருந்த சத்தியங்கள் இக்காலத்தில் பிரசங்கிக்கப்பட்டு வருகின்றன. கேட்கவோ திராணியில்லை, நம்ப முடியவில்லை! புதையலா? நமக்கா? நிஜமாகத்தானா? கிள்ளிப்பார்த்துக் கொள்கின்றனர். ஏன் இந்த நிலைமை? புதையல் இருக்குமிடத்தை ஆராய்ந்து, குறிக்கல்லை நாட்டி, மண்வெட்டியினால் புதையலிருக்கும் இடம் வரை ஆழமாகத் தோண்ட முடியவில்லை, பொறுமையில்லை, ஞானமில்லை, இன்னும் நிறைய இல்லை.

பாரம்பரிய இருளுக்குள் எதையோ தேடித் தேடி தோற்றுப் போன நம் உள்ளான மனிதனின் ஆவிக்குரிய கண்கள் வெளிச்சத்தைத் தேடி அலைந்தது. ஒரு காலகட்டத்தில் பரிசுத்தாவியானவரின் உதவியால் அந்த வெளிச்சத்திற்குள் கண்ணைத் திறந்தது. சத்தியத்தைக் கண்டுகொள்ள வெறும் மனக்கண்கள் போதாது, அதற்கு பிரகாசம் தேவையாயிருக்கிறது. 40 வயதைத் தாண்டும்போது ஏற்படும் பார்வைக்குறைவைச் சமாளிக்க மூக்குக்கண்ணாடி அணிகிறோம். அதே போல நம் ஆவிக்குரிய கண்களுக்கேற்ற கலிக்கம் போடச்சொல்லி தேவன் ஆலோசனை சொல்கிறார். “... நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். வெளி. 3:18”

குருடாகிப்போன மனக்கண்களினால் வேதத்தின் சத்தியத்தைப் பார்க்க முடியாது. பார்வை இழந்தவர்களுக்கு செயற்கை கண் பொருத்தி மீண்டும் பார்வை கிடைக்கச் செய்யும் ஆராய்ச்சிகள் நீண்டகாலமாக நடந்து வருகிறது. அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் டோக்னி கண் இன்ஸ்டிடியூட்டில் இந்த ஆய்வை செய்துவரும் அமெரிக்க டாக்டர் ஹ(உ)மாயூன் **(Humayoon)** முக்கிய வெற்றியை பெற்றுள்ளார்.

“ரெடினா” எனப்படும் விழித்திரை பாதிக்கப்படும்போது பார்வையிழப்பு ஏற்படுகிறது. கருவிழியின் பின்புறமாக அமைந்திருக்கும் இந்த ரெடினா, பார்வை நரம்புடன் இணைக்கப்பட்டிருக்கிறது. விழித்திரையில் விழும் பிம்பங்கள் இந்த நரம்பு வழியாக மூளைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, காட்சிகளை மூளை உணர்ந்து கொள்கிறது. விழித்திரைக்குப் பதிலாக உருவாக்கப்பட்ட ஒரு சிறிய கம்ப்யூட்டர் சிப் ஒன்று சிறிய அறுவை சிகிச்சை மூலம் கண்ணுக்குள் பொருத்தப்படுகிறது. சிறிய வீடியோ காமிரா பொருத்தப்பட்ட கண்ணாடியும், செயற்கை விழித்திரையும் இணைந்து செயல்படும்படி அமைக்கப்படுகிறது. இந்த நவீன கண்ணாடியை அணிந்து கொள்ள வேண்டும்.

இப்போது வீடியோ காமிராவில் பதிவான காட்சிகள் அருகில் உள்ள சிறிய ரேடியோ ரிசீவருக்குச் செல்லும். அங்கே அவை சிக்னல்களாக மாற்றப்பட்டு செயற்கை விழித்திரைக்கு செல்லும். சிக்னல்களைப் பெற்ற செயற்கை விழித்திரை **(Computer chip)** அதை நரம்பு மண்டலங்கள் வழியாக மூளையை அடையச் செய்து, அதைக் காட்சியாக உணர வைக்கிறது. வினாடிக்கும் குறைவான நேரத்தில் இவையெல்லாம் நடந்து முடிகின்றன.

இந்த தொழில் நுட்பத்தின்மூலம் பார்வை பெற்றவர் மூர்பூட் என்ற மூதாட்டி. இவர் சொல்லுகிறார்: "பேரப்பிள்ளைகள் கால்பந்து விளையாடும்போது, பந்து செல்லும் திசையைப் பார்க்க முடிகிறது, கூடைப்பந்து விளையாடும்போது பந்தைத் துல்லியமாக கூடைக்குள் போட முடிந்தது, பேத்தி நடனமாடியதைப் பார்க்க முடிந்தது ... அற்புதமான அனுபவம் இது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் 5 ஆண்டுகளுக்குள் சிறிய வீடியோ காமிராவை கண்ணுக்குள் பொருத்தும் தொழில் நுட்பம் வெற்றியடையும். உலகம் முழுவதும் பார்வையிழந்து தவிக்கும் பல கோடி மக்கள் பார்வையடைவார்கள் என்று **Humayoon** குறிப்பிட்டுள்ளார்.

இப்போது நம்முடைய உள்ளான மனிதனின் பார்வைத்திறன், ஏன் அவை குருடானது, பார்வை பெற என்ன செய்யலாம் என்பதைக் கொஞ்சம் பார்ப்போம்.

தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான். 2 கொரி. 4:4

சாத்தான்தான் (இப்பிரபஞ்சத்தின் தேவன்) ஆவிக்குரிய மனிதனின் கண்களைக் குருடாக்குகிறான் என்று பார்க்கிறோம். நாம் சத்தியத்தை அறிந்து, அதன்படி நடந்து, நித்திய ஜீவனைப் பெற்றுவிடக்கூடாது என்பதற்காக இப்படிச் செய்கிறான்.

... இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான். 1 யோ. 2:11

குருடனான உள்ளான மனிதனுக்குச் சத்தியம் தெரியாமல் போகிறது, சாத்தான் மறைக்கிறான். அதனால் சத்தியத்திற்குப் புறம்பான காரியங்களைச் சரியானது என்று நினைக்கிறான். இயேசு கிறிஸ்து இரத்தக்கிரையம் சிந்தி ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையை அசட்டை பண்ணி, திரும்ப நியாயப்பிரமாண பாரம்பரிய வழிகளிலேயே நடந்து போகிறான். இலக்கு எது என்று அவனுக்கே தெரிவதில்லை.

கண்ணிலிருக்கும் குறைபாட்டை நீக்கிப் பார்வையடையச் செய்பவர் பரிசுத்தாவியானவரே.

... இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான். அப். 9:17

நாம் குருடாகவே இருந்தால் பரிசுத்தாவியானவரால் நாம் நடத்தப்பட முடியாது. அதனால் நம்மை நடத்துவதற்கு முன்னதாக நம் கண்களைச் சரிசெய்து அவற்றை பார்வையடையவைக்கும் வேலையை முதலில் செய்கிறார்.

... இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்போது பிரகாசிக்கிறது. யோவா. 2:8

சத்திய ஆவியானவர் வந்ததும் நமக்கு நாம் ஜெபித்தபடியே பிரகாசமுள்ள மனக்கண்கள் கிடைக்கிறது, வசனங்களை புதிய கோணங்களில் வாசிக்க ஆரம்பிக்கிறோம். ஒளிமயமான எதிர்காலம் கண்களில் தெரிய, விரியத் துவங்குகிறது. நம்பிக்கையில்லாமல் இருளில் துவண்டு விழுந்துகிடந்த நம்முன் ஒளிக்கு கால் வைக்கும் ஏணி ஒன்று வைக்கப்படுகிறது.

## தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது ...

அக்காலத்தில் ... குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும். ஏசா. 29:18. உண்மை. எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு இக்காலத்தில் வெளிப்பாடுகள் ... பிரமிக்கத்தக்க வகையில் இரகசியங்கள் வெளிப்படுகின்றன, கர்த்தர் வெளிப்படுத்துகிறார்.

கண் தெரியாத அந்த பாட்டியம்மாவிற்கு நவீன தொழில் நுட்பத்தின்படி கண்பார்வை கிடைத்ததும் கிடைத்த அந்த சந்தோஷம் ... அது எப்படி இருந்திருக்கும் என்ற உணரவேண்டுமானால், நாமும் அந்த அனுபவத்தைக் கடந்தால்தான் புரியும்.

கிடைத்திருக்கும் புதிய பார்வையை பாதுகாத்து, புதிய காட்சிகளைப் பெற்று, புதிய பிரசங்கங்கள் செய்வோம், புதிய புத்தகங்கள் எழுதுவோம், புதிய பாடல்கள் பாடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்!

எந்த குறைவுமில்லாத ஆயிரம் வருட அரசாட்சி வரப்போகிறது என்பது தேவனுடைய நிஜம், நம் தரிசனமும் அதுதான். உலக நவீன தொழில்நுட்பங்களும் அப்படிப்பட்ட ஒரு உலகத்திற்காக ஏங்கி, முன்னேறத் துடிக்கின்றன. ஆனால் அவர்களின் அறியாமை, குருடாக்கப்பட்ட கண்கள், இயேசு இல்லாத வாழ்க்கை அதைத் தடை செய்கின்றன.

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் ... யோ. 8:32

ஆண்டாண்டு காலமாக விசுவாசியாக இருந்தாலும் தேவபிள்ளைகள் பாவத்தை மேற்கொள்ள முடியாமல் அங்கலாய்ப்பதை சபையெங்கும் பார்க்க முடிகிறது? ஏன்? என்ன காரணம்? நியாயப்பிரமாண முயற்சிகள்தான் அதற்குக் காரணம். முடியாது என்று சொல்லி முத்திரை குத்தப்பட்ட ஒன்றின் முத்திரையை உடைக்க முயற்சிப்பதுதான் காரணம்.

“எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். யாக். 2:10”

நியாயப்பிரமாணத்தின் ஒரு சட்டத்துக்கு கீழ்ப்படிகிறவனுக்கு, இன்னொன்று முடியாது. உதாரணமாக எல்லோரிடத்திலும் அன்பாக இருக்க முயற்சிப்பேன் ஆனால் பொறுமை எங்கோ போய்விடும். கோபத்தை அடக்க முயற்சிக்கும்போது இன்னொரு பக்கம் விசுவாசம் சந்துபொந்து வழியாக வெளியேறிக்கொண்டிருக்கும். தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்ந்த செம்புலிங்கம் என்ற திருடனைப் பற்றி பலர் கேள்விப்பட்டிருப்போம். (அவனுடைய சுயசரிதை புத்தகமாக வெளியிடப்பட்டது.) மலைப்பிரதேசங்களில் காடுகளில் வாழ்ந்த அவன் வழிப்பறிக் கொள்ளைக்காரன். பெண்களை வழிமறித்து நகைகளை மிரட்டி வாங்கிக்கொண்டுப் போவானாம். அதைக்கொண்டு தரித்திரத்தில் வாழ்ந்த மலைவாழ் மக்களுக்கு உதவி செய்வானாம்! இது எப்படி இருக்கு? இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று, ஒரு ஆவிக்குரிய சபையில் உபதேசங்களைப் பெற்று வந்தும், இன்னும் பாவங்களிலேயே (ஒரு வேளை பாவங்களின் அளவு – **Density** குறைந்திருக்கலாம்) வாழ்வதற்கான முக்கியமான காரணம்; இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் நியாயப்பிரமாண முயற்சிகள்தான். ஒன்றைச் செய்தால், இன்னொன்று முடியாது.

அந்த செம்புலிங்கம் கூட டோனாவூரில் ஊழியம் செய்த ஏமி கார்மைக்கேல் அம்மையார் அவர்களால் கிறிஸ்துவண்டை வழி நடத்தப்பட்டு மனம் திரும்பினார் என்பது வரலாற்றுச் செய்தி.

இந்தப் பிரச்சனையில் இருந்து தப்பிக்க ஒரே வழி ... “அன்பானது பிறனுக்கு பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. ரோ. 13:10”

அன்பினால் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முடியும் என்று பார்க்கிறோம்! அப்படியானால் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் அன்பாக இல்லையா? அவர்களால் ஏன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முடியவில்லை?

... நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே, தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் ... ரோமர் 5:5

பழைய ஏற்பாட்டின் காலங்களில் இயேசுகிறிஸ்து வெளிப்படவில்லை, அவர் மூலமாக பரிசுத்தாவி அருளப்படவில்லை, அந்தப் பரிசுத்தாவியானவர் மூலமாக அன்பு இருதயங்களில் ஊற்றப்படவுமில்லை. ஆனால் பூரணப்படாத தேவ அன்பு எல்லோரிடத்திலும் இருந்ததுதான். ஏனென்றால் சிருஷ்டிப்பின் போது சிருஷ்டிகரது சாயல், குணாதிசயம் தானாகவே அவர்களுக்குள் கடந்து சென்றதால். இயற்கையாகவே அமைந்திருக்கும் தேவனால் உண்டான அன்பு. ஆனால் அந்த அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றப் போதுமானதாக இல்லை. கிறிஸ்துவின்

ஆவியானவரால் ஊற்றப்பட்ட அன்பு சாதித்தது, முடியாததை சாத்தியமாக்கிற்று, கமாக்களுக்கு (,) முற்றுப்புள்ளி (.) வைத்தது!

"... அன்போ சகல பாவங்களையும் மூடும். நீதி. 10:12"

இப்படியே பழைய ஏற்பாட்டு முற்பிதாக்களினால் முடியாமல் போன காரியங்களை, புதிய ஏற்பாட்டின் முக்கியமான பாத்திரங்கள் செய்து காட்டி சாதனை படைத்ததைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம்? வேதத்தின் வெளிப்படுத்திய விசேஷத்திற்கு பிற்பாடு வாழ்ந்த பரிசுத்தவான்களின் சாதனைகள் இன்னும் அதிகமான ஆச்சரியத்தை ஏற்படுத்தும் விதத்தில் இருந்திருக்கும்.

## முட்கள் ?:

... எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. 2 கொரி.12:7

இக்காலத்திலும் பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளைப் போன்ற மேன்மையான காரியங்கள் அவருடைய பிள்ளைகள் எல்லோருக்கும் வெளிப்படுகிறது. அவை சிலுவையின் பின்னணியத்திலுள்ள இரகசியங்கள்தான். அந்த இரகசியங்களைத்தான் பார்த்து வருகிறோம்.

நாம் தேவனுடைய ஜனங்களல்ல, பிள்ளைகள். யோ. 1:12
இயேசுவின் சிநேகிதர்கள் நாம். யோ. 15:15
நாம் இயேசுவுக்குள் இருக்கிறோம். எபே. 1:1
பரிசுத்தாவியானவருடைய ஆலயமாயிருக்கிறோம். 1 கொரி. 6:19
புதுசிருஷ்டியாயிருக்கிறோம். 2 கொரி. 5:17
நாம் பரிசுத்தாவியானவராலே நடத்தப்படுகிறோம். ரோ.8:1,2
நமக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது. ரோ.8:28
நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. பி–. 3:20
நாம் பாவம் செய்யாதபடி பாதுகாக்கப்படுகிறோம்(!) 1 யோ. 5:18
நாம் உலகத்திற்கு உப்பாயிருக்கிறோம், வெளிச்சமாயிருக்கிறோம். மத். 5:13,14
இயேசு நம்மைத் தெரிந்துக்கொண்டார், ஏற்படுத்தினார். யோ. 15:16
நாம் இயேசுவின் சாட்சிகள். அப். 1:8
நாம் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள். 2 கொரி. 5:20
இயேசுவின் உடன் வேலையாட்கள். 2 கொரி. 6:1

இப்படிப்பட்ட பல மேன்மையான காரியங்கள் கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக நமக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பழைய ஏற்பாட்டின் மக்களுக்கு இவைகள் கிடையாது. அதனால் அவர்களைப் போலவே நமக்கும் இந்த காரியங்களெல்லாம் கிடையாது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். நம்மை நாமே குப்பை, சாம்பல், புழு, கழுதை என்று வர்ணித்து கெட்டு அழிந்து கொண்டிருந்தோம்.



மிகவும் உயரத்தில் இருக்கும் பொருள்களின் அளவை எப்போதும் குறைவாகவே மதிப்பிடுகிறோம். கோபுரக்கடிகாரத்தின் அளவை மதிப்பிடுவதில் சொல்லலாம். கோபுரத்தில் உள்ள கடிகாரத்தை கீழே இறக்கிக்கொண்டு வந்தால் அது எவ்வளவு பெரிதாயிருக்கிறது என்பதை படத்தில் பார்க்கலாம். ஆட்கள் அதனருகில் குட்டிகுறளர் போல் காட்சியளிக்கின்றனர். தொலைவில் காட்டப்பட்டுள்ள கடிகாரக் கோபுரத்தின் துவாரத்தில்

அது பொருந்துகிறது! – நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் போங்கள்!

பரிசுத்தாவியானவர் நம் பார்வைக்கோளாறைச் சரி செய்தார். நமக்குரிய ஆசீர்வாதங்கள் எவ்வளவு பிரமாண்டமானது என்பதைக் காண்பித்தார். நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததால் தேவன் நம் அறியாமையின் இருளுக்குள் ஒரு ஒளியை ஊடுருவச் செய்தார். வெளிச்சம் பரவியபோது, நமக்கென்று வைக்கப்பட்டிருந்த காரியங்கள் புரிந்தது. வெளிப்பாடு நமக்கு கிடைத்துவிட்டதால், அதைப் பயன்படுத்தி, ஆசீர்வாதங்களைப் பெற முயற்சி எடுப்போம் என்பது சத்துருவுக்குத் தெரியும் என்பதால் அவன் தன்னுடைய தூதர்களை அனுப்பி நம்மைக் குத்தச் செய்கிறான்! வியாதி, வறுமை, சஞ்சலம், தவிப்பு, நிராசை, ஏமாற்றம், ஏக்கம், எதிர்பார்ப்பு ... என்று நம்மை ஒரு வழி பண்ணுகிறான். பைத்தியம் பிடிக்கும் நிலமைக்குத் தள்ளப்படும் தேவ பிள்ளைகள், நமக்கு ஆசீர்வாதமும் வேண்டாம், எதுவும் வேண்டாம், பரலோகம் போனால் சரி என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள்.

பக்கத்தில் கண்ட படத்தில் வெள்ளைப் பட்டைகள் சந்திக்குமிடங்களில் சிறிய மங்கலான சாம்பல் நிற சதுரங்கள் தோன்றித் தோன்றி மறைவதைப்போல் தோன்றுகிறது. இப்படத்திற்கான அச்சுப் பதிவுத்தகட்டை பார்வையிட்ட ஒருவர், அது நன்றாகச் செய்யப்படவில்லை என்று நினைத்து, வெள்ளைக்கோடுகள் சந்திக்குமிடங்களில் காணப்படும் சாம்பல் நிறப் பகுதிகளை நீக்கும்படி சொல்லி பிளாக்கைத் திருப்பி அனுப்பிவிட்டார்! அச்சகத் தொழிலாளர் இப்படத்தின் விவரத்தை விளக்கிய பிறகுதான் அவருக்கு அதன் ரகசியம் விளங்கியது. உண்மையில் பட்டைகள் முழுவதுமே வெள்ளையாகத்தான் இருக்கிறது. கறுப்பு சதுரங்களை மறைத்துவிட்டு பார்த்தால் இது தெளிவாக விளங்கும். ஓவியர்கள் இந்த ஒளியியல் மாயத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டே தங்களுடைய தொழிலை வெற்றியாக செய்து வருகிறார்கள். இது அவர்களுடைய வெற்றியின் இரகசியம். நம் கண்களில் இயற்கையாக அமைந்திருக்கும் இக்குறைபாட்டை அவர்கள் வசதியாக எடுத்துக் கொள்கிறார்கள். சாத்தானும் அப்படியே ... வசனத்தைப் பார்க்கமுடியாமல் நம் பிரச்சனைகளைப் பார்க்கவைத்து, நம் விசுவாசத்தை கெடுக்கிறான்.



தேவ பிள்ளைகளின் இந்த இயலாமை, அறியாமைதான் சாத்தானுக்கு வசதியாகப் போய்விடுகிறது. தாங்க முடியாமல் நாம் தேவனிடம் இந்த காரியங்களெல்லாம் நம்மைவிட்டு அகலும்படி ஜெபிக்கிறோம். தேவன் ஜெபத்தைக் கேட்டு கிருபையாய் இரங்கி நமக்கு உதவி செய்தாலும், இதற்கு ஜெபம் தீர்வல்ல. அப்படியானால் என்ன செய்ய வேண்டும்?

நாம் கிறிஸ்துவுக்குள் யார் என்பதை அறிந்து, நமக்கு என்னவெல்லாம் இருக்கிறதோ அதையெல்லாம் எடுத்துக்கொண்டு நம்மைக் குத்திக்கொண்டிருக்கும் அந்த சாத்தானின் தூதனைக் குத்த வேண்டும். இதைச் செய்யப் போதுமான கிருபை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் என் கிருபை உனக்குப் போதும் என்றார் தேவன். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதால், இயேசுவுக்கு உள்ளதெல்லாவற்றிலும் நமக்கு சுதந்திரவீதம் உண்டு. அதிகாரமும் அதில் ஒன்று, அந்த அதிகாரத்தோடு சாத்தானிடம் போனால் முள் விலகும். முள்ளுடனேயே இருக்க வேண்டிய அவசியமில்லை. முள்ளை அகற்றாவிட்டால் சீழ் பிடித்து, செப்டிக் ஆகி, ஆப்பரேஷன் **(operation)** செய்யும் நிலைமைக்கு நம்மைத் தள்ளிவிட்டுவிடும்.

நாம் தேவனிடமிருந்து ஏதாவதொன்றைப் பெற்றுக் கொள்ளும்போதெல்லாம் சாத்தான் நம்மைத் தேடி வருவதை நாம் இயல்பாகவே கவனித்திருப்போம். அதிகம் சந்தோஷப்பட்டுவிட்டால், உடனே ஏதாவது துக்கமான செய்தி வந்து விடுமோ என்று பயப்படுகிற இயல்பு இயற்கையாகவே மனிதர்களிடம் உண்டு. அது உண்மைதான் என்றாலும், சாத்தானை விரட்டும் அதிகாரம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், அவனை விட்டுவைக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி அந்த அதிகாரத்தை பிரயோகித்து அவனைத் துரத்தும் போது நம் பலவீனத்தில் அவருடைய பலம் விளங்குகிறது. அதாவது நம்முடைய சாபம் நீங்கி அவருடைய ஆசீர்வாதம் இறங்குகிறது. அவருடைய ஆசீர்வாதம்தான் நமக்கு பலம்!

உதாரணமாக நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்ற சத்தியம் நமக்குத் தெரிந்து விட்டால், பிறகு சாத்தானால் நம்மைத் தொட முடியாது!

நாம் பரிசுத்தாவியானவரின் ஆலயமாயிருக்கிறோம் என்ற சத்தியம் நமக்குத் தெரிந்து விட்டால், பிறகு சாத்தானால் நம் எல்லைகளுக்குள் நுழைய முடியாது!

நமக்குச் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்ற சத்தியம் நமக்குத் தெரிந்து விட்டால், சாத்தானால் நமக்குத் தீமை செய்ய முடியாதே! ஏன்? அப்படி அவன் தீமைசெய்தாலும் அது நன்மைக்கேதுவாக மாறிவிடுகிறதே!

நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது என்ற சத்தியத்தை நாம் அறிந்து கொண்டால் போச்சி, சாத்தானின் கதை முடிந்ததே! பரலோகத்துக்குள் பாவம், வியாதி, வறுமையுடன் அவன் வர முடியாதே!

நாம் பாவம் செய்யாதபடி பாதுகாக்கப்படுகிறோம் என்ற உண்மை நமக்குத் தெரிந்து விட்டால் சாத்தான் தலையை பிய்த்துக்கொள்ள வேண்டியதாயிருக்கும். பிறகு அவனுக்கு வேலையே இருக்காதே!

இப்போது புரிந்திருக்கும், இதனால்தான் நமக்கு வெளிப்பாடுகள் கிடைக்காதபடி அவன் தடுக்கப்பார்க்கிறான். அப்படியே கிடைத்தாலும், அதை விசுவாசித்து நம்மை நாம் உயர்த்திக் கொள்ளாதபடி தடுக்கப்பார்க்கிறான். அப்படியே நாம் நம்மை உயர்த்திக்கொண்டால், அவன் அதை கெடுக்கப்பார்க்கிறான். போராட்டம் நீடிக்கிறது, சாத்தானின் தலை கல்வாரியில் நசுக்கப்பட்டாயிற்று. கூடவே அவன் மூளையும் நசுக்கப்பட்டாயிற்று. அரைகுறை உயிரோடு போராடிக்கொண்டிருக்கும் ஒரு சாகப்போகிற பாம்பைதான் நாம் அடிக்கப்போகிறோம். இந்த சத்தியத்தை நாம் விசுவாசித்தால் போதும், அவன் போராட்டத்தைத் தடுத்து நிறுத்திவிடலாம்.

## கிறிஸ்மஸ் / Christmas:

கிறிஸ்மஸ் கொண்டாடலாமா? பாரம்பரியமான இவ்வகைக் கொண்டாட்டங்கள் தேவையில்லை என்பதை சபையில் ஒரு உபதேசமாகவே மாற்றி விட்டார்கள். ஆனால் வேதம் என்ன சொல்லுகிறது என்றால்,

நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான்; நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளாதிருக்கிறான். ... ரோ. 14:6

## இரண்டுமே தேவன் பார்வையில் ஒன்றுதான்.

கிறிஸ்மசை ஒரு பாரம்பரிய கொண்டாட்ட விழாவாக ஒரு கூட்டத்தார் தவறாக நினைத்து, அதை வெறுத்து ஒதுக்கித் தள்ளியதற்கும் ஒரு நியாயமான காரணம் இருக்கத்தான் செய்கிறது. தேவன் இயேசு இந்த உலகத்திற்கு வந்த நோக்கம் அறியப்படாமல், இன்னும் கி.மு. விலேயே (கிறிஸ்துவுக்கு முன்) வாழ்ந்து கொண்டிருக்கும் தேவ பிள்ளைகளால்தான் இந்த பிரச்சனை சபைக்குள் வந்தது. இயேசுவின் பிறந்த தேதி வேதத்தில் குறிப்பிடப்படவில்லைதான், ஆனால் நம்முடைய முற்பிதாக்களால் சுமக்க முடியாமல் போன கடினமான நுகத்தை மாற்றி, நமக்கு ஒரு புதிய பிரமாணத்தை ஏற்படுத்தி, நம்மை பிதாவின் பிள்ளைகளாக்கி, நம் பரலோக பயணத்தை இலகுவாக்கிய இயேசுவின் பிறந்த நாள் தெரியாவிட்டாலும், ஒரு நாளை குறிப்பிட்டு அந்த நாளில் இந்த நற்செய்தியை அறிவிப்பதை எப்படித் தவறு என்று சொல்ல முடியும்?

ஆனால் சொல்ல வேண்டிய சத்தியத்தைச் சொல்லாமல், இயேசு மாட்டுக்கொட்டகையில் பிறந்ததால், தரித்திரம்தான் தேவ சித்தம் என்று கதையையே மாற்றியதுதான் பிரச்சனையின் ஆரம்பமாகிப்போனது. இயேசு சிலுவையின் மூலமாக நமக்கு ஆனந்த பாக்கியத்தைக் கொடுத்திருக்க, அவருடைய காயங்கள், தழும்புகள், இரத்தம், ஆணி, முள்முடி, போன்றவற்றைச் சுற்றி ஒரு சோக நதியை ஓடவிட்டுவிட்டார்கள். ஆக தேவன் இயேசுவை உலகத்திற்கு அனுப்பிய நோக்கம் காலப்போக்கில் சபை மக்களால் தவறாகப் புரிந்துக் கொள்ளப்பட்டு, சுவிசேஷத்தின்

மேல் கறும்புள்ளிகளை போட்டது.

இந்தத் தவறு முதல் முதலில் எங்கே? யாரால்? ஆரம்பிக்கப்பட்டது என்று ஆராய்ச்சி செய்வதால் இப்போது எந்த பிரயோஜனமும் இல்லை, கிறிஸ்மஸ், ஈஸ்டரின் பின்னணியத்தில் மறைந்திருக்கும் சரியான சத்தியத்தைத் திரைமறைவில் இருந்து வெளியே கொண்டுவந்தால், அது பிரயோஜனமாயிருக்கும்.

**கிறிஸ்மஸ்:** பிதாவாகிய தேவன் நம்மை நோக்கி வரவும், நாம் தேவனை நோக்கி செல்லவும் இயேசு வாசலாக மாறிய வரலாறு காணாத முதல் நிகழ்ச்சி.

**சாம்பல் புதன், பெரிய வியாழன், பெரிய வெள்ளி:** ஆதாமினால் உலகத்திற்கு ஏற்பட்ட சோகக்கதையை மாற்றுவதற்காகத் தன்னுடைய கதையையே மாற்றிக்கொண்ட தேவகுமாரன்!

**ஈஸ்டர்:** பாதாளத்தையும், நரகத்தையும் கேள்விக்குறியாக்கி விட்டு, சாவிக்கொத்தை நம் கையில் தந்த நேசர் இயேசு! கொண்டாட்டங்கள் தவறில்லையென்பது தெளிவு, அர்த்தம் விளங்காமல் கொண்டாடினால் பின்விளைவுகள் தவறாகத்தான் இருக்கும் என்பதும் தெளிவு!

காரண காரியம் புரியாமல் வீடுகளின் முன்னதாக தொங்க விடப்பட்டிருக்கும் நட்சத்திரங்களைப் பார்க்கும் போது, “ஆண்டவரே இவர்களுக்கு பிரகாசமான மனக்கண்களைத் தாரும்” என்ற ஜெபித்துக் கடந்து செல்வோம், தேவனுடைய நோக்கம் ஒருநாள் நிச்சயம் நிறைவேறும்! வேதத்தில் ஆலோசனையாகக் கொடுக்கப்படும் காரியங்களைக் கட்டளையாக மாற்றும் போதுதான் பிரச்சனை உருவாகிறது, விக்கிரக வல்லமைகள் அவற்றை ஆக்கிரமிக்க ஆரம்பிக்கின்றன.

நாம் ஒருமித்து, இன்பமான ஆலோசனைபண்ணி, கூட்டத்தோடே தேவாலயத்துக்குப் போனோம். சங். 55:14

நாட்களை விசேஷித்துக் கொள்ளுதல், அதிகாலையில் ஜெபம், உபவாசம், ஓய்வுநாள் ஆசரிப்பு, சைவ உணவு, தசமபாகம் செலுத்துதல், பொருத்தனைகள், போன்றவற்றை ஆலோசனையாக கொடுக்கலாம். ஆனால் புதிய உடன்படிக்கையின்படி இவற்றைக் கட்டளையாக மாற்றி கட்டாயப்படுத்தக்கூடாது. நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சுயாதீனத்தின்படி முடிவெடுத்து, இயன்றதைச் செய்தால் போதும். அளவுக்கு மீறி, திராணிக்கு மீறி செய்துவிட்டு மாட்டிக்கொள்வது தேவையில்லாதது, அவசியமில்லாதது. காரணம் நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு; அப்பா பிள்ளை உறவு, **formalities** தேவையில்லை.

## பிரசங்கியின் அங்கலாய்ப்பு:

சூரியனுக்குக் கீழே, பூமியின் மேலே நடக்கும் காரியங்களை பார்த்து சாலமோன் ஞானி புலம்புகிறார். உலகம் முழுவதிலும் நடக்கும் எல்லாக்காரியங்களையும் உற்றுப் பார்த்து, மனுமக்கள் படும் உபத்திரவங்களைக் கண்டு, அதைக்குறித்து எழுதும் காரியங்களில் அவருடைய ஞானம் வெளிப்படுகிறது. அதற்காகச் சாலமோன் ஞானியின் கண்ணோட்டத்தில் நாமும் உலகத்தைப் பார்த்தோமானால் அது ஞானமல்ல. சாலமோன் ராஜாவின் காலங்களில் சாத்தானின் தலை நசுக்கப்படவில்லை, அதனால் அவன் ஜெயிக்கிறவனாக உலாவிக் கொண்டிருந்தான். உலகத்தின் சாபத்தை மாற்ற இயேசு வெளிப்படவில்லை, அதனால் உலகம் சாபத்திற்குள் இருந்தது. பரிசுத்தாவியானவர் அருளப்படாததால் வெளிப்பாடுகளும் கிடைக்காமல் இருந்தது, தேவ ஜனங்கள் ஆவியானவரால் நடத்தப்படாமல் தங்களைத் தாங்களே நடத்திக்கொண்டிருந்தார்கள்!

புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களாகிய நம்மில் சாலமோனைவிடப் பெரியவர் (இயேசு) வாசம் செய்கிறார். அதனால் உலகத்தின் மீதான நம் கண்ணோட்டம் சாலமோனைவிடக் கண்டிப்பாக **Best** ஆனதாக இருக்கவேண்டும்.

## இடுக்கமான வாசல்:

பரலோகத்திற்கு செல்லும் வழி மிகக் குறுகலானது. வறுமை, வியாதி, துன்பம், துயரம் சுமந்துதான் அங்கே செல்ல வேண்டும் என்ற உபதேசத்தை எல்லோரையும் போலவே நானும் நம்பி, சோகக் கவிதை எழுதுவதற்காக ஒரு டைரி வாங்கினேன்!

இல்லையில்லை, இயேசுவின் சிலுவை மூலமாக நம் இலையுதிர்க்காலம் மாறியது, வசந்தகாலம் ஆரம்பித்தது என்ற உண்மை தெரிந்ததும் டைரியை தூக்கியெறிந்தேன். உலக பாரம்பரியங்கள், தவறான சத்தியங்கள் நம்மை "தேவ பிள்ளைகளுக்கு துன்பம் துயரம்தான்" என்பது போன்ற வார்த்தைகளால் நம்மை அழுத்தி வைத்திருந்தன. சத்தியத்தை அறிந்து கொண்ட நாமோ, அந்த அழுத்தத்தில் இருந்து, மிகுந்த பிரயாசத்துடன் நம்மை விடுவித்துக் கொண்டு பரலோகத்தை அடைய முயற்சிக்கிறோம். உண்மையில் பரலோகப் பாதைதான் விசாலமானது! வசனத்தை கவனியுங்கள்,

யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள். மத். 11:12

பாரம்பரியம் பேசிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவனே, திமிறிக்கொண்டு வெளியேறு! பூட்டப்படாத பரலோகம் உனக்காக...

## பயம் வேண்டாம், திகில் வேண்டாம்:

வஞ்சிக்கிற ஆவியினால் பலமுறை வழிநடத்தப்பட்டவள் நான். அவைகளிடமிருந்து தப்பிக்க பரிசுத்த ஆவியானவர் உதவி செய்து வருகிறார். ஆவிகள் நம்மை வஞ்சித்து தவறான பாதையில் நடத்திவிடுமோ என்ற பயம் பெரும்பான்மையினருக்கு இருக்கிறது. இந்தப் பிரச்சனையில் நாம் ஏன் மாட்டிக்கொள்ளுகிறோம்?

தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். ரோமர். 1:28

தேவனை அறிந்து கொள்ள (சத்தியத்தை) மனதில்லாவிட்டால், சத்தியத்திற்குப் புறம்பான ஏதாவது ஒரு காரியத்தை அறிய மனது உண்டாகும், இது தானாகவே நடக்கிறது, வஞ்சம் அதில் ஒன்றாகும்!

நாம் மாட்டிக்கொண்ட சாத்தானின் வஞ்சக வலையில் நம் பின் சந்ததி மாட்டிக்கொள்ளாதபடி அவர்களுக்கு சத்தியம் எது என்று எழுதி வைப்போம், அல்லது சொல்லுவோம்!

"நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். எபே. 4:14,15"

வஞ்சகத்தில் மாட்டிக்கொள்ளாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

"பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். எபே.4:12, 13"

ஒற்றுமை அவசியம், உபதேச வேறுபாடுகளால் சபைகளின் நடுவாக ஏற்படும் பிரிவினைகள், சண்டைகள், மாற வேண்டும்.

தேவ பிள்ளைகள் எல்லோருமே சுவிசேஷ வேலை செய்ய வேண்டும்,

சபை பக்தி விருத்தியடைய வேண்டும்.

இந்த மூன்றுக் காரியங்களையும் நிறைவேற்ற தேவன், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள்,

சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் என்று 5 விதமான ஊழியக்காரர்களை ஏற்படுத்தியிருக்கிறார். இவர்கள் சபையைச் சரியானபடி போதித்து, உபதேசித்து, ஆலோசனைக் கொடுத்து, சத்தியத்தை அறிவித்து, வெளிச்சத்தில் நடத்தினால் அந்த 3 நோக்கங்களும் நிறைவேறும், முடிவில் வஞ்சிக்கிற ஆவி தோற்கடிக்கப்படும். ஆவியானவரால் வழி நடத்தப்படுவோமானால், வஞ்சிக்கிற ஆவிக்கு வேலை இருக்காது.

பிள்ளைக்கு அப்பாவை விட்டால் வேறே கதியில்லை; அப்படிப்போலவே அப்பாவுக்கும் பிள்ளையை விட்டால் வேறே கதியில்லை! இது உலக வழக்கில் நாம் காணும் உண்மை. பிள்ளைகள் தங்களுடைய எல்லாத் தேவைகளுக்கும் தங்களுடைய தகப்பனையோ, தாயையோ சார்ந்திருக்கிறார்கள். அது போலவே அப்பாவும் தன்னுடைய பிள்ளைகள் நன்றாக இருக்கவேண்டும் என்பதையேக் குறிக்கோளாகக் கொண்டு உழைக்கிறார்கள், சம்பாதிக்கிறார்கள்.

உலகக் காரியமே இப்படி இருக்குமென்றால்... நம் ஆவிக்குரிய அப்பா எவ்வளவாக இருப்பார்? இந்தப் பாசப் பிணைப்பு எவ்வளவு அதிகமானதாக இருக்க வேண்டும்? நினைத்துப் பார்த்தால் ஜீரணிக்க முடியாத உண்மையிது!

நாம் எத்தனைதான் தவறுகள் செய்தாலும், நம்மைப் பகைக்காமல், கண்டித்து, தொடர்ந்து அன்பு செலுத்தி, நம்மைத் திருத்த முயற்சித்து, நம் பாவங்களை மறைக்கப் பார்த்து, நம்மை கேவலப்படுத்தாமல், அதே நேரத்தில் மனதுக்குள் நொந்து அழும் உலகத்தின் தகப்பன்மார்கள்! அப்படியிருக்க நம் பிதாவாகிய தேவனின் இருதயம் எப்படி இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

“எப்பிராயீமே, நான் உன்னை எப்படி கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மாவைப்போலாக்குவேன்? உன்னை எப்படிச் செபோயீமைப்போல வைப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது. ஓசி.11:8”

இந்த பிரமாண்டமான அன்புதான் தன்னுடைய குமாரனை நமக்காகக் கொடுக்கும்படி அவரைத் தூண்டியது. நாம் கைவிடப்பட்டு, பாதாள இருளுக்குள் தள்ளப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இந்த நம்ப முடியாத காரியத்தை அவரைச் செய்யும்படி வைத்தது. சிலுவையின் பின்னணிய சத்தியங்கள் வெளிப்பட்டபோது; மயக்கம் போட்டு விழும்படியானது, பிரமிப்பு அடங்கவில்லை.

“அதின் தூண்களை வெள்ளியினாலும், அதின் தட்டைப் பொன்னினாலும், அதின் ஆசனத்தை இரத்தாம்பரத்தினாலும் பண்ணுவித்தார்; அதின் உட்புறத்திலே எருசலேமின் குமாரத்திகளினிமித்தம் நேசம் என்னும் சமுக்காளம் விரித்திருந்தது. உன். 3:10”

உலகம் உருவானபோது உலகத்தின் கண்டங்கள் ஒன்றாக இணைந்திருந்தன. நோவா வெள்ளத்தின்போது அவை பிரிக்கப்பட்டன. மக்கள் பெருகத் தொடங்கினர். நெடுநாட்களாக ஆப்பிரிக்கா கண்டுபிடிக்கப்படாமலேயே இருந்தது. அதனால் அதை இருண்ட கண்டம் என்று சொன்னார்கள். கொலம்பஸின் விடாமுயற்சியால் அதன் இருப்பிடம் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு கண்டத்தைக் கண்டுபிடிக்கவில்லை. ஏற்கெனவே இருந்த, ஆனால் தெரியாமல் மறைவாக இருந்த ஒரு கண்டத்தின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து உலகத்திற்கு அறிவித்தார், அவ்வளவுதான்.

சிலுவையைப் பற்றிய உபதேசங்கள் புதிதானதல்ல, அவை உலகத் தோற்றத்திற்கு முற்பட்டது. இயேசு சிலுவையில் நமக்காக என்னென்னவெல்லாம் செய்திருக்கிறார் என்பது புதிதானதல்ல. அவை 2008 வருஷங்களுக்கு முற்பட்டது, அவை அங்கேயேதான் இருக்கிறது. 2000 வருஷங்கள் ஓடிக்கொண்டே இருந்தபோதிலும், இன்னும் சரிவர இந்தக் காரியங்களை அறியாத திரள்கூட்ட ஜனங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஒரு சிறுகூட்டத்தார் இதை அறிந்து அதை அறிவிக்கிறார்கள். ஏற்றுக் கொள்ளுகிறவர்களும் உண்டு, எதிர்ப்போரும் உண்டு. ஏற்றுக்கொள்ளவில்லையென்பதற்காக ஆப்பிரிக்கா கண்டம் இல்லாமல் போனதா? அங்கே மக்கள் குடியேறாமல் போனார்களா? இல்லையே! பிடிவாதத்தினாலும், பழைய ரசத்தைக்குறித்ததான வைராக்கியத்தினாலும், புதிய துருத்தியைத் தொட யோசிப்பார்களானால் யாருக்கு நஷ்டம் என்பதை அவர்களே யோசித்து முடிவெடுக்கட்டும்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி

நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது. அப்.13:39

## விசுவாசிக்கிறவன் விதைப்பான்:

இயேசுவின் சிலுவைப் பாடுகள் மூலமாக நமக்கு அருளப்பட்டிருக்கும் அனைத்து ஆசீர்வாதங்களும் இலவசமானவைகளே. நம்முடைய கிரியைகளின் அடிப்படையில் தேவன் அவற்றை நமக்குத் தரவில்லை. அப்படித் தரப்பட்டிருந்தால் ஒருத்தர் கூட அந்த ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டிருந்திருக்க முடியாது. அதனால் இயேசு கிறிஸ்து தன்னுடைய தகுதியின் அடிப்படையில் அவற்றைப் பிதாவிடமிருந்து நமக்கு வரப்பண்ணியிருக்கிறார்! (வெளி. 5:4,5)

தேவனைப் பற்றும் விசுவாசத்தினால் அந்த ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்கும்படி காரியம் இயேசுவால் எளிதாக்கப்பட்டது சிலுவையில். விசுவாசித்துப் பெற்றுக் கொள்கிறோம், சரி. ஆனால் நாம் விசுவாசிக்கிறோம் என்பதை எதை வைத்து அறிந்து கொள்வது? கிரியையின் மூலமாகத்தான், இதைத்தான் "விசுவாசக்கிரியை" என்று பவுல் சொல்லுகிறார்.

... ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?

தேவன் வாக்குப் பண்ணியிருக்கும் ஆசீர்வாதங்களை விசுவாசித்தும், அந்த விசுவாசத்தை தன்னுடைய கிரியைகளினால் நிரூபிக்கவில்லையானால் அவன் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களைப் பாதுகாக்க முடியாது.

ஆசீர்வாதத்தை விசுவாசித்தும் ஒருவன் விதைக்காமல் இருப்பானானால் அவனால் ஐசுவரியத்தைத் தக்க வைக்கவும் முடியாது, தொடர்ச்சியான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியாது. கீழ்ப்படியாத பிள்ளையை தேவன் நேசித்தாலும், அவர் மனம் அவனுடைய கீழ்ப்படியாமையை நினைத்து வேதனைப் படுமல்லவா?

வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? யாக். 2:20

செத்துப் போனவனால் எதையும் செய்ய முடியாது, அசையாமல் கிடப்பதைத் தவிர! அதைப்போலத்தான் கிரியையில்லாத விசுவாசமும்! நம் தேவன் நல்லவர், நமக்கு எல்லா ஆசீர்வாதங்களையும் இலவசமாகத் தருகிறார் என்பதற்காக, செத்த விசுவாசத்துடன் போய், வாக்குத்தத்த வாசல்களின் வாசலில் கல்லைப் புரட்டி வைக்க வேண்டாம்.

விசுவாசம் ... கிரியைகளோடே கூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்றுக் காண்கிறாயே. யாக். 2:22

விசுவாசம் தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தை வாங்கித்தர அதன் கிரியைகளோடு கைகோர்த்துக் கொள்கிறது. சேர்ந்து முயற்சிக்கும்போது ஆசீர்வாதம் கீழிறங்குகிறது. விசுவாசம் கிரியையோடு சேரும்போதுதான் ஆசீர்வாதத்தை பெறும் பூரணத்துவத்தை (**qualification** – தகுதி) அடைகிறது.

சரியான விசுவாசம் கண்டிப்பாக கிரியை செய்யும். ஒருவன் தேவனின் வாக்குத்தத்தங்களை விசுவாசிக்காமல், விதைப்பானானால் அது வாக்குத்தத்த ஆசீர்வாதத்தை பெற்றுத் தராது. உலகத்தார் பெறுவதைப் போன்ற ஆசீர்வாதத்தைத் தான் தரும் – அது புல்லின் பூவைப்போல ஒழிந்தும் போகும்.

மொத்தத்தில் – தேவனை விசுவாசிப்பவன் ஆசீர்வதிக்கப்படுவான் – விதைத்து கிரியை மூலமாக விசுவாசத்தை பூரணப்படுத்திக் கொள்வான் – பூரணப்படுத்தப்பட்ட விசுவாசத்துடன் மீண்டும் விதைப்பான் – விளைச்சல் முன்னை விட அதிகமாயிருக்கும், அவன் விசுவாசமும் அதிகரிக்கும் – மீண்டும் அதிகரிக்கப்பட்ட விசுவாசத்துடன் விதைப்பான், இந்த முறை அவன் விதைப்பின் அளவு அதிகமானதாயிருக்கும் – ஆசீர்வாதத்தின் அளவீடும் வரவர அதிகரித்துக் கொண்டே இருக்கும் – இவ்விதமாக விசுவாசமும் கிரியையும், விதைப்பும் அறுப்பும் சக்கரவட்டமாக

(Cycling) ஆக கிரியை நடப்பித்துக்கொண்டே இருக்கும்.

## நல்லதொரு நிலம் பார்த்து விதைக்கணும்...

அதெல்லாம் சரிதாங்க, அப்படித்தாங்க விதைத்தோம், விசுவாசித்து மனப்பூர்வமாகத்தாங்க காணிக்கை கொடுத்தோம், எதிர்பார்த்த அளவிற்கு ஆசீர்வாதம் வரலியே! என்று புலம்புகிறவர்களுக்கு (அவர்களின் கூட்டத்தில் நாங்களும் உண்டு!) "நல்லதொரு நிலம் பார்த்து நாளும் விதை விதைக்கணும்" என்ற பழங்கால பாடல் வரி ஒன்று உண்டு.

நாம் ஆசீர்வாதமாக இருப்பது தேவ சித்தம், அந்த ஆசீர்வாதம் இயேசுவால் இலவசமாக வந்தது, விசுவாசத்தால் அதைப் பெறலாம், கிரியையால் அந்த விசுவாசத்தை பூரணப்படுத்தலாம் ... இது போன்ற நற்காரியங்களை, சத்தியத்தைச் சுவிசேஷமாக பிரசங்கிக்காத சபை எப்படி நல்ல நிலமாக இருக்க முடியும்? அது கெட்ட நிலம் என்று இங்கே சொல்ல வரவில்லை, விதையை விளையச் செய்யும் ஆற்றல் அதற்கு இருக்கிறதா என்பதுதான் கேள்வி?

திருநெல்வேலி – தோப்பூர் குக்கிராமத்தில் – ஒரு நெல் வயலில் விதை விதைக்கப்பட்டது. ஆண்டாண்டு காலமாக வியர்வை சிந்த, நாக்கு தள்ள பிரயாசப்பட்டும் போதிய விளைச்சல் இல்லாமல், முதலுக்கே மோசம் வந்தது, வறுமை தாண்டவமாடியது. சாபம்... யாரோ பில்லிசூனியம் வைத்துவிட்டார்கள், என்றுச் சொல்லி ஊழியக்காரரை கூட்டி வர ஓடினார்கள். ஊழியக்காரர் வந்தார், பார்த்தார், அங்கே பில்லியும் இல்லை, பல்லியும் இல்லை, நிலம் சரியில்லை, கரிசல்காடு, வேறு நல்ல நிலமாக வாங்கி பயிரிடுங்கள் என்று ஆலோசனை சொல்லி ஜெபித்துப் போனார்! வயலை விற்றுவிட்டு, வேறே செம்மண் நிலம் வாங்கி பயிரிட்டார்கள், அமோக விளைச்சல், முதலுடன் கடைசியும் திரும்பக்கிடைத்தது!

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு குட்டிப்பிசாசு மூசுமூசென்று அழுதது! பக்கத்திலிருந்த இன்னொரு குட்டிப்பிசாசு ஏண்டா அழுறே? என்றது. அதற்கு அது சொன்னது: "இந்த மனுஷங்களைப் பாருடா, அவங்களுக்கு சத்தியம் தெரியலை, எதையாவது செய்து விட்டு, கடைசியில் நம்ம பேரிலே பழியை போடுறாங்க, நாம பிசாசுகள், கெடுதல் செய்கிறவர்கள் என்பது உண்மைதான், அதுக்காக நாம செய்யாததையும், நாம்தான் செய்தோம் என்று சொல்லி அவங்க தப்பையும் நம்ம தலைமேலேயே போடறாங்களே, அதைத்தான் சொல்கிறேன்" என்றதாம்!

இது வேடிக்கைக் கதையாக இருந்தாலும், இதில் சிந்திக்க வேண்டிய விஷயம் இருக்கிறது, இல்லையா? சத்தியத்தை அறிந்து கொள்ளுவோம், யாரும், எதுவும் நம்மை வஞ்சிக்க முடியாது. ஒரு சபையில் சத்தியம் மறைக்கப்படுகிறதென்றால், அது வசனத்தின்படி நல்ல நிலமாக இருக்க முடியாது. சரியில்லாத நிலத்திற்கு விதைகளை விளைய வைக்கும் ஆற்றலும் இருப்பதில்லை. அறியாமையினால் இவ்விதமாக கானலுக்கு நீரிறைத்த விசுவாசிகளின் எண்ணிக்கை கணக்கிலடங்காதது. சத்தியம் தெரியாதவர்களுக்கு விதைப்பைப் பற்றியும் எதுவும் தெரியாது. விவசாயம் தெரியாத விவசாயியின் கதைதான். ஏதோ தன்னால் இயன்றதைச் செய்கிறான், ஏதோ கொஞ்சம் விளைகிறது. அவ்வளவுதான்.

## சிலுவையைப் பற்றிய உபதேசம்:

பிரசங்கியார்களைப் பார்த்து பைத்தியம் என்று மனசுக்குள் சிரித்துக்கொண்டவர்கள் கெட்டுப்போனார்கள். சிலுவையின் சத்தியத்தை உபதேசிப்பவர்களைப் பைத்தியமாக நினைக்காமல், ஏதோ இதில் விஷயம் இருக்கிறது என்று உற்றுக் கவனிக்கத் தொடங்கினோம் ... நாம் கெட்டுப் போகவில்லை, அல்லேலூயா!

சிலுவை உபதேசம் பரலோகத்தையே இப்பூவுலகத்திற்குள் இறக்கும் ஆற்றல் பெற்றது. பரலோகத்தில் என்னவெல்லாம் உண்டோ, அவற்றின் நிழல் இந்த பூமியில் விழுகிறது.

இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; ... எபி. 8:5. நிஜமிருந்தால் நிழலுண்டு. சூரிய ஒளி மரத்தால் தடுத்து நிறுத்தப்படும்போது; எதிர் பக்கத்தில் அதன் நிழல்! தேவனின் மகிமைப் பிரகாசத்தின் வெளிச்சம்

பரலோக காரியங்களின் மீது பட்டு, பூமிக்குரியவைகளின் மீது நிழலாக விழுகிறது, அல்லேலூயா! அந்த மரங்களின் நிழலினூடே நாம் ந(க)டந்து போய்க்கொண்டிருக்கிறோம்.

## சிலுவையில் அறையப்பட்ட இயேசு:

தேவ பிள்ளைகள் இன்னமும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறார்கள், சோகத்தோடே அழுது கொண்டிருக்கிறார்கள். அதை நினைவு கூற சிலுவையையும், அதில் இயேசுவை அறைந்திருப்பதைப் போன்ற அடையாளங்களையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர் அங்கே இல்லையே...

"தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: ... சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; ... உயிர்த்தெழுந்தார்; ... சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்... மத். 28:5–7"

அவருடைய காயங்கள் ஆற்றப்பட்டது, நமக்கு தன்னுடைய நீதியின் வெண்வஸ்திரத்தை தரிப்பித்திருக்கிறார். அதனால் இனிமேலும் கருப்பு உடையில் அழுதுகொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது, அதைக் கேட்டு விசுவாசித்து இயேசுவை ஏற்றுக்கொள்ளாத ஒவ்வொருவரும் இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்! அப்: 2:23

சாதுரிய ஞானத்துடன் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதால், அங்கே கிறிஸ்துவின் சிலுவை வீணாகிப்போகிறது, மக்கள் மனம் திரும்பாமல் போகிறார்கள். வெகு ஜனங்களுக்கு புரியும்படி எளிமையாகச் சொல்லுவோம். 1 கொரி. 1:17

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நடுமையமாக வைத்து, சத்தியத்தை பிரசங்கித்து, சுற்றி வளைத்து ஆத்துமாக்களை வசப்படுத்த வேண்டும். சிலுவையில் அறையப்படாத வேறு இயேசுவை பிரசங்கிப்பவர்களும் இருக்கிறார்கள் என்று வேதம் எச்சரிக்கிறது. 2 கொரி. 11:14

மயக்க மருந்தைத் தூவி, மயங்க வைத்துக் கடத்திக் கொண்டு போய்விடுகிறார்கள்! கலா. 3:1

இன்னும் நியாயப்பிரமாணத்தையே பிரசங்கித்துக் கொண்டு, கிறிஸ்மஸ் ஆராதனைக்கு வருகிறவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு, **Happy christmas, Merry christmas** சொல்லுகிறோமே! நாமும் கூட ஆண்டாண்டுக் காலமாக கிறிஸ்மசின் அர்த்தம் புரியாமல்தான் **Star** மாட்டி, **Cake** வெட்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். லூக். 2:11. என்ற வசனம் அச்சிடப்பட்ட வாழ்த்து அட்டைகளை நூற்றுக்கணக்கில் அனுப்பியிருக்கிறேன். பெற்றுக் கொண்டவர்களுக்கு "ஏன் பிறந்திருக்கிறார்" என்று புரிந்திருக்குமா? ஆண்டவருக்குத்தான் தெரியும்! சரி போகட்டும், எனக்காவது தெரிந்ததா, அதுவும் இல்லை!

"கிறிஸ்து வந்திராவிட்டால் ...?" என்ற தலைப்பில் வெளியான ஒரு வித்தியாசமான கிறிஸ்மஸ் செய்தியை படித்துவிட்டு, அந்த யோசனையுடனேயே தூங்கிப் போனார் ஒரு தேவ ஊழியர். இரவில்... சொப்பனத்தில் ... இயேசு வரவில்லை, வீடு முழுவதும் தேடினார், கிறிஸ்மஸ் அலங்காரங்கள் எல்லாம் மாயமாக மறைந்திருந்தன! வெளியே வந்தார், வானளாவ உயர்ந்து நின்ற ஆலய கோபுரங்களில் சிலுவையைக் காணவில்லை, இடிதாங்கிகள் மட்டுமே இருந்தன!

யாரோ கதவைத் தட்டினார்கள், திறந்தார். ஒரு சிறுமி அழுதபடி, மரணப்படுக்கையில் இருக்கும் தன்னுடைய தாயாரை வந்து பார்க்கும்படி அழைத்தாள்! அவளுக்காக சில ஆறுதலான வசனங்களை வாசிக்கலாம் என்று வேதத்தைத் திறந்தார். அது மல்கியாவுடன் முடிந்திருந்தது, "இயேசுவின் தழும்புகளால் குணமானீர்கள்" என்ற உயிரடக்க வார்த்தைகள் உள்ள வசனத்தைக் காணோம். இரட்சகர் இயேசுவைப் பற்றி எழுதப்பட்டிருந்த மத்தேயு – வெளி. புத்தகங்கள் யாவும்

மறைந்துவிட்டிருந்தன. ஒன்றும் செய்ய முடியாமல் சிறுபிள்ளையோடு தானும் சேர்ந்து அழுதார்! சில நாட்களுக்குப் பிறகு அந்தப் பிள்ளையின் தாயார் இறந்து, அடக்க ஆராதனைக்குப் போயிருந்தார். வேதத்தைத் திறந்தார், உயிர்த்தெழுதலைப் பற்றிய செய்திகள் எதுவும் அதில் இல்லை. மண்ணுக்கு மண்ணும், சாம்பலுக்கு ... என்ற நித்திய பிரிவுபசாரமாக முடிக்க வேண்டிதாயிருந்தது... எந்தவொரு நம்பிக்கையுமில்லாமல் முடிக்க வேண்டியதாயிருந்தது! தூக்கத்தினூடேயே அழுதார். திடீரென்று விழித்துக் கொண்டார், அருகில் இருந்து வந்த ஆலய ஆராதனையின் பாடலைக் கேட்டு, கர்த்தரை ஆனந்தமாகத் துதித்தார். வேகமாக வெளியே வந்தார், கோபுரத்தையும், ஆலய மணியையும், சிலுவையையும் பார்த்த பிறகுதான் அவருக்கு போன உயிர் திரும்ப வந்தது!

யூதர்களின் தேவாலயங்களுக்கு ஒப்புமையான பாரம்பரிய தேவாலயங்களைப் பார்க்கும்போது, நான் பல காரியங்களை, பல கோணங்களில் சிந்திப்பதுண்டு. அடையாளச்சின்னமாக **(Resemblance)** சிலுவை, சிலுவையிலறையப்பட்ட இயேசு அடையாளங்களை வைக்கிறார்கள். சிலுவையைப் பற்றிய சத்தியம் தெரிந்து அதை வைத்திருந்தார்களானால் அனுமதிக்கலாம். ஆனால் சிலுவையைப் பற்றிய சத்தியத்தை அறியாமல் வைத்திருப்பவர்கள், தங்களுடைய பாரம்பரியத்தினால் தேவனுடைய கிருபையை அவமாக்கி, அதை (சிலுவையை) விக்கிரகமாக்கி விடுகிறார்கள். பிரச்சனையில்லையென்றால், பரவாயில்லை இருக்கட்டும்... பிரச்சனையில்லை. பிரச்சனை வருகிறதென்றால், அகற்றிவிடுவோம், இல்லாவிட்டால் பிரச்சனை!

சிலுவையைப் பற்றிய சத்தியம் தெரிந்தவர்களுக்குத்தான் **Resemblance** தேவையில்லையே!

ஒன்றாம் வகுப்பில் படிக்கும் போது நம் ஒண்ணாங்கிளாஸ் வாத்தியார் பாடப்புத்தகத்தி–ருந்த இலை படத்தை சுட்டிக் காட்டி "இலை" என்று நமக்கு கற்றுக் கொடுத்தார். (நியாயப்பிரமாண வாத்தியார் போல) நாம் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் எடுத்து, அபிஷேகம் பெற்று சத்தியத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் போதும் – மேற்படிப்பு, பட்டப்படிப்பு, இன்ஜினியரிங் படிப்பு – இன்னும் இலையை காட்டித்தான் சொல்லிக் கொடுக்க வேண்டுமானால்! பேசாமல் நீங்கள் ஒண்ணாங்கிளாசுடன் படிப்பை முடித்துக் கொள்ளுவது உத்தமம்!

தேவனை அறியாத புற மதஸ்தர்களுக்கு இது ஒரு விதத்தில் பிரயோஜனமாக இருப்பதென்னவோ உண்மை! சிலுவையைப் பற்றிய சத்தியம்தான் புதிய ஏற்பாட்டின் ஆணிவேர், விதையே அங்கே இருந்துதான் வளர்கிறது. புதிய பிரமாணமே சிலுவையின் பின்னணியத்தில் இருந்துதான் துளிர்த்து வளர்கிறது. அதனால் சிலுவை அடையாளத்தை ஒரேயடியாக விக்கிரகம் என்று விமரிசனம் செய்து **(criticize)** போர்க்கொடி உயர்த்தாமலிருப்பது நல்லது.

இந்த விஷயத்தை ஊதிப் பெரிதாக்கினோமானால் பலூன் வெடித்துவிடும். இப்படிப்பட்ட வெளியரங்கமான காரணங்களையே நாம் உற்று நோக்கிக் குறை சொல்லிக்கொண்டே இருப்போமானால், சமயம் பார்த்து சாத்தான் பின் வாசல் வழியாக நைசாக நம் எல்லைகளுக்குள் பிரவேசித்துவிடுவான். ஒட்டகத்தை விட்டுவிட்டு, கொசுவை வடி கட்டின வசனம் தெரியுமா?

"குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள். மத். 23:24"

இந்த அவலம் நமக்கு நேரிடாதபடி எச்சரிக்கையாக இருப்போம். இல்லாவிட்டால் சத்தியத்தைவிட்டு பின்வாங்கும் அபாயம் நம்மைச் சூழ்ந்து கொள்ளும். தொடர்ச்சியாகச் சிலுவைச் சத்தியங்களை உபதேசிப்போம். ஆவிக்குரிய குழந்தைகள் இந்த உலகத்தில் பிறந்தவண்ணம் இருக்கின்றனர், அவர்கள் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக இலைகளை பறித்து வைப்போம்! அவர்கள் புரிந்துக் கொண்டபின் அகற்றிவிடுவோம், அல்லது அவர்களாகவே அகற்றி விடுவார்கள்!

## கர்த்தருக்கு வழியை எப்படி ஆயத்தம் பண்ணுவது?:

நம்மை ஆசீர்வதிக்க ஏதாவது ஒரு வழியைத் தேடுகிறார் தேவன்; அந்த வழியை நாம் ஆயத்தம் பண்ணிக் கொடுக்கும்போது அவர் அதன் வழியாக கடந்து வருகிறார். தேவனுடைய ஆசீர்வாதமெல்லாம் இலவசமானது, நமது விசுவாசத்தின் அடிப்படையில் அதை பெற்றுக் கொள்ளலாம் என்று பார்த்தோம். காயீனும், ஆபேலும் தேவனுக்குக் காணிக்கை கொடுப்பதற்கு

முன்னதாகவே தேவன் மனுக்குலத்தை ஆசீர்வதித்துவிட்டார். அந்த ஆசீர்வாதப் பெட்டகத்தை திறந்து, ஆசீர்வாதத்தை வெளியே எடுப்பதற்காக அவர்களுடைய காணிக்கை, சாவியைப் போல செயல்பட்டது!

நம் விசுவாசத்தை நிரூபணம் செய்யத்தான் விதைக்கிறோம், விசுவாசக் கிரியையான விதைப்பின் மூலமாக தேவன் தொடர்ச்சியாக நம்மை ஆசீர்வதிக்க வழியை போட்டுக் கொண்டே போகிறோம், தேவனும் அதில் நடந்து, நடந்து வந்து கொண்டேயிருக்கிறார்!

ஆபேல் விசுவாசத்துடன் விதைத்தான் என்பதை அவனுடைய காணிக்கையே நிரூபணம் செய்கிறது. மந்தையின் தலையீற்றுகளைத் தனியாகப் பிரித்தான். அவற்றை அப்படியே காணிக்கையாகக் கொடுக்காமல், அதில் புஷ்டியாக இருந்தவைகளைத் தனியே பிரித்து காணிக்கையாகக் கொண்டு வருகிறான். அதாவது தன்னுடைய மந்தையில் இருந்த **Best** ஆன சிலவற்றையும் கொடுத்து விட்டான். அவன் தேவனை விசுவாசித்ததால் இதைச் செய்ய முடிந்தது. இப்படித்தான் கொடுக்க வேண்டும் என்று இக்கால பிரமாணம் கட்டாயப்படுத்தவில்லை, ஆனால் விசுவாசம் **Best** ஆனதைக் கொடுக்கும்! காரணம் கொடுப்பதால் குறைய மாட்டோம் என்பது விசுவாசத்திற்குத் தெரியும்! பூமியும் அதன் நிறைவும் தேவனுடையது என்பதும் அதற்குத் தெரியும்! அப்பாவினுடைய சொத்து பிள்ளைக்குத்தானே என்ற சத்தியம் அதற்குப் புரியும்! பிறகு என்ன 99% கொடுக்கக்கூட தயக்கம் வராது, யோசிக்க மாட்டார்கள். இங்கே தேவனுடைய மகத்துவங்களையும், விசுவாசத்தையும் பற்றிச் சொல்லுகிறேன், உங்களுக்கு இயன்றதைக் கொடுங்கள், காயீனைப் போலத்தான் செய்ய வேண்டும் என்று ஆட்டைப் பிடிக்க போக வேண்டாம்!

## விதைக்கிறவனுக்கு விதையைத் தருகிறவர்:

மனமிருந்தால் மார்க்கமுண்டு **(where is a will there is a way)** என்ற மொழியின் படி விதைக்கிறவனுக்குத் தேவனே விதையையும் தருகிறார். அதாவது விதைக்கிற விதையின் விளைச்சலில் இருந்து விதைகள் உண்டாகும். சுகமளிக்கும் ஊழியம் செய்கிறவனுக்கு சுகம் உண்டாகும், காரணம் தன்னுடைய வரத்தை விதைக்கிறான். அப்படியே விசுவாசத்தைப் போதிக்கிறவனுக்கு விசுவாசம் பெருகும், உபதேசிக்கிறவனுக்கு ஞானம் வளரும். எதை விதைக்கிறோமோ, அது நமக்குள் பெருகிக்கொண்டேயிருக்கும் மீண்டும் விதைப்பதற்கேதுவாக.

## கோதுமை விதை:

அதுதான் வசனங்கள், அதை எடுத்து இருதயத்தில் விதைக்க வேண்டும். வளர ஆரம்பிக்கும், மெதுவாக மனதை மாற்றும், விசுவாசத்தை வளர்க்கும். **Water tank** நிரம்பியதும் **overflow** ஆவதைப்போல விசுவாசம் வார்த்தைகளால், வாயின் வழியாக வெளியேறும். அதைத்தான் விசுவாச அறிக்கை என்கிறோம். ஆனால் நம்முடைய நல்வாழ்க்கைக்கு ஏற்றதான நல்ல விசுவாச வசனங்களை அறிக்கை செய்ய வேண்டும். அதைவிட்டு விட்டு, கனியிருக்க காயைப் பறித்தக் கதையாக ... என் வாழ்க்கையே போச்சி, நான் செத்தேன், நான் எங்கேயாவது ஓடிப் போகப் போகிறேன், நீ உருப்பட மாட்டே, எருமை மாடு, நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு, உதவாக்கரை ... இப்படி அறிக்கை செய்தால்? ஒரு சாக்கு தைக்கும் கோணி ஊசியில் தடிமனான நூலைக் கோர்த்து, வாயை இறுக தைத்து விடுங்கள்! அவிசுவாச அறிக்கையால் உங்கள் வாழ்க்கையே ஊஞ்சலில் ஆடுவதை விட வாயைச் சுற்றி சில ஓட்டைகள் இருப்பதால் ஒன்றும் கெட்டுப்போகப் போவதில்லை.

விசுவாசமாக பேச வரவில்லையானால் வாயை மூடிக்கொண்டுப் பேசாமல் இருங்கள் என்று சொல்ல வருகிறோம்! அது சரி, தோல்வியையே பேசி பேசி, அந்த விதைகள் உள்வாங்கி முளைத்து விட்டது, இதற்கு மாற்று மருந்து கிடையாதா? இருக்கிறது. “இயேசுவின் நாமத்தினால் இதுவரை பேசிய தோல்வியின் வார்த்தை விதைகளை, விளைச்சலை பிடுங்கி எறிகிறேன், சுட்டெரிக்கிறேன்” என்று அறிக்கை செய்வோம். பிறகு பாருங்கள், உங்கள் வார்த்தைகளின் வல்லமையை!

வசனத்திலிருந்து கிரகிக்கப்பட்ட சத்தியங்களை இயேசுவின் நாமத்தில் அறிக்கை செய்யும் போது, அது இலக்கை அடைந்து செய்ய வேண்டியதைச் செய்துவிட்டுத்தான் திரும்பும். வசனத்தைப் பாருங்கள்.

“கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, ... சங். 103:20”

தேவ தூதர்கள் தேவனுடைய கட்டளைகளின்படி இயங்குகிறவர்கள். அதாவது இந்த வசனத்தின்படி செய்யுங்கள் என்று தேவன் கட்டளைகொடுத்ததும் அவர்கள் அந்த வசனத்தின்படி காரியத்தைச் செய்து முடிக்கிறார்கள். நாம் வாக்குத்தத்தங்களை அறிக்கை செய்யும்போது, அதை கேட்கும் தேவன் அந்த வாக்குத்தத்தத்தின்படி நமக்குச் செய்யும்படி தூதர்களுக்கு ஆணையிடுகிறார். தேவ தூதர்களும் கீழ்ப்படிந்து அதைச் செய்து முடிக்கிறார்கள். உதாரணமாக “என் ஆத்துமா வாழ்வது போல, எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பேன்” என்ற வசனத்தை அறிக்கை செய்கிறோம். அதைக் கேட்கும் தேவன் அந்த வசனத்தின்படி செய்ய தூதர்களுக்கு கட்டளையிடுகிறார். தூதர்களும் அந்த வசனத்தின்படி வாழ்வதற்கு தேவையான சகல ஆசீர்வாதங்களையும் –ஆரோக்கியம், பரிசுத்தம், விடுதலை, பணம், ஞானம், சந்தோஷம், சமாதானம், பாதுகாப்பு – நம் எல்லைகளுக்குள்ளாகக் கொண்டு வருகின்றனர்.

## பாடுகள் அவசியமா?:

பவுலின் பாடுகளைச் சுட்டிக்காட்டி, அவையும் தேவைதான் என்று வாதாடுபவர்கள் இருந்துகொண்டேயிருக்கிறார்கள். அவற்றைத் தேடி எடுத்து பிரசங்கம் பண்ணி அதை நிலை நாட்ட முயற்சிக்கிறார்கள். (2 கொரி. 11:24–27) (அடி, சேதம், மோசங்கள், பிரயாசம், வருத்தம், கண்விழிப்பு, பசி, தாகம், குளிர், நிர்வாணம்). இப்படிப்பட்ட வசனங்களை கண்டுபிடித்து பிரசங்கிப்பவர்கள் எத்தனை பேர் இப்படிப்பட்ட பாடுகள் தங்களுக்கு வந்தால் நிலைத்திருப்பார்கள்? நானும் கூட அறியாமையின் நாட்களில் தேவன் நம்மை வியாதிகள், தரித்திரத்தின் மூலம்தான் சரிசெய்கிறார், திருத்துகிறார், சிட்சிக்கிறார், புடமிடுகிறார், என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் தேவன் மடக்கிப் பிடித்தார் (**Corner** பண்ணி)!

“இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன். நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் ... ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு, உபா. 30:15,19”

(நீ நாசமாகப் போவதற்காக மரணத்தைத் தெரிந்து கொள் – என்று சாத்தானும் ஆலோசனை கொடுக்கிறான், அது வேதத்தில் இல்லை. ஆனால் “சாத்தான் வேதம் ஓதும் கதை” கேள்விப்பட்டிருப்பீர்கள், அதில் இந்த வாசகம் உண்டு!)

தேவன் இரண்டையும் நம் முன் வைக்கிறார், அதாவது வேதத்தில் எழுதி வைத்திருக்கிறார். பழைய, புதிய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களுக்கு நேரிட்ட உபத்திரவங்கள் எதையும் அவர் மறைக்கவில்லை. ஆனால் நாம் அவற்றை தெரிந்தெடுக்க வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. நாம் பிழைக்கும்படிக்கு ஜீவனைத் தெரிந்து கொள்ளச் சொல்லித்தான் ஆலோசனை தருகிறார். அவருடைய ஆலோசனையைத் தள்ளி, மரணத்தைத் தெரிந்து கொண்டு போய்ச் சேர்ந்தவர்கள் கோடானுகோடி, சாபத்தை தெரிந்து கொண்டு கூனல் முதுகோடும், வேதனைகளோடும், அய்யோ என்ற அலறல்களோடும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் லட்சாதிலட்சம். அறியாமையினால் வியாதியைத் தெரிந்து கொண்டவர்களில் நானும் ஒருத்தி.

நல்லதே உங்கள் கண்களுக்குப் படுவதில்லையே ஏன்? நான் 7ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவம்: விளையாடி விட்டு ஓடி வந்த என் தோழி ஒருத்தி பாட்டிலில் இருந்த மண்ணெண்ணையை எடுத்து வாயில் ஊற்றிக் கொண்டாள். நல்லவேளை ஒரு மடக்கு உள்ளே போவதற்குள் வெளியே துப்பி விட்டாள் என்றாலும், கொஞ்சம் உள்ளே போய்விட்டது! ஒரு நாள் முழுவதும் வயிற்று எரிச்சலினால் அவதிப்பட்டிருக்கிறாள். நல்லகாலம், அதுவே **Toilet acid** ஆக இருந்திருந்தால்?

வீட்டில் பழரசம் இருக்கும் போது யாராவது பினாயிலை குடிப்பார்களா? இரண்டும் வீட்டில்தான் இருக்கிறது என்பதற்காக இரண்டையும் குடிக்க முடியுமா? அல்லது குடிக்கத்தான் செய்வோமா? அதில் மட்டும் நல்லதைத் தெரிவு செய்கிறீர்களே! எங்கள் வீட்டின் முன்னால்

வேப்பமரம் இருக்கிறது, கொத்துக்கொத்தாக காய்த்திருந்தாலும் நான் அதைப் பறிப்பதில்லை, ஒதுக்குப்புறமாக இருக்கும் சீத்தா மரத்தைத்தான் தேடிப்போகிறேன். ஒரே ஒரு சீத்தாப்பழம் இருந்தாலும் அதுதான் எனக்கு பிரியம், பத்திரமாக பறித்து அரிசிக்குள் பழுக்க வைக்கிறேன்! இதில் இருக்கும் அறிவு நம் ஆவிக்குரிய மனிதனின் பாதையில் இல்லையே ஏன்? மனிதர்களை சோகத்திலேயே சுகம் காண சாத்தான் பழக்கப்படுத்திவிட்டான். சாத்தானின் கொடிய வஞ்சகத்தில் சிக்கிக்கொண்ட தேவபிள்ளைகள் சாபத்தைத் தெரிந்துகொண்டு, ஆசீர்வாதங்களைச் சாத்தானிடம் காவு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நின்று நிதானியுங்கள். “நில், கவனி, செல்” என்ற அறிவிப்பு பலகை உங்கள் எதிரில் ... இருவழிப் பாதை உங்கள் முன்னே ... ஒன்றில் மரணம், இன்னொன்றில் ஜீவன், தேவன் ஜீவனைத் தெரிந்து கொள் என்று ஆலோசனையும் கொடுத்து விட்டார். முடிவு செய்ய வேண்டியது நீங்கள்தான்!

ஆரம்பத்தில் தேவனுக்காக உற்சாகமாக ஓடி ஊழியம் செய்த தேவபிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டபின் பண ஆசையில் விழுந்து கிடப்பதைப் பார்த்துதான் அநேக தேவபிள்ளைகள் பணத்தைப்பார்த்தால் பயந்து ஓடுகிறார்கள். முதலில் அப்பாவை பிடித்துக் கொள்ளுவோம், ஜெப வேளையில் நம் அப்பாவை **miss** பண்ணாமல் இருப்போம். “நீர் மாத்ரம்போதும், வேறேதும் வேண்டாம் எனக்கு!” என்று பாடி நம் அப்பாவை கைவசப்படுத்துவோம். அவருக்குள்தான் எல்லாம் இருக்கிறதே, பிறகு “வேறு எதுவும்” தனியாக நமக்கு என்னத்துக்கு?

ஒரு மனிதனுக்கு, ஒரு தேவதூதன் ஒரு வாத்தை பரிசாகக் கொடுத்துச் சென்றான். அவன் அதை வீட்டில் கொண்டு வைத்து ஒரு கூட்டுக்குள் வைத்தான். அடுத்தநாள் காலையில் அது ஒரு தங்க முட்டையை போட்டிருந்தது. இப்படியே தினமும் ஒரு பொன் முட்டை போட்டது. 10 முட்டைகள் போட்டவுடன் அந்த மனிதனின் மனதில் பேராசை விதை விழுந்தது. அது வளர்ந்தது, வாத்தை ஒரேயடியாக காலி பண்ணிவிட்டால் வயிற்றில் ஏராளமான முட்டை இருக்குமே, கோடீஸ்வரனாகிவிடலாமே, என்ற ஆசையில் அதை கொன்று வயிற்றைக் கிழித்துப் பார்த்தான். அந்தோ பரிதாபம், அங்கே அவன் ஆசை புஸ்வானமாய் புகைந்து போய்க்கொண்டிருந்தது. பேராசை அவசரப்படுகிறது, பேராசையின் தலைமூத்த பிள்ளைதான் பணஆசை. அவன் பொறுமையாக இருந்திருப்பானானால் அந்த வாத்து சில ஆண்டுகள் உயிரோடு இருந்து குறைந்தபட்சம் 500 முட்டைகளாவது போட்டிருக்கும். அவசரப்புத்தி அவனுடைய ஆசீர்வாதத்தை காவு வாங்கியது. முட்டை முக்கியமல்ல, வாத்துதான் முக்கியம் என்ற சத்தியத்தைப் புரிந்துக்கொண்டால் பண ஆசையால் நம்மை இழுக்க முடியாது.

“கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணியானர்;... லூக்.4:18”

தரித்திரருக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கச்சொல்லித்தானே வசனம் இருக்கிறது, செழிப்பை பிரசங்கிக்கிறீர்களே, அது மட்டும் ஒரு மனிதனை பரலோகத்தில் சேர்க்குமா?

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகள் பரலோக இராஜ்ஜியத்திற்குள்ளேதான் இருக்கிறார்கள்.

“நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது; அதுமுதல் தேவனுடைய இராஜ்ஜியம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள். லூக்.16:16”

அதாவது சுவிசேஷத்தைக் கேட்டு அதை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படும்போது, நாம் பரலோக இராஜ்ஜியத்திற்குள்தான் பிரவேசிக்கிறோம், இயேசுவுடன் உன்னதங்களில் உட்காரவைக்கப்பட்டிருக்கிறோம். நாம் இந்த உலகத்துக்குரியவர்களல்ல, நம்மை பிரித்தார், தூக்கினார், கன்மலையின்மேல் நிறுத்தினார். உலகம் நம்மை பின்னுக்கு இழுக்கும், நாமோ அதை உதைத்து பின்னுக்குத் தள்ளி வலுக்கட்டாயமாக (பலவந்தமாக) பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசித்திருக்கிறோம்.

“அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்து: தரித்திரராகிய நீங்கள்

பாக்கியவான்கள்; தேவனுடைய இராஜ்யம் உங்களுடையது. லூக்.6:20"

தேவனுடைய இராஜ்ஜியத்தில் என்னவுண்டோ அதைத்தான் தரித்திரருக்குப் பிரசங்கிக்கிறோம். அவர்களிடம் இல்லாததைப் பிரசங்கிக்கிறோம், ஏனென்றால் அதை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக. இரட்சிப்பு இல்லாதவர்களிடத்தில் இரட்சிப்பை பிரசங்கித்து, அதை அவர்கள் பெற்றுக் கொள்ள வழிவகைகள் செய்வதைப் போல, அவர்களிடம் இல்லாத எல்லா பரலோக ஆசீர்வாதங்களையும் பிரசங்கிக்கலாம்.

பசியோடு இருப்பவன் முன் இலைபோட்டு, பக்கத்தில் தண்ணீரை மட்டும் வைத்துவிட்டுப் போனால் என்ன பிரயோஜனம்? அவன் பசி தீருமா? கொஞ்ச நேரம் உட்கார்ந்து பார்த்துவிட்டு எழும்பிப் போய்விடுவான், உங்களைத் திட்டியபடி! இலையில் சாதம், சாம்பார், அவியல், பொறியல், கூட்டு, அப்பளம், ஊறுகாய் வையுங்கள். ரசம், மோர் வேண்டுமா என்று கேளுங்கள், பாயாசம், ஐஸ்கிரீம் பரிமாறுங்கள். மகிழ்ந்து, உங்களை வாயார வாழ்த்தி, மனதார புகழ்ந்து செல்லுவான்.

## இருளில் பிரகாசிக்கும் இருள்!(?):

இருளில் இருக்கும் ஜனங்களின் எல்லைகளுக்குள் வெளிச்சம் தரவே நாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம். (மத்.4:15) ஆனால் சுவிசேஷ ஊழியம் செய்யும் தேவபிள்ளைகளிடமே இருள் இருக்குமானால்? அவர்களால் எப்படி பிரகாசிக்க முடியும்? இருள் இருட்டில் பிரகாசிக்குமா? காரிருளையல்லவா உண்டாக்கி விடும்? நம் கண்களே இன்னும் சத்தியத்தைக் காணாதபடி குருடாக இருக்குமானால், அல்லது மங்கலாக இருக்குமானால்?

தேவ பிள்ளைகளில் வெகுசிலரே சத்தியத்தை அறிந்து கொண்டு, சூரியனைப் போன்ற மத்தியான வெளிச்ச கண்பார்வையை ஆவியில் பெற்றிருக்கிறார்கள். சிலருடைய பார்வை பிற்பகல் நான்கு மணியளவில் இருப்பதைப் போலவும், சிலருக்கு அந்தி சாயும் ஏழு மணியைப் போல மங்கலாகவும், பலருக்கு விளக்கு எதுவும் பிரகாசிக்காத பத்தாம் மணி வேளை இருளாகவும் இருக்கிறது. சத்தியத்தை எந்த அளவுக்கு, எத்தனை சதவீதம் அறிந்திருக்கிறார்களோ, அந்த அளவுக்குத்தான் அவர்களின் கண்களின் வெளிச்சம் இருக்கும். அந்த அளவுக்குத்தக்கதாகத்தான் அவர்கள் பாவிகளை இரட்சிப்புக்குள் வழி நடத்த முடியும். தன்னிடமிருப்பதைதான் கொடுக்க முடியும், சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்! வெறும் கையால் முழம் போட்டால்?

சுவிசேஷகர்கள் மக்களுக்கு துண்டுப்பிரதிகள், யோவான் சுவிசேஷம், புதிய ஏற்பாடு, முழுவதுமான வேதாகமம் என்று கொடுக்கிறார்கள். கொடுக்கும்போது முதலில் புதிய ஏற்பாட்டின் நிருபங்களை வாசிக்கச் சொல்லுங்கள் (அப்போஸ்தலர் – யூதா). பிறகு அதன் வெளிச்சத்தில் சுவிசேஷ ஆகமங்களையும், அடுத்ததாக வெளிப்படுத்தின விசேஷத்தையும் படிக்கச் சொல்லி ஆலோசனை கொடுங்கள். அவர்கள் வாசிப்பதை ஜெபத்துடன் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். பிறகு பழைய ஏற்பாட்டை புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் வாசிக்க வேண்டும். முதலில் தீர்க்கதரிசன ஆகமங்களையும், பிறகு மற்ற ஆகமங்களையும் வாசிக்க வேண்டும். இப்படிச் செய்யும் போது இரட்சிக்கப்படும் இளம் விசுவாசியின் கையில் முதலிலே புதிய திராட்சை ரசத்தை கொடுக்கிறோம். புதிய வஸ்திரத்தை உடுத்தி, சரியான வழியில் நிறுத்தும் பாக்கியத்தை பெறுகிறோம். அவனும் விசுவாசப்பிரமாணத்தின்படி சீராக வளர்ந்து, ஆசீர்வாதங்களைப் பெற்று உலகத்தை சுதந்தரிப்பான்.

ஒரு தொழிலதிபர் மிகப்பெரிய நஷ்டத்தை சந்தித்து, அதிலிருந்து எப்படி மீள்வது என்று வழி தெரியாமல் தவித்தார். கடன் கொடுத்தவர்களும், பொருட்களை சப்ளை செய்தவர்களும் நெருக்கினார்கள். மனமுடைந்த தொழிலதிபர் கன்னத்தில் கை வைத்தபடி ஒரு பார்க் பெஞ்சில் அமர்ந்து சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

அந்த வழியாக வந்த ஒரு வயதான மனிதர், அவரை நெருங்கி, "நீங்க ஏதோ பிரச்சனையில் இருக்கிறீர்கள், சொன்னீர்களானால் என்னால் உங்களுக்கு உதவ முடியுமென்று நினைக்கிறேன்"என்றார். தொழிலதிபரும் உடனே தன்னுடைய பிரச்சனைளை மளமளவென்றுக் கொட்டித் தீர்த்தார். உடனே அந்த முதியவர் தொழிலதிபரின் பெயரைக் கேட்டு, செக் ஒன்றை எழுதிக் கொடுத்தார். -

“இந்தப் பணத்தை வைத்து பிசினஸ் செய்யுங்கள், ஒரு வருடம் கழித்து இதே இடத்தில் வந்து என்னை சந்தித்து, பணத்தை திருப்பிக் கொடுங்கள் போதும்” என்றார்.

50,000 டாலருக்கான காசோலை, அதில் உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரான ஜான்.டி. ராக்பெல்லரின் கையெழுத்து இருந்தது! தலைகால் புரியாமல் சந்தோஷப்பட்டார், தன் கஷ்டமெல்லாம் தீர்ந்தது என்று நிம்மதி பெருமூச்சு விட்டார். உடனடியாக காசோலையை பணமாக மாற்றாமல், அதை பணப்பாதுகாப்புக்காக வைத்துக்கொண்டு, புதிய உத்வேகத்துடன் தொழிலில் ஈடுபட்டார். சில மாதங்களுக்குள்ளேயே கடன் பிரச்சனையில் இருந்து மீண்டார், பணம் கொட்டத் தொடங்கியது. சரியாக ஒரு வருடத்திற்குப் பிறகு செக்குடன் அதே பூங்காவுக்கு வந்தார். சொன்னபடி அந்த முதியவரும் வந்தார். தொழிலதிபர் சந்தோஷத்துடன் காசோலையை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

திடீரென்று ஒரு நர்ஸ் ஓடி வந்தாள், முதியவரைப் பிடித்துக் கொண்டாள். “இவர் மனநலமருத்துவமனையில் இருந்து தப்பி வந்து, மக்களிடம் ராக்பெல்லர் என்று சொல்லி காசோலை கொடுத்துக் கொண்டுத் திரிகிறார், நீங்களும் ஏமாந்தீங்களா?” என்று சொல்லி, சிரித்தபடி முதியவரை இழுத்துச் சென்றாள்.

தொழிலதிபர் அதிர்ந்தார்! காசோலை இருக்கும் தைரியத்தில் அதிக ரிஸ்க் எடுத்து பல கோடி ரூபாய்களை சம்பாதித்திருந்தார். அந்த செல்லாத காசோலையின் மீது வைத்த நம்பிக்கையே தனது வெற்றிக்கு காரணம் என்பதை உணர்ந்தார். வெற்றி நம்மிடமிருக்கும் பணத்தை நம்பிக்கையாகக் கொண்டதல்ல, தன்னம்பிக்கை, தைரியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என்பதை உணர்ந்து இன்னும் சிறப்பாக வேலையை ஆரம்பித்தார்.

கிரியைகளால் தேவஜனங்களை நீதிமான்களாக மாற்ற திராணியில்லாத நியாயப்பிரமாணத்தை இந்த செல்லாத காசோலைக்கு ஒப்பீடாகக் கொள்ளுவோம். அந்த நியாயப்பிரமாணக் காலத்தில் வாழ்ந்து நம் முற்பிதாக்களின் விசுவாசச் சாதனைகள் நம்மை பிரமிக்க வைக்கின்றன! பரிபூரணப்படாத அந்த நியாயப்பிரமாணத்தின்படி அவர்கள் தங்களாலான கிரியைகளை நடப்பித்தார்கள். அவர்களின் சாதனைப் பட்டியலை எபிரேயர் 11 அதிகாரம் முழுவதிலுமாக நாம் வாசிக்கலாம்.

நம் அன்பு அப்பா, உலகின் சாபத்தை மாற்றி, நம்மை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதற்காக தன் ஒரே மகனுடன் பரலோகத்திலிருந்த அனைத்து ஆசீர்வாதத்தையும் வழித்து ஒரு **Kit Bag**ல் வைத்து நமக்கு அனுப்பியிருக்கிறார். இந்த அளவிற்கான அபரிமிதமான பணத்திற்கான செக்கை இந்த உலகத்தில் இதுவரை யாரும் கொடுத்திருக்க முடியாது. புதிய, பூரண, விசுவாசப் பிரமாணத்தின்படி எளிய விசுவாசத்தால் இந்த செல்லக்கூடிய செக்கை நாம் உடனுக்குடன் தேவைக்கேற்ப பணமாகவோ, தேவைக்கேற்ப வேறு காரியமாகவோ மாற்றிக்கொள்ள முடியும்!

கிரியை அல்ல, கிருபை சாதித்தது! இயேசு சாதித்தார், நம்மையும் சாதனையாளர்களாக மாற்றினார்.

கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும், நம் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம், கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் சாதிக்க முடியாத எல்லாவற்றிலும் இயேசு சாதித்தார். (அப் .13:39) அவரை விசுவாசிக்கிற நாமும் கூட நம் பொருளாதாரத்தில் சாதனைபடைக்கலாம் – வாக்குத்தத்த ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கலாம். உலகம் தருகிற ஐசுவரியத்தையல்ல, பரலோகத்திலிருந்து வாக்குத்தத்தங்களின் வழியாக வருகிற ஆசீர்வாதத்தை – பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். உலகத்தவர்கள் பணஆசையால் தங்களை உருவக்குத்திக் காயப்படுத்திக்கொள்வதைப் போன்ற ஆபத்துக்கள் இதில் இல்லை. வாக்குத்தத்தத்த ஆசீர்வாதத்தின் வழியாக வருகிற பணத்திற்கும், பணஆசைக்கும் சம்பந்தமில்லை, **Please try to understand!** தேவன் தரும் எந்த காரியமும் – பணம் உட்பட – அது உலகம் தருகிறதைப் போல இருப்பதில்லை. அதனால் தொடை நடுங்கியாக இருக்காதீர்கள், பயந்து ஓடாதீர்கள்.

இது நம் அப்பா நமக்கு தந்த பூமி, இந்தப் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அவரே சொல்லியிருக்கிறார்.

அதாவது நாம் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும். கத்தியின்றி, இரத்தமின்றி எளிய விசுவாச போர்முறையின் மூலமாக! எனக்கென்று எதுவுமில்ல, இப்பூமி சொந்தமில்ல என்பதைப் போன்ற பாடல் வரிகளைக் கொஞ்சம் மாற்றி எனக்குத்தான் எல்லாம், இப்பூமி எனக்குத்தான் சொந்தம், சாத்தானுக்குத்தான் எதுவுமில்ல, என்று பாடுவோம்!

“வெள்ளிப் பொட்டுகளுள்ள பொன் ஆபரணங்களை உனக்குப் பண்ணுவோம். உன். 1:11”

ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவர், அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது. சங். 45:13

என் நேசர் ... பூங்கொத்து. லீலிபுஷ்பம், ரோஜாப்பூ! (உன். 1:14, 2:1)

முளைப்பதற்கான ஆற்றலை தேவன் விதைக்குள்ளாகவே வைத்திருப்பதைப் போலவே, நாம் செழிப்பதற்கான ஆற்றலை நம் விசுவாசத்திற்குள்ளாக வைத்திருக்கிறார். அந்த விசுவாசத்தை இயேசு நமக்குள்ளே விதையாக போட்டிருக்கிறார். விதை தன் ஆற்றலை வெளிப்படுத்தும்போது, விசுவாசம் அதைக் காணும் பொருளாக மாற்றுகிறது.

விதை ... கிராமப்புறங்களில் அதிகம் காணப்படும் புளியமரம் எல்லோருக்கும் தெரியும். ஒரு புளியவிதையை எடுத்துக்கொள்வோம். அதற்குள் ஒரு புளியமரம் மறைந்திருக்கிறது என்பதை எல்லோரும் விசுவாசிக்கிறோம். ஏனென்றால் அதை புதைத்து, முளைக்க வைத்து காத்திருக்கும்போது, பத்தாண்டுகளுக்குப் பிறகு நாம் நம்பிய காரியம் நிஜமாக நம் கண்ணெதிரில்! இது நாம் பார்த்துப் பழகிய காரியம்.

நம் விசுவாசமும் இப்படித்தான் வேலை செய்கிறது. நாம் ஜெபிக்கும்போதே பெற்றுக் கொண்டோம் என்ற நம்புகிறது. பெற்றுக் கொள்வோம் என்றல்ல, ஒரு வேளை பெற்றுக் கொள்ளலாம் என்றல்ல, பெற்றுக்கொண்டோம் என்று நம்புவதே விசுவாசம். இந்த விசுவாசத்தைக் அடிப்படையாகக் கொண்டுதான் புதியபிரமாணத்தையே தேவன் நிர்மாணித்துள்ளார்.

விசுவாசம் காத்திருக்கும், அவசரப்படாது. ஏனென்றால் தான் நம்பியிருக்கும் தேவன் சர்வவல்லவர், அண்டசராசரத்தைவிடப் பெரியவர் என்பது அதற்குத் தெரியும். நம் தேவன் எவ்வளவு பெரியவர் என்பது தெரிந்தால் நமக்கு அவிசுவாசம் வராது. அதற்காகத்தான் அவரை அறிகிற அறிவில் வளரவேண்டும் என்கிறது வேதம். அவரை எப்படி அறிவது? வசனங்கள்மூலமாகத்தான். விசுவாசம் வசனத்தினால் வரும் என்று வேதம் சொல்லுகிறதே!

வேதத்தை நிறைய நிறைய வாசிப்போம்; பிரகாசமுள்ள மனக்கண்களை ஜெபித்து பெற்றுக் கொண்டு. நம் இருதயம் விசுவாசத்தை சேகரித்துக் கொள்ளும். பிறகு அந்த விசுவாசத்தால் உலகத்தையே ஜெயிக்கலாம். யோசுவா அப்படித்தானே ஜெயித்தான்? அவன் பூமியின் சுழற்சியை நிறுத்திக்காட்டினான் என்றால் பூமியை ஜெயித்தான் என்றுதானே அர்த்தம்?

விசுவாசத்தை நாம் வாய்விட்டு அறிக்கை செய்வதின் மூலம் நாம் விசுவாசத்தை பழக்கப்படுத்துகிறோம், அதாவது கற்றுக் கொள்கிறோம், அதாவது விசுவாசத்தில் பழகுகிறோம். நான் தொடக்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தக் காலத்தில் ... காலையில் வகுப்பறைக்குள் வந்ததும் முதலில் ஆசிரியர் வாய்ப்பாடு **(formula)** சொல்லச்சொல்லுவார். அதாவது **1 x 2 = 2, 2 x 2 = 4, 3 x 2 = 6, 4 x 2 = 8, ...** இப்படியே போய்க்கொண்டே இருக்கும். தினமும் காலையில் வகுப்பில் நுழைந்ததும் தானாகவே, மூளை இதைச் தன்னிச்சையாக (அனிச்சை செயலாக) நிறைவேற்றி முடித்துவிடும். எனக்கு எரிச்சலாக இருக்கும், கிறுக்குத்தனமாகத் தோன்றும். ஏன் ஒரு முறை சொன்னால் போதாதா? ஒரு நாளைக்குச் சொன்னால் போதாதா? என்று நினைப்பேன். ஆனால் நான் நினைத்தது தவறு என்பதைக் காலப்போக்கில் அறிந்து கொண்டேன்.

நமக்கு கற்றுக் கொடுக்கப்பட்டக் காரியங்களை, வாய்விட்டு திரும்பத் திரும்பச் சொல்லும்போது, நம் மூளை ஞாபகசக்தியை கற்றுக் கொள்கிறது. தொடர்ந்து நாம் கற்றுக் கொள்ளும் காரியங்களை உள்வாங்கும் சக்தியை அது பெற்றுக் கொள்கிறது. முட்டாள் தனமாகத்

தோன்றினாலும் உண்மையில் நம் மூளையை பயிற்றுவிக்கவே ஆசிரியர் இதைச் செய்திருக்கிறார் என்பது புரியும்.

இதைப் போலவே நம் விசுவாசத்தை பயிற்றுவிக்க திருவசனத்தில் பழக்கம் வேண்டும், (எபி. 5:13) அதாவது வசனத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லி, அறிக்கை செய்ய வேண்டும். சத்தமாக நம் காதில் எதிரொலித்து திரும்பும் அளவுக்குச் சொல்ல வேண்டும்.

“நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். ரோம.10:10”

இந்த வசனத்தில் இரட்சிப்பு என்பது விடுதலையைக் குறிப்பிடுகிறது. அந்த விசுவாசத்தை நாம் சொல்லும்போது அது விடுதலை பெற்று வெளியே வருகிறது, தன் வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறது!

இயேசுவின் தழும்புகளால் சுகமானேன் என்ற வசனத்தை வாசித்ததும், இருதயத்திற்குள் விசுவாசம் வருகிறது. நம் விசுவாசம் அந்த வசனத்திற்குள் புதைகிறது. அந்த வசனத்தை அடிக்கடி அறிக்கை செய்யும்போது, புதைக்கப்பட்ட அந்த விசுவாச விதை வசனத்தின் சத்தை உறிஞ்சி வளர்கிறது, விருத்தியடைகிறது. பிறகென்ன நமக்கு தேவையானதை அதிலிருந்து பறித்துக் கொள்கிறோம், புளியமரத்திலிருந்து புளியை பறித்துக் கொள்வதைப் போல.

பாதாளத்தின் வாசல் என்னை மேற்கொள்ளாது என்று அறிக்கை செய்யும்போது, விதை நாம் அறிக்கையிட்ட வார்த்தைகளுக்குள் விழுந்து வளர்கிறது. உலகத்தில் உள்ள கெட்ட, மோசமான காரியங்கள் எல்லாம் பாதாளத்திலிருந்து சாத்தான் மூலமாக புறப்பட்டு வருகிறது. சிறியதும் பெரியதுமான 1,00,000 பிரச்சனைகள் இந்த உலகத்தில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். நாம் இந்த வசனத்தை அறிக்கை செய்யும்போது, அத்தனை பிரச்சனைகளும் நம் எல்லைகளுக்குள் வராமல் நம் விசுவாசம் அவற்றைத் தடுத்து நிறுத்துகிறது. காரணம் அந்த விசுவாசத்திற்குக் காரணகர்த்தர் இயேசு என்பதால்.

இதே வசனத்தை மாற்றியும் சொல்லலாம், பரலோகத்தின் வாசல்கள் என்னை மேற்கொள்ளும் என்று. அப்படி அறிக்கை செய்யும்போது சிறியதும் பெரியதுமான 1,00,000 நன்மையான ஆசீர்வாதங்களை அதே விசுவாசம் நம் எல்லைகளுக்குள் கொண்டு வருகிறது! உச்சிதமான வசனம், பிடித்துக் கொள்ளுங்கள்!

வசனம் விசுவாசமாக உருமாறுகிறது, விசுவாசம் காணும் பொருளாக உருமாறுகிறது.

பெருமையினால் பிரதான தேவதூதன் லூசிஃபர் தேவனையே இழந்தான், பிசாசாக மாறினான். தனக்கென்று ஒரு கூட்டத்தாரைச் சேர்க்க வேண்டுமென்பதற்காக நம்மையும் தேவனை விட்டுப் பிரித்தான். அவனுடைய முதல் முயற்சியே வெற்றியில் முடிந்தது. நன்மை தீமை அறியத்தக்க கனியை தேவன் ஏன் புசிக்க வேண்டாம் என்று சொல்ல வேண்டும்? புசிக்கக்கூடாது என்றால் அதை தோட்டத்துக்குள்ளேயே வைத்திருக்கக்கூடாதே!

நன்மை எது, தீமை எது என்பதைக் கண்டிப்பாக மனிதன் அறிந்திருக்க வேண்டும், அதுதான் தேவ சித்தம். எது நல்லது, எது கெட்டது என்று தெரியாமலேயே போனாலும் ஆபத்தாச்சே? அதனால் மனிதன் சாப்பிட வேண்டும் என்பதற்காகத்தான் அந்த மரத்தை தோட்டத்திற்குள் வைத்தார் என்று அறியலாம். பிறகு ஏன் புசிக்க வேண்டாமென்று சொன்னார்?

நான் சிறுபிள்ளையாய் இருந்தபோது, பென்சில் சீவுவதற்காக பிளேடைக் கையில் எடுத்தேன். அப்பா வேகமாக அதை என் கையிலிருந்து வாங்கிவிட்டு, “பிளேடை எடுக்கக்கூடாது” என்று சொல்லி இன்னும் சற்று உயரத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். நான் யோசித்தேன், “பிளேடு வீட்டுக்குள்ளேதான் இருக்கிறது, எடுக்கக்கூடாது என்று சொன்னால் என்ன அர்த்தம்? எடுக்கக்கூடாதுன்னா குப்பையில் போட வேண்டியதுதானே” என்று நினைத்தபடி ஸ்டூலை இழுத்துப் போட்டு ஏறி பிளேடை எடுத்து பென்சிலைச் சீவினேன்.

ஷேவிங் பிளேடு கையைப் பதம் பார்த்தது! கையில் இரத்தம் வழிந்தது. வேகமாக வந்த அப்பா “இதற்குத்தான் பிளேடைத் தொட வேண்டாம்னு சொன்னேன்.” என்றுத் திட்டியபடி தண்ணீர் நனைத்த வெள்ளைத் துணியால் காயத்தில் கட்டுப் போட்டார்கள். கையோடு மொத்த பிளேடையும்

எடுத்துக் கொண்டு உள்ளே போய்விட்டார்கள். பிறகு பிளேடு எங்கே இருக்கிறது என்று என்னால் கண்டே பிடிக்க முடியவில்லை!

இங்கே நடந்தது என்ன? "பிளேடையே தொடக்கூடாது" என்று அப்பா சொல்லவில்லை. "உனக்கு 4 வயசுதானே ஆகிறது, பிளேடை எடுத்து பென்சிலை சரியான விதத்தில் சீவ உனக்கு தெரியாது, இன்னும் கொஞ்சம் காலம் போகட்டும் பிறகு சீவலாம்" என்று சொல்லாமல் சொன்னதை நான் தவறாக அர்த்தப்படுத்திக் கொண்டதால் வந்த விளைவு. 5, 6 வயதில் நானாகவே பென்சில் சீவக் கற்றுக் கொண்டேன்.

ஏவாள் சாத்தானின் பேச்சைக் கேட்டாள், ஆனால் அதன்படி செய்யாமல் இருந்திருந்தாளானால் நலமாயிருந்திருக்கும். நிதானமாக காலம் வரும்போது தேவனே அந்த நன்மைதீமை அறியத்தக்க கனியை புசிக்கக் கொடுத்திருப்பார். உலகத்தையும் சாபம் ஆட்கொள்ளாமல் இருந்திருக்கும். அவசரப்பட்டதால் விழுந்த சாப விதை ... அதிலிருந்து உருவான பாவ விதை ... அதனால் உருவான வியாதி, வறுமை ... சுமார் 6,500 வருஷங்களாக மனிதர்கள் அதன் விளைச்சலை அறுத்து ... அதையே புசித்து ... (என்ன செய்வது இருப்பதைத்தானே சாப்பிட முடியும்?).

சாபத்தைத் தடுக்க, உலகத்தை மீட்க இயேசு மட்டும் வராதிருந்திருப்பாரானால் ... உலகத்தில் சுடுகாடுகளையும், ஆந்தைகளின் அலறல்களையும் தவிர வேறு எதைக் கேட்டிருக்க முடியும்?

அந்தப்படியே ஆதாமும் ஏவாளும் பொறுமையாயிருந்து, தேவன் அனுமதித்தபிறகு கனியைப் புசித்திருப்பார்களானால்?

உலகத்திற்கு சாபம் வந்திருக்காது.

நோவாவின் நாட்களின் வெள்ளம் வந்திருக்காது, பூமியும் 23 டிகிரியில் சாய்ந்து சுற்றாமல் நேராகவே இருந்திருக்கும், பருவ நிலையும் சீராக இருந்திருக்கும். எரிக்கும் வெயிலும், கொல்லும் குளிரும் இருக்காது.

பாவங்கள் தலை விரித்தாடியிருக்காது. அதனால் வந்த வியாதிகளை என்ன வியாதி என்று கண்டுபிடிக்க முடியாமல் டாக்டர்கள் அல்லாட வேண்டியதிருந்திருக்காது.

பசி, பட்டினியால் மனிதர்கள் ரோட்டோரம் சாக வேண்டியதாயிருந்திருக்காது. உணவு உற்பத்திக்காக அரசாங்கம் புதிய திட்டங்கள் தீட்ட, விவசாயிகளின் வியர்வை ஆறாக ஓட, அரிசியின் விலை உயர, ரேஷன் கடையில் கியூ (queue) மைல் கணக்கில் நீண்டிருக்காது ...

வேலையில்லா திண்டாட்டம் இருக்காது, வன்முறைகள் இருக்காது, மனித வெடிகுண்டுகள் வெடிக்காது.

மிருக வதை இருக்காது, மனிதர்கள் பழவர்க்கங்களை மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்திருப்பார்கள்.

ஜெயில் இருக்காது, பூமி இரத்தப் பழிக்குத் தப்பியிருக்கும், கள்ளிச் செடி தோன்றியிருக்காது, கம்பளிப்பூச்சிகள் உருவாகியிருக்காது.

புவி வெப்பமயமாதல் (Global Warming) நடுக்கம் விஞ்ஞானிகளுக்கு இருந்திருக்காது. செவ்வாய் கிரகத்தில் மனிதன் வசிக்க முடியுமா என்று விண்கலங்களை அனுப்பி போட்டோ எடுக்க வேண்டியதிருந்திருக்காது.

பராமரிப்பார் இல்லாமல் தோல் வியாதினால் தாக்கப்பட்டு, உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஒரு தெரு நாயைப் பார்த்ததும் நான் நினைத்தேன்; "இயேசுவே நீர் உலகத்தின் சாபத்தை சிலுவையில் மாற்றினீர், அதனால் இனிமேல் இப்படிப்பட்ட வேதனையான காரியங்களை நான் பார்க்கக்கூடாதென்று"

உலகளவிலான தேவ பிள்ளைகள் ஒரு சேர சேர்ந்து விசுவாசிப்போம், அறிக்கையிடுவோம், தேவனே இயேசுவே நீர் சாபத்தை நீக்கினீர் என்று! உலகமே பரலோகமாக மாற்றப்படும்.

விசுவாசிக்கத் திராணியில்லாததினால், எதை விசுவாசிப்பது என்று தெரியாததினால்,

ஆளுக்கொன்றை விசுவாசிப்பதினால் ... அந்த விசுவாசங்களினால் தங்களுடைய ரூபத்தை காணும் பொருளாக மாற்ற முடியாமல் போகிறது. இந்தப் பிரச்சனைக்கு என்ன செய்யலாம்?

தொடர்ச்சியாக வேதம் வாசிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டை வாசிக்கும்போது (அப். – யூதா) பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக ஜெபித்து துவங்க வேண்டும். பிரகாசமுள்ள மனக்கண்களை பச்சை விளக்காக – **(green light)** வைத்துக்கொள்வோம்.

அந்த வெளிச்சத்தில் (**green** கண்ணாடியை எடுத்து கண்ணில் மாட்டிக்கொண்டு) மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் வாசிக்க வேண்டும். ஏனென்றால் இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த காலத்திலும் நியாயப்பிரமாணம் உலகத்தில் இருந்தது. அவர் சிலுவையில் மரித்து எழுந்த பிறகுதான் அது அகற்றப்பட்டது. அதனால் முக்காட்டை விலக்கும் என்று ஜெபித்து வாசிக்க வேண்டும்.

பிறகு வெளிப்படுத்தல் சுவிசேஷம் வாசிக்க வேண்டும்.

அடுத்ததாக பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன ஆகமங்களை (ஏசாயா – மல்கியா) வாசிக்க வேண்டும். நியாயப்பிரமாணம் உலகத்தில் இருந்ததால் –இதை சிவப்பு விளக்கிற்கு – **red light** - க்கு ஒப்பீடாக வைத்துக் கொள்வோம். பிரகாசமில்லாத பழைய கண்களால் – சிவப்பு கண்ணாடியால் – இதை வாசித்தால் முக்காடு விலகாது, நியாயப்பிரமாணக் கண்ணோட்டத்திலேயே இவற்றை வாசித்து, தவறாகப் புரிந்துக் கொள்ளுவோம். அதனால் பச்சைக் கண்ணாடியில் – அதாவது புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டை வாசிக்க வேண்டும்.

அடுத்ததாக ஆதியாகமத்திலிருந்து உன்னதப்பாட்டு வரையிலும் வாசிக்கலாம்.

புதிய ஏற்பாட்டின், புதிய உடன்படிக்கைச் சத்தியங்களை இயேசுகிறிஸ்துவின் சிலுவையடிவாரத்திலிருந்து போதிப்பவர்களின் பிரசங்கங்களைக் கேட்கலாம், புத்தகங்கள் வாசிக்கலாம், சி.டிக்கள், **(C.D.)** மின்னணு புத்தகங்கள் **(e-Books)** வேத விளக்க நூல்கள், **Bible studies, Care cells, ...** ஏதாவது ஒன்றை முயற்சிக்க வேண்டும். சத்தியத்தை அறிய வேண்டும் என்ற வாஞ்சை முதலில் வந்தாலே போதும், அந்த வாஞ்சை கதவைத் தட்டும், வழி திறக்கும்.

(உ.ம்): ஒரு காலகட்டத்தில் திரைப்படங்களில் காண்பிக்கப்பட்டு வந்த ஒரு வகையான தொழில்நுட்பம் **(Technology)** பற்றிப் பார்ப்போம். திரையில் நிழலை உண்டாக்கும் பொருள் திரைக்கும், பச்சை சிவப்பு ஆக இரண்டு நிற விளக்குகளுக்கும் இடையே வைக்கப்படுகிறது. இதிலிருந்து ஒன்றன் மீது ஒன்றாக ஓரளவு இணைந்த இரண்டு வர்ண நிழல்கள் கிடைக்கின்றன. சிவப்பும் பச்சையுமான கண்ணாடிகளாலான மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு இவற்றைப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு உண்டாக்கப்படும் **3–D** காட்சி மிக பிரமிப்பூட்டக்கூடியது. பிரமாண்டமான சிலந்தி பூச்சி உங்களை நோக்கி ஊர்ந்து வருகிறது; உங்களையறியாமல் அலறுகிறீர்கள்!

இக்காலங்களில் இப்படிப்பட்ட **3–D effect** சினிமாக்கள் மிகச் சாதாரணம். **(My dear Kutty Satan)**

ப – பச்சைக் கண்ணாடி

சி – சிவப்புக் கண்ணாடி




**P 1, Q 1** சிலந்தி இருக்கும் இடம் திரைக்குப் பின்னாலிருக்கும் சிலந்தியை **Q** லிருந்து **P** க்கு மாற்றினால் பார்ப்பவனுக்கு அது **Q 1** லிருந்து **P 1** க்கு ஊர்ந்து வருவதுபோல் தோன்றுகிறது. திரைக்குப் பின்னாலுள்ள பொருளை விளக்கிற்கு அருகாமையில் நகர்த்தும்போது தரையில் விழும் நிழல் பெரிதாகிறது. பொருள் – சிலந்தி உண்மையில் தரையிலிருந்து எதிர்திசையில் விளக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் பார்ப்பவன் சிலந்தி திரையிலிருந்து தன்னைநோக்கி வருவதாக நினைக்கிறான்.

இவ்விதமாகவே பழைய ஏற்பாட்டில் காணப்படும் புதிய உடன்படிக்கையின் மறைபொருள்களை, தீர்க்கதரிசனங்களை கண்டுபிடிக்க முடியும். பச்சைக் கண்ணாடிக்கு ஒப்புவமையான பிரகாசமுள்ள மனக்கண்களை ஜெபித்துப் பெற்றுக் கொண்டு, சிவப்பு கண்ணாடியணிந்து எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டை வாசிக்க வேண்டும். அதையும் இதையும் எழுதியவர் ஒரே பரிசுத்தாவியானவரே. அதனால் உண்மையான கருப்பொருள் **3-D effect** போல் நமக்கு பிடிபடும்.

தேவன் பட்சபாதமுள்ளவரல்ல, எல்லோருக்குமே அவர் அப்பாதான், அதனால் எல்லா தேவ பிள்ளைகளுக்குமே இரகசியங்களை வெளிப்படுத்துவார். முயற்சியை ஒருங்கிணைப்போம், **Start** பண்ணுவோம்!

வெளிப்படுத்தப்படுபவற்றை எழுதி வைப்போம், தொடர்ச்சியானதை ஆவியானவர் நடத்துவார்.

பிரகாசமுள்ள மனக்கண்களைப் பெற்றுக் கொள்ள தேவன் உதவி செய்வாராக.

விதைகள் இன்னும் வரும் ...